# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28+4

சுடர் 32 | கதிர் 28 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 09, சனிக்கிழமை 24.12.2016


## யாழ்.நகரில் அதிகாலை வெடியோசை

யாழ்ப்பாணம், டிசெ. 24
யாழ்.நகரில் இன்று அதிகாலை ஒரு மணியளவில் வெடிகள் கொளுத்தப்பட்டன.
நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொலை வழக்கு தொடர்பான தீர்ப்பு இன்று அதிகாலை >> 25

## வடக்கு பட்ஜெட் நேற்று ஏகமனதாக நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.24
வடக்கு மாகாண சபையின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுதிட்டம் உறுப்பினர்கள் அனைவரினதும் ஏகமனதான அங்கீகாரத்துடன் >> 23ஆ

## கார்த்திகைப் பூக்களால் நிறைந்துள்ள கச்சதீவு



யாழ்ப்பாணம், டிசெ. 24
கச்சதீவுப் பிரதேசம் முழுவதும் கார்த்திகைப் பூக்கள் மலர்ந்துள்ளன. அந்தத் தீவுக்கு அழகு சேர்க்கும் வகையில் அவை காணப்படுகின்றன. அவற்றைத் தமிழகப் பக்தர்கள் கிளைகளுடன் பிடுங்கிச் சென்றனர்.
கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. >> 25

## பொருத்து வீடு பற்றி பொய் கூறுகிறார்கள்

### பயனாளியின் 6 லட்சம் குறித்து மீள்குடியேற்ற அமைச்சு விளக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 24
முன்னிர்மாணிக்கப்பட்ட வீட்டுத் திட்டத்தைப் பெற்றுக்கொள்ளும்பயனாளி 6 லட்சம் ரூபா செலுத்தத்தேவையில்லை என்று மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார் என, அவரது >> 25

## ரவிராஜ் கொலை வழக்கு

# சந்தேக நபர்கள் சகலரும் விடுதலை



### கொழும்பு மேல்நீதிமன்றம் இன்று அதிகாலை தீர்ப்பு

கொழும்பு, டிசெம்பர் 24
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான நடராஜா ரவிராஜ் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த சகல சந்தேக நபர்களும் குற்றமற்றவர்களென அறிவிக்கப்பட்டு மேல் நீதிமன்றத்தால் இன்று அதிகாலை விடுதலை செய்யப்பட்டனர்.
ஜூரிகள் சபையின் ஏகமனதான முடிவின் பிரகாரமே குறித்த தீர்ப்பை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மணிலால் வைத்தியதிலக்க அறிவித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை தொடர்பான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மணிலால் வைத்தியதிலக்கவின் நேரடி கண்காணிப்பின்கீழ் எழுவரடங்கிய சிறப்பு ஜூரிகள் சபையின் முன்னால் நேற்று விசாரணைக்கு >> 28

## கச்சதீவு அந்தோனியார் ஆலயம் திறந்து வைப்பு



யாழ். டிசெ. 24
77 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயம் நேற்றுக் காலை 9 மணிக்குத் திறந்து வைக் கப்பட்டது.
கச்சதீவில் புனித அந்தோனியார் >> 25

## மாகாணத்தின் அதிகாரங்களை எடுத்துவிடாது கொழும்பு அரசு

### முதலமைச்சர்களிடம் பிரதமர் உறுதி

கொழும்பு, டிசெம்பர் 24
பிவிருத்திச் சிறப்பு ஏற்பாடுகள் சட்டவரைவின் ஊடாக மாகாண சபைகளின் அதிகாரங்கள் கொழும்பு அரசுக்கு எடுத்துக்கொள்ளப்படாது என்று மாகாண முதலமைச்சர்களிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.
மாகாண முதலமைச்சர்களை அலரி மாளிகையில் நேற்று அவசரமாகச் சந்தித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. அதில் தென், மேல், >> 25

## கச்சதீவு திருவிழாவின் நாள்களை நீடியுங்கள்

### யாழ். ஆயர் ஜஸ்ரின் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், டிசெ. 24
கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவுக்கான நாள்களை நீடிக்கவேண்டும். வந்தோம் சென்றோம் என்று இருக்கக் >> 25

## கடற்படைத் தளபதிக்கு பதவி நீடிப்பு வேண்டும்

### அதற்கு வடக்கு ஆளுநர் அழுத்தம் வழங்கவேண்டும் என்கிறார் யாழ்.ஆயர்

யாழ்ப்பாணம், டிசெ. 24
இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவிந்திர விஜயகுணவர்த்தனவின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு, வடக்கு மாகாண ஆளுநர், ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். >> 04

## அபிவிருத்திச் சட்டத்துக்கு உடன்படாது வடமாகாணம்

### நேற்று அறிவித்தார் முதலமைச்சர்

யாழ்ப்பாணம், டிசெ. 24
அபிவிருத்திச் சிறப்பு ஏற்பாடுகள் சட்டவரைவுக்கு வடக்கு மாகாண சபை ஒருபோதும் உடன்படாது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் நேற்றைய அமர்வில் அறிவித்தார்.
அதிகாரப்பகிர்வின் ஊடாக நாங்கள் தீர்மானங்கள் எடுக்கவேண்டும் என்பதைக் கொழும்பு அரசும் ஏற்றுக்கொண்டு எங்களுடன் பயணிக்க ஏதுவாக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.
இது குறித்த தீர்மானம் நேற்றுச் சபையில் >> 25

## கருணாநிதி நலம் பெற கச்சதீவுக்கு வந்தேன்

### தமிழக மீனவர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 24
தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி நலம் பெறவேண்டும் என்று வேண்டுவதற்காகவே, கச்சதீவு அந்தோனியாரிடம் நான் வந்தேன். இவ்வாறு தமிழகத்தின் இராமேஸ்வரம் மாவட்ட திபுர்திஸ் சிங்கார >> 04

## ஈழத் தமிழரின் பாசத்துக்கு நன்றி

### கச்சதீவில் கூறினார் தமிழகக் குரு



யாழ்ப்பாணம், டிசெ. 24
தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு இலங்கைத் தமிழ் மக் கள் கொடுத்த மரியாதைக்கு நன்றி தெரிவிக்கின்றோம். தமிழகத்தின் உணர்வுகளை. >> 04

## கிழக்குக்கடலில் நேற்று விமானப் பாகம் மீட்பு

### எந்த நாட்டுக்குரியதென அடையாளம் காணப்படவில்லை



மட்டக்களப்பு, டிசெ. 24
மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுதாவளைக் கடற்கரையிலிருந்து நேற்றுக் காலை விமானத்தின் பாகம் ஒன்றை மீட்டுள்ளதாகக் களு வாஞ்சிக்குடி >> 25

## ஆளுநரின் அதிகாரம் பற்றி யாரும் எதையும் பேசுங்கள்

### அது உங்கள் உரிமை என்கிறார் குரே

கொழும்பு, டிசெ. 24
ஆளுநரின் அதிகாரக் குறைப்புத் தொடர்பில் யாரும் எதனையும் பேசலாம். அது அவர்களுடைய ஜனநாயக உரிமை என்று வடக்கு மாகாண >> 25

## 35 பேர் மீது எவ்.சி.ஐ.டி. வழக்கு

கொழும்பு, டிசெ. 24
கடந்த ஒரு வருட காலமாகப் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு (எவ்.சி.ஐ.டி) நடத்திய விசாரணைகளின் அடிப்படையில் பிரபல அரசியல்வாதிகள் சிலர் உட்பட >> 25

## சிறுப்பிட்டியில் 25 பவுண் நகை கொள்ளை

### நேற்று அதிகாலை கொள்ளையர் கைவரிசை

யாழ்ப்பாணம், டிசெ. 24
யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி தெற்கில் வீடு புகுந்த கொள்ளையர்கள், குடும்பத் தலைவரைத் தாக்கி 25 பவுண் நகைகள், 50 ஆயிரம் ரூபா பணம் என்பனவற்றைக் கொள்ளையிட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தலையில் படுகாயமடைந்த குடும்பத் >> 04

## மீனுக்கும் மீனவருக்கும் எல்லைகள் கிடையாது

### இலங்கைக் கடலில் தொழில் செய்ய அனுமதி கோரும் தமிழக மீனவர்

யாழ்ப்பாணம், டிசெ. 24
மீனுக்கும் மீனவருக்கும் எல்லை கிடையாது. கடந்த காலங்களில் புரியாணி சாப்பிட்ட நாம், இப்போது ஒருவேளை கஞ்சிக்கே கஷ்டப்படுகின்றோம். எங்கள் கடலில் மீன் வளமே இல்லை. எம்மை இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்கவேண்டும். இவ்வாறு தமிழக மீனவர்கள் நேற்றுத் >> 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

கோப் குழு அறிக்கைக்கு

# சட்டமா அதிபரின் ஆலோசனையை கோரியது தவறல்ல

## பிரதமர் அலுவலகம் விளக்கம்

கொழும்பு, டிசெ. 24
பிணைமுறி அறிக்கை தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை கோரியமை தவறல்ல என்று பிரதமரின் அலுவலகம் விளக்கம் அளித்துள்ளது.
இத தொடர்பில் கோப் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்தெந்தி சபாநாயகருக்கு அனுப்பிய கடிதம் பற்றி பிரதமரின் அலுவலகம் விளக்கமளித்துள்ளது.
இந்த அறிக்கை ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டுள்ளதுடன், இதனூடாக கோப் அறிக்கை பற்றித் தவறான கருத் தொன்றை சமூகமயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமரின் அலுவலகம் கூறியுள்ளது.
மத்திய வங்கியின் பிணை முறிகள் தொடர்பான விவகாரத்தைப் பிரதமர் கையாண்ட விதம் பற்றி அதில் விவரிக்கப்பட்டுள்ளது. கோப் அறிக்கையைச் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்குமாறு பிரதமர் கேட்டுக் கொண்டதையும் அது தொடர்பான விவாதத்தை நடத்த இணங்கிய விதத்தையும் அது விவரித்துள்ளது.
இந்த நடைமுறை சார்ந்த எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரதமர் சபாநாயகரின் அதிகாரங்களைப் பயன்படுத்த முனைந்ததாகக் குற்றம் சாட்டாத சுனில் ஹந்துன்நெத்தி தற்போது அதுபற்றிய விவாதத்தை எழுப்ப முனைவதாகப் பிரதமரின் அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது. (த-4)

# வவுனியா வர்த்தகர்களை சந்தித்தார் நீதி அமைச்சர்

வவுனியா, டிசெ. 24
வவுனியாவுக்குப் பயணம் மேற்கொண்ட புத்தசாசன மற்றும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச அங்கு வவுனியா வர்த்தகர் சங்கத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.
நேற்று மதியம் தனியார் விருந்தினர் விடுதியில் வர்த்தகர் சங்கத் தலைவர் ரி. கே. இராசலிங்கம் தலைமையில் சந்திப்பு இடம்பெற்றது.
இந்தச் சந்திப்பில் வவுனியா வர்த்தர்கள் எதிர்கொள்ளும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஆராயப்பட்டு அமைச்சரால் சில விடயங்களுக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டதாக வர்த்தகர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.
இதேவேளை, வவுனியா பொகஸ்வாவே பகுதியில் அமைக்கப்பட்ட குடிதண்ணீர் சுத்திகரிக்கும் நிலையத்தையும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச நேற்று முற்பகல் திறந்து வைத்தார்.
நாமல்கமமே பகுதி விகாரைக்குச் சென்று விகாராதிபதியையும் அப்பகுதி மக்களையும் சந்தித்து அவர்களின் தேவைகளையும் கேட்டறிந்தார்.
பின்னர் கொக்குவெளி இராணுவக்குடியிருப்புப் பகுதியில் அமைக்கப்பட்ட நீர் சுத்திகரிக்கும் இயந்திரப் பகுதியையும் அவர் திறந்து வைத்தார்.
பின்னர் வவுனியா இறம்பைக்குளம் காளி கோவிலில் வழிபட்டார். வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான், வன்னி மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் கருணதாசா, வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். (த-4)

# இவ்வருடம் இதுவரை 17 பேர் சுட்டுக்கொலை

## தென் மாகாணத்தில் மட்டும்

கொழும்பு, டிசெ. 24
இந்தவருடம் இதுவரை தென் மாகாணத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 17 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.
இவற்றுள் 9 கொலைகள் அம்பலாங்கொட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளன. துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்ட 12 கொலை முயற்சிகள் பதிவாகியுள்ளன. ஆயுதமுனையில் ஐந்து கொள்ளைகள் நடந்துள்ளன.
கடந்த 5 ஆம் திகதி அம்பலாங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இடம்கொட பிரதேசத்தில் சிறு குழந்தை உட்பட மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய கொலையாளிகளைத் தவிர்ந்த ஏனைய சந்தேகநபர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது. (த-4)

# இடர்களில் உயிரிழந்தோருக்கு திங்களன்று இரு நிமிட அஞ்சலி

## யாழ். மாவட்டச் செயலர் அழைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 24
சுனாமி உள்ளிட்ட இடர்களின்போது இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகத் தேசிய பாதுகாப்பு தினமான நாளை மறுதினம் முற்பகல் 9.25 தொடக்கம் 9.27 வரையான இரண்டு நிமிடங்கள் அனைவரும் மௌன அஞ்சலி செலுத்துங்கள்.
இவ்வாறு யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கோரியுள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
2004ஆம் ஆண்டு ஆழிப் பேரலையினால் இலங்கை மற்றும் இந்து சமுத்திரக் கரையோரப் பகுதிகளில் பெரும் உயிரிழப்பு மற்றும் சொத்தழிவுகள் ஏற்பட்டன.
இதன் விளைவாக ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி தேசிய பாதுகாப்புத் தினமாக கடைப்பிடிக்கப்படவேண்டும் என 2006 ஆண்டு மே 31ஆம் திகதி அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டது. குறிப்பாக இடர்களின் போது இறந்தவர்களை நினைவு கூரும் அதேவேளை, எதிர்காலத்தில் இடர் பாதிப்புக்களைக் குறைத்தல், தணித்தல், தவிர்த்தல் போன்றவற்றைப் பலப்படுத்துவதற்கான முன்னாயத்த நடவடிக்கைகள், விழிப்புணர்வுகளை உருவாக்கும் சந்தர்ப்பமாகவும் இது அமையும்.
இந்த நினைவு கூரலானது கிராம, பிரதேச, மாவட்ட, தேசிய ரீதியில் ஓர் ஒருங்கிணைப்பை-ஒத்துழைப்பை இடர் ஆபத்து முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கு உள்வாங்குவதற்கான செயலாற்றுகையாகவும் உள்ளது-என்றார். (த-10)

# வீடமைப்பு, கல்வி, சுகாதாரம் வடக்கின் பிரதான அம்சங்கள்

## பிரகடனப்படுத்துமாறு கோருகிறார் வடக்கு மாகாண விவசாய அமைச்சர்

யாழ்ப்பாணம், டிசெ. 24
வடக்கு மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டின் பிரதான அம்சங்களாக வீடமைப்பு, கல்வி, சுகாதாரம் என்பன பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண சபை சுகாதர அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.
மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான சுகாதார அமைச்சின் வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
ஒரு பலமான சமூகத்தினால் மாத்திரமே ஒரு பலமான போராட்டத்தை முன்னெடுக்க முடியும் என்பதை நாம் அடிக்கடி மறந்து விடுகிறோம். எமது மக்களை ஒரு பலமான சமூகமாக வாழச் செய்யவேண்டுமாக இருந்தால் அபிவிருத்தி சார்ந்த விடயத்தில் நாம் பின்வரும் நிலைபெறு அபிவிருத்திக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பது சிறப்பானதாக இருக்கும்.
எமது மக்களின் உழைப்பே எமது பலம். இதுவே எமக்கான அபிவிருத்தியின் அடிப்படைக் கோட்பாடாக இருக்க வேண்டும். இன நலன்களும், அரசியல் நலன்களும் அபிவிருத்தியோடு இணைத்து நோக்கப்படலாகாது. எல்லா விதமான அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகளும், அவை மத்திய அரசினுடையதாயினும் சரி மாகாண அரசினுடையதாயினும் சரி வெளிப்படைத் தன்மையோடு எமது மக்களின் கருத்தறிந்து, அவர்களுடைய பங்குபற்றுதலோடு முன்னெடுக்கப்படவேண்டும்.
அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் எமது மக்கள் நலன் சார்ந்ததாகவும் பிரதேசத்துக்கு ஏற்புடையதாகவும் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். எமது உரிமைப் போராட்டத்துக்கும் எமது மக்களின் அபிவிருத்திக்கும் இடையிலான இடைத் தொடர்பு தெளிவாக வரையறுக்கப்படவேண்டும். வடக்கு மாகாண மக்களின் அபிவிருத்திக்கும், அரசியல் கட்சிகளுக்குமிடையிலான தொடர்பும், இனரீதியான அபிவிருத்தி என்ற கோட்பாடும் முற்றாகக் கைவிடப்படல் வேண்டும்.
மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாடு என்ற தொகுதியினுள் போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள், மறைமுகமாகப் பாதிக்கப்பட்டவர்கள், நேரடியாக போரில் ஈடுபட்டதன் காரணமாக, பாதிக்கப்பட்டவர்கள், சந்தேகத்தின் பேரால் பாதிக்கப்பட்டவர்கள், இராணுவ ஆக்கிரமிப்புகளை எதிர்கொள்வோர், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என எல்லோரும் உள்வாங்கப்பட்டு 'வடக்கு மக்களுக்கான அபிவிருத்தி' என்ற ஒரு தொனிப் பொருள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.
வடக்கு மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டின் பிரதான அம்சமாக வீடமைப்பு, கல்வி, சுகாதாரம் என்பன பிரகடனப் படுத்தப்பட வேண்டும். இவை சார்ந்து அனைத்து நடவடிக்கைகளும் ஒழுங்கமைக்கப்படவேண்டும்.
மேற்படி விடயங்களை ஒழுங்கமைக்கின்ற விதத்தில் உட்கட்டமைப்பு வசதிகள், போக்குவரத்து சேவைகள், வீதியமைப்பு, தொடர்பாடல் சேவைகள், நீர்விநியோகம், வடிகாலமைப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, போன்ற விடயங்கள் அமையவேண்டும்-என்றார். (த-4)

# ஜனவரி 12க்கு முன்னர் வரும் உயர்தர பெறுபேறு

ஜீ.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் ஜனவரி 12ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படவுள்ளது.
இது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஜயந்த புஷ்ப குமார தெரிவிக்கையில், ஜனவரி மாதம் முதலாம் திகதி பெறுபேறுகளை வெளியிட திட்டமிட்டிருந்தாலும் தொழில்நுட்ப பரீட்சை காரணமாகப் பெறுபேறுகளை வெளியிடும் நடவடிக்கை தாமதமடைந்துள்ளது- என்றார். (த-4)

# அமெரிக்க டொலரின் பெறுமதி உயர்வு

அமெரிக்க டொலரின் பெறுமதி 152 ரூபாவாக உயர்வடைந்துள்ளது.
இலங்கை மத்திய வங்கியின் புதிய அறிக்கையின் பிரகாரம் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 152 ரூபா 37சதம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 148 ரூபா 35 சதம் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (த-4)

# நூற்றுக்கணக்கான பயணிகளுடன் லிபிய விமானம் நேற்றுக் கடத்தல்

## மோல்டாவில் பலவந்தத் தரையிறக்கம்



லிபிய வான் பரப்பில் வைத்து விமானமொன்று நேற்றுக் கடத்தப்பட்டது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
இரு ஆயுததாரிகளின் மூலம் விமானம் கடத்தப்பட்டது என்றும் அவர்களில் ஒருவரிடம் கைக்குண்டும் வேறு சில ஆயுதங்களும் இருந்தன என்றும் கூறப்படுகிறது.
தெற்கு லிபியாவின் செபா என்ற இடத்தில் இருந்து லிபியாவின் தலைநகர் திரிப்போலிக்குப் புறப்பட்ட விமானமே அவ்வாறு கடத்தப்பட்டது. பின்னர் பலவந்தமாக அது மோல்டாவில் தரையிறக்கப்பட்டது. தமது நாட்டில் விமானம் பலவந்தமாகத் தரையிறக்கப்பட்டதை மோல்டா பிரதமர் உறுதி செய்தார்.
ஆயுததாரிகளின் நோக்கம் குறித்து நேற்று மாலைவரை எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை. இருப்பினும் தரையிறக்கப்பட்ட விமானத்தைச் சுற்றிப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. (ம-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு புதிய ஆலயத் திறப்பு விழா


கச்சதீவு புனித அந்தோனியார் பழைய ஆலயம்


பழைய ஆலயத்தில் வழிபாடு.


புதிய ஆலயத் திறப்பு விழாவுக்கு யாழ். ஆயர் வரவேற்பு


புதிய ஆலயத் திறப்பு


திரை நீக்கம்


திருப்பலி ஒப்புக் கொடுத்தல்


கௌரவிப்புக்கள்.........

## விபத்தில் சிக்கிய முதியவர் சிகிச்சை பயனின்றி உயிரிழப்பு

தென்மராட்சி டிசெ.24
விபத்தில் சிக்கி காயமடைந்த முதியவர் சிகிச்சை பயனின்றி ஒன்பது நாள்களின் பின்னர் உயிரிழந்தார்.
கடந்த 15ஆம் திகதி அதிகாலை நாவற்குளிமகாவித்தியாலயத்திற்கு அருகில் ஏ-32 வீதியில் வேகக் கட் டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் அந்த வழியே சென்ற சைக்கிளுடன் மோதியது.
மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற கோவிலாக்கண்டியைச் சேர்ந்த சற்குணநாதன் உமாசங்கர் (வயது-20) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையிலும் சைக்கிளில் சென்ற முதியவர் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் காயமடைந்த நிலையில் சேர்க்கப்பட்டனர்.
யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த முதியவர் சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார் என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் இளைஞரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-9)

## கிரேன் இயக்குநர்களாக இலங்கையில் பெண்கள்

### அறிமுகப்படுத்தவுள்ளது துறைமுக அதிகாரசபை

யாழ்ப்பாணம், டிசெ. 24
இலங்கையின் முதலாவது பெண், கிரண்டி கிரேன் இயக்குநர்களை வெகு விரைவில் துறைமுக அதிகாரசபை அறிமுகப்படுத்தும். இவ்வாறு துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
சாதரணமாக ஆண்களே கிரண்டி கிரேன்களை இயக்குகின்றார்கள். அந்த முறையை மாற்றியமைத்தோம். நாம் பெண்களுக்குப் பயிற்சிகளை வழங்கினோம். மார்ச் மாதம் 8ஆம் திகதி, பயிற்சி பெற்ற அனைத்துப் பெண்களும் கிரேன் இயக்குநர்களாக இலங்கை துறைமுக அதிகார சபையில் தங்களுடைய கடமைகளைப் பொறுப்பேற்பார்கள்.
கப்பல் துறையில் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் தொடர்பாக நான் அறிந்திருக்கவில்லை. சாதாரண தரப் பயிற்சிகளைப் பெற்ற ஒருவருக்குக் குறைந்த பட்சம் ஒரு லட்சத்தையோ, ஒரு இலட்சத்து 50 ஆயிரத் தையோ பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும். அதேபோல் கப்டன் ஒருவருக்கு 10 லட்சம் வரையிலான பணத்தை சம்பாதிக்கக் கூடியதாக இருக்கும். எங்களு டைய துறைமுக அதிகார சபையில் ரூபா 5-6 லட்சங்கள் வருமானம் ஈட்டுபவர்கள் உள்ளார்கள்.
அந்த நபர்களுடைய அர்ப்பணிப்பு மற்றும் பயிற்சியின் காரணமாகவே அந்தப் பணத்தைச் செலுத்துகின்றோம். கப்பல் துறையில் உள்ள தொழில் வாய்ப்புகளுக்கு உயரிய மதிப்பு காணப்படுகின்றது. உலகின் பிரதான கப்பல் பாதை எமது இந்தச் சிறிய நாட்டுக்கு அண்மையில் அமைந்துள்ளது. எங்கள் நாடு சிறந்த பூகோள மத்திய நிலையத்தில் அமைந்துள்ளமை அதிர்ஷ்டமாகும். கப்பல்துறை தொடர்பாக நாம் அறிந்து கொள்வது மிகவும் முக்கியமாகும்.
கொழும்பிலுள்ள பாடசாலைகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட இந்த அறிவை கிராமப்புறப் பாடசாலை மாணவர் களுக்கும் வழங்குவதே எங்களுடைய நோக்கமாகும் – என்றார். (த-5)

## அரிசித் தட்டுப்பாடு செயற்கையானது

கொழும்பு, டிசெ 24
அரிசிக்கான தட்டுப்பாடு செயற்கையானது என விவசாயப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரொஹான் விஜயக்கோன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் கூறுகையில், கடந்த இரண்டு போகங்களினதும்போது ஏழு மெற்றிக்தொன் நெல் விளைச்சல் காணப்பட்டது.
இந்த நெல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் வரை போதுமானதாகும். அரிசி வர்த்தகர்கள் அரிசியைப் பதுக்கி வைத்துக் கொண்டு செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளனர்.
இலங்கையில் தட்டுப்பாடு இன்றி அரிசியை நுகர்வதற்கு எட்டு இலட்சம் ஹெக்ரயரில் நெல் செய்கை செய்யவேண்டும் என்ற போதிலும், தற்பொது இரண்டரை லட்சம் ஹெக்ரேயரில் மட்டுமே நெல் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
உயர் தொழில்நுட்பம், கூடுதல் விளைச்சல் தரக் கூடிய நெல் விதைகளைப் பயிரிடுதல் போன்ற காரணிகளினால் அதிகளவு விளைச்சல் கிடைத்துள்ளது.
எவ்வாறான தடைகள் ஏற்படுத்தப்பட்டாலும் எதிர்வரும் 2017 ஜுன் மாதம் வரை தட் டுப்பாடு இன்றி அரிசி வழங்க முடியும்.
தொடர்ச்சியாக வறட்சி ஏற்பட்டால் மட்டும் நெற்செய்கைக்குப் பாதிப்பு ஏற்படும்– என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னீர் மீன்பிடியாளர்களின் வருமானம் வடக்கில் உயர்வு

## மாகாண மீன்பிடி அமைச்சர் பெருமிதம்

யாழ்ப்பாணம், டிசெ.24

2013 இல் 500 ரூபா முதல் 1000 ரூபா வரை இருந்த வடக்கு நன்னீர் மீன்பிடியாளர்களின் நாளாந்த வருமானம் இன்று 3ஆயிரம் ரூபா முதல் 5ஆயிரம் ரூபா வரை உயர்வடைந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் எம்மால் விடப்பட்ட பல மில்லியன் கணக்கான மீன் மற்றும் இறால் குஞ்சுகளே என வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையில் நேற்று இடம்பெற்ற, மாகாண மீன்பிடி அமைச்சு மீதான வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இன்று எமது நாட்டிலும் சரி உலகநாடுகளிலும் சரி நன்னீர் மீன்பிடி துரித கதியில் அபிவிருத்தி அடைந்து வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதனூடாக மக்களின் தலா வருமானம் அதிகரிப்பதோடு நாட்டில் தேசிய உற்பத்திக்கும் கணிசமான பங்களிப்பை இவர்கள் செய்து வருகின்றனர்.

2013ஆம் ஆண்டின் இறுதியில் நான் அமைச்சுப் பொறுப்பை ஏற்றபோது எமது மாகாணத்தில் நன்னீர் மீன்பிடியை நம்பியிருந்த பல ஆயிரக்கணக்கான குடும்பங்களின் நாளாந்த வருமானம் 500 ரூபா தொடக்கம் 1000 ரூபா வரையாகும். ஆனால் இன்று அவர்களின் நாளாந்த வருமானம் குறைந்தது 3 ஆயிரம் தொடக்கம் 5ஆயிரம் ரூபா வரை உயர்ந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் எம்மால் விடப்பட்ட பல மில்லியன் கணக்கான மீன் மற்றும் இறால் குஞ்சுகளுமேயாகும். எமது மாகாணத்தில் 32 நன்னீர் மீன்பிடிச் சங்கங்களும் அதற்கு பின்னால் 6ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களும் உள்ளன.

இன்று திலாப்பியா, கோல்டன், றோ போன்ற மீன்கள் ஒரு கிலோ 120 தொடக்கம் 150 ரூபாவாகவும் இறால் ஒரு கிலோ 1000 ரூபா தொடக்கம் 1200 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது. குறிப்பாக ஒரு கிலோ இறாலின் ஏற்றுமதிப் பெறுமதி 4ஆயிரம் ரூபாவில் இருந்து 5ஆயிரம் ரூபாவாகக் காணப்படுகின்றது. இவை எவையேனும் மிகைப்படுத்தப்பட்டுள்ளதா அல்லது உண்மைதானா? என்ற சந்தேகம் எமது உறுப்பினர்களுக்கு எழுமேயானால் தயவுசெய்து என்னோடு வாருங்கள். தெளிவுபடுத்தி உறுதிப்படுத்தத் தயாராகவுள்ளேன். இதுதவிர அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் கட்டுக்கரை, முத்தையன் கட்டு, வன்னேரிக்குளம் போன்ற பகுதிகளில் அடிப்படை வசதிகளுடன் கூடிய மீன் சந்தைக் கட்டடத்தொகுதிகள் பல மில்லியன் ரூபா செலவில் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. மீனவர்களுக்கு தேவையான வலை மற்றும் குல்லாக்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் வருடத்திலும் மேற்படி பயனுறுதி வாய்ந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கு 25 மில்லியன் ரூபா பயன்படுத்தப்படும் என்பதையும் தெரிவிக்கின்றேன்.

கடல் மீன்பிடி மாகாண சபைகளுக்கான விடயதானமாக இல்லாவிடினும் எமது வளத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம்மெல்லோருக்கும் உள்ளது.

இந்திய இழுவைப்படகுகள், தென்னிலங்கையில் இருந்து அளவுக்கதிகமான மீனவர்களின் வருகை மற்றும் அவர்களின் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறை, எமது மீனவர்களின் சட்ட முரணான மீன்பிடி முறை போன்ற காரணங்களினால் நாளுக்கு நாள் எமது வளம் அழிவடைந்து வருகின்றது. இந்த நிலை தொடருமானால் எமது எதிர்காலச் சந்ததியினர் கடல் வளத்திற்கு கையேந்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் காலம் வெகு தொலைவில் இல்லை. இதனால் வடக்கு மாகாண மீன்பிடி அதிகார சபையைச் சட்டரீதியாக உருவாக்கி குறைந்தது 5 தொடக்கம் 10 கடல் மைல் எல்லையை நாமே ஆட்சி செய்யும் கட்டமைப்பை உருவாக்குவது எனது அடுத்த வருட திட்டமாகவுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த வருட ஆரம்பத்தில் மத்திய மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீரவைச் சந்தித்து மீன்பிடிப் பண்ணைகளை உருவாக்குவதற்கான பல திட்ட முன்வரைவுகளைக் கையளித்திருந்தேன். அதற்கு அமைவாக அமைச்சரும் 4ஆயிரத்து 200 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளார். இதனூடாக மீன் வளர்ப்பு தொழிற்பூங்கா ஒன்று மன்னார் மாவட்டத்தின் நாயாத்து வெளிப் பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ளது. இதனூடாக குறைந்தது 4ஆயிரத்து 500 பேருக்கான வேலைவாய்ப்பும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்கான வாய்ப்பும் கிட்டவுள்ளது. -என்றார். (த-21-7-8)

# முடிவுக்கு வந்தது விமானக் கடத்தல்

## 118 பயணிகளும் பாதுகாப்பாக மீட்பு

லிபியாவில் 118 பேருடன் பயணிகள் விமானம் கடத்தப்பட்ட சம்பவம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னதாகக் கடத்தப்பட்ட பயணிகள் மால்டாவில் வலுக்கட்டாயமாக தரையிறக்கப்பட்ட செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில், குறித்த கடத்தல் சம்பவம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. விமானத்தைக் கடத்தியவர்கள் எனத் தெரிவிக்கப்படும் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அத்துடன், விமானத்தில் இருந்த பயணிகள் அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்) (த)

# 2016 இல் 117 பேர் ஏ-9 நெடுஞ்சாலை விபத்துகளில் சாவு

2016ஆம் ஆண்டு அதிக விபத்துக்கள், யாழ்ப்பாணம்- கண்டி இடையிலான ஏ-9 நெடுஞ்சாலையிலேயே இடம்பெற்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏ-9 நெடுஞ்சாலையில் இந்த ஆண்டு இடம்பெற்ற விபத்துக்களில் மாத்திரம், 117 பேர் உயிரிழந்துள்ளனர் என்று போக்குவரத்துப் பொலிஸ் தரவுகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் சாவகச்சேரியில் 11 பேர் கொல்லப்பட்ட விபத்தும் இதில் உள்ளடங்கியுள்ளது.

ஏ-9 நெடுஞ்சாலையில் அதிகளவிலான விபத்துக்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களுக்குட்பட்ட பகுதிகளிலேயே இடம்பெற்றுள்ளன என்றும், இந்தத் தரவுகளின் மூலம் தெரியவந்துள்ளது. (த)

# போதிய அரிசி இறக்குமதி

கொழும்பு, டிசெ. 24

தனியார் நிறுவனங்களின் ஊடாக ஒரு இலட்சம் மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கும், இந்தியாவிலிருந்து 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது.

இது பற்றிய கலந்துரையாடல் ஒன்று நேற்று மாலை இடம்பெற்றது. அதில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகக் கைத்தொழில் மற்றும் வர்த்தக விவகாரங்களுக்கான அமைச்சின் செயலாளர் டி.எம்.கே.பி. தென்னக்கோன் தெரிவித்தார்.

அரசிடம் உள்ள 10 ஆயிரம் மெற்றிக்தொன் நெல்லை லங்கா சதொச ஊடாக அரிசியாக மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் அரிசித் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக இந்தியாவில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யப்படவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (த-4)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## ஈழத்தமிழரின்...

புரிந்து நடக்கின்றீர்கள். இவ்வாறு தமிழகத்திலிருந்து வருகை தந்த அருட் தந்தை சகாய ராஜ் தெரிவித்தார்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திறப்பு விழா நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆலயத் திறப்பு விழா கடந்த 7 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்தது. திடீரென தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா உயிரிழந்துவிட்டார். அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஆலயத் திறப்பு விழா ஒத்தி வைக்கப்பட்டது. தமிழக மக்களின் உணர்வுகளைப் புரிந்து நடந்து கொண்டீர்கள். அதற்கு நன்றி. ஆலயக் கட்டுமானத்துக்கு நிதி உதவி எங்களிடமிருந்து பெறப்படவில்லை. ஆனாலும் யாழ். ஆயர், பொருள் உதவிகளைச் செய்யுமாறு கோரியுள்ளார். நாம் எம்மாலான எல்லா உதவிகளையும் செய்வோம் என்று இங்கு சொல்லிக் கொள்கின்றோம்.

ஆயர் கேட்டுக் கொண்டதைப் போன்று அடுத்த ஆண்டு கச்சதீவு உற்சவத்தின் நாள்களை நீடிக்கவும், தமிழக பக்கதர்கள் இங்கு மேலும் ஒரு நாள் தங்குவதற்கும் அனுமதி வழங்கப்படவேண்டும்-என்றார். (த-5)

## சிறுப்பிட்டியில்...

தலைவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அந்த வீட்டில் 85 வயது முதியவரும் அவரது மனைவியுமே தனியாக வசித்து வந்தார்கள். இருவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளை பின்பக்க மதில் பாய்ந்து உள்ளே சென்ற 4 பேர் வீட்டின் முன்பக்கக் கதவை உடைத்து கத்திகள், கொட்டன்களுடன் வீட்டுக்குள் நுழைந்தனர்.

பின்னர் முதியவரைத் தாக்கி நகரமுடியாமல் செய்துள்ளனர். வீட்டில் தேடுதல் நடத்தி 25 பவுண் நகைகள், 50 ஆயிரம் ரூபா பணம், டி.வி.டி. பிளேயர், விலையுயர்ந்த ரோச்லைற் என்பவனவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றனர்.

இது குறித்து எவரும் கைது செய்யப்படவில்லை. விசாரணை முன்னெடுக்கப்படுகிறது என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4-10-26)

## கடற்படை...

இவ்வாறு யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கோரிக்கை விடுத்தார்.

தென்பகுதியில் ஊடகவியலாளர்களுடன் முரண்பட்டதால் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவிந்திர விஜயகுணவர்த்தன சர்ச்சைக்குள்ளாகியுள்ளார். இவ்வாறானதொரு நிலையிலேயே யாழ். ஆயர் மேற்படி வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

யாழ். ஆயர் மேலும் தெரிவித்ததாவது:

கடற்படைத் தளபதியின் முயற்சியினால்தான் இந்த ஆலயம் இவ்வளவு விரைவாக அமைக்கப்பட்டது. ஆறு மாத காலத்தினுள் அமைத்து முடிப்பது என்பது அசாத்தியமானது. இவ்வளவு விரைவாக ஆலயம் அமைத்து முடித்ததை நான் காணவில்லை. கடற்படைத் தளபதியின் பதவிக் காலம் முடிகின்றது. அடுத்த ஆண்டு கச்சதீவு வருடாந்தத் திருவிழா நடக்கும் போது அவர் பதவியில் இருக்கமாட்டார். அதனால்தான் இவ்வளவு விரைவாகச் செய்து முடித்துள்ளார்.

அவர் பதவியிலிருந்தால் இன்னும் பல விடயங்களைச் செய்யலாம். அதனால் ஆளுநர் கூரேயிடம், அவரின் பதவிக் காலத்தை நீடிக்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், யாழ். ஆயர் இவ்வாறு கோரினார் என்று ஆளுநர் தனது செல்வாக்கைப் பயன்படுத்திக் கேட்கவேண்டும். அவருக்குப் பதவி நீடிப்புப் பெற்றுத் தரவேண்டும் - என்றார். (த-50)

## கருணாநிதி...

வேலவர் மீனவர் சங்கத் தலைவர் தெரிவித்தார். கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திறப்புவிழா நேற்று நடைபெற்றது. இதில் இந்தியாவிலிருந்து பக்தர்கள், அருட்தந்தையர்கள் கலந்து கொண்டனர். இவ்வாறு பங்கெடுத்த ஒருவரே மேற்கண்டவாறு ஊடகங்களிடம் குறிப்பிட்டார்.

'கலைஞர் கருணாநிதி உடல் நலம் குன்றி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் விரைவில் பூரண சுகம் பெற்று வீடு திரும்ப வேண்டும். அதற்காக அந்தோனியாரிடம் வேண்டுவதற்கே நான் இங்கு வந்தேன்' என்றார் அந்த மீனவர். (த-5)

## மீனுக்கும்...

தெரிவித்தனர். கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திறப்பு விழாவுக்கு வருகை தந்த, தமிழகத்தின் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களே மேற்கண்டவாறு யாழ். ஊடகங்களிடம் குறிப்பிட்டனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

மீனுக்கும் மீனவருக்கும் எல்லை கிடையாது. மீன் எல்லை பார்த்து நீந்துவது கிடையாது. அது போன்றுதான் மீனவரும். எல்லை தாண்டி வருகின்ற மீனவர்கள் கைது செய்யப்படுகின்றனர். சில தினங்களுக்கு முன்னரும் மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் விடுவிக்கப்படவேண்டும். அவர்களது படகுகளும் விடுவிக்கப்பட வேண்டும்.

இந்தப் பிரச்சினைக்கு இரு தரப்பும் பேசியே தீர்வு காணவேண்டும். நாம் கடந்த காலத்தில் புரியாணி உண்டோம். இப்போது கஞ்சிக்கே வழியில்லாமல் இருக்கின்றோம். எமது கடல் வளம் அழிக்கப்பட்டு விட்டது.

மீனவர்கள் என்ற போர்வையில் போதைப் பொருள் கடத்தல்காரர்களும் உலாவுகின்றனர். அவர்கள் கைது செய்யப்பட வேண்டும். அவர்களுக்கு என்ன தண்டனை வேண்டுமென்றாலும் கொடுங்கள்.

இந்த ஆலயம் அமைக்கப்படும்போது எங்களிடம் நிதி உதவிகள் பெறப்படவில்லை. அது எமக்கு மிகவும் மனவருத்தம் – என்றனர்.

இதேவேளை, இந்தியத் துணைத் தூதுவர் நடராஜனிடம், மீனவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டமை தொடர்பில் மீனவர்கள் பிரஸ்தாபித்தனர். மீனவர்களை விடுவிக்கவேண்டும். படகுகளையும் விடுவிக்க வேண்டும் என்றும் அவர்கள் துணைத் தூதுவரிடம் கோரினர். தைப் பொங்கலுக்கு முன்னர் மீனவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று தூதுவர் அவர்களிடம் குறிப்பிட்டார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 200 ஏக்கர் காணியை ஒதியமலையில் விடுவிக்க இணக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 24
முல்லைத்தீவு மாவட்டம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் வனவள திணைக் களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள 400 ஏக்கர் காணிகளில் மக்களால் உரிமை கோரப்படும் 200 ஏக்கர் நிலத்தை விடுவிப் பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ய.அரிருத்தனன் தெரிவித்தார்.

"ஒட்டுசுட்டான் பிரதேச செயலா ளர் பிரிவின் கீழ் உள்ள ஒதியமலைக் கிராமத்தில் வசிக்கும் மக் களின் மேட்டுக்காணிகள் மற்றும் வயல்காணிகள் என்பன இடப்பெயர் வின் போது கைவிடப்பட்டன. அவை வனாந்தரமாக காட்சியளித்தமையினால் வனவளத் திணைக்களம் உரிமை கோரியது. இதனால் அந்தப் பகுதியில் மீள்குடியமர்வும் அங்குள்ளோரின் வாழ்வாதாரமும் பாதிக் கப்படுகின்றது."- எனப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர். "முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் வனவளத் திணைக் களத்தால் ஒதியமலை உள்ளிட்ட கிராமங்களில் 400 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவற்றை விடுவிக்குமாறு நாம் வனவளத்திணைக்களத்தை பலமுறை கேட்டிருந்தோம்.

அவர்கள் நேரில் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படை யில் முதல் கட்டமாக ஒதியமலையில் 200 ஏக்கர் நிலத்தை விடு விக்க இணக்கம் தெரிவித்தனர்.

அவை விடுவிக்கப்படும் பட் சத்தில் உரிய தரவுகளின் அடிப் படையில் உரிமையாளர்களிடமே ஒப்படைக் கப்படும்'-என்றுஒட்டுசுட்டான் பிரதேச செய லா ளர் தெரிவித்தார். (ற-10)

# இறப்பு விசாரணை அதிகாரி இல்லாததால் பெரும் சிரமம்

## வடக்கு மாகாண சபையில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ.24
முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இறப்பு விசாரணை அதிகாரிகள் இல்லாததால் உயிரிழப்புக்கள் நடைபெறும்போது உறவினர்கள் உடல்களை பெறுவதற்கு தாமதம் ஏற்படுகின்றது. இவ்வாறு வட மாகாண சபை உறுப்பினர் க. சிவநேசன் சுட்டிக் காட்டினார்.

வடக்கு மாகாண சபையின் 2017ஆம் ஆண்டுக் கான வரவு செலவு திட்ட விவாதம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் சுகாதார சுதேச மருத் துவம் மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சுக்கள் தொடர்பான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் தெரிவித்ததாவது-
முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மல்லாவி வைத்திய சாலையின் பிரதே அறையின் குளி ரூட்டி பல மாதங்களாக இயங்கவில்லை. உடல்களை வைத்தெடுப்பது சிரமமாக உள்ளது. பின் தங்கிய வைத்தி சாலைகளில் மருத்துவர், தாதிகளுக்கான விடுதிகள் அமைக் கப்படும்போது வெளி இடங்களில் இருந்து வருபவர்கள் தங்க முடியும். முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இறப்பு விசாரணை அதிகாரிகள் நியமிக் கப்படாததால் இறப்புக் கள் நடைபெறும்போது தேவையற்ற தாமதங்கள் ஏற்படுகின்றன.

வீடுகளுக்கான நடமாடும் சேவைகள் நடைபெறு கின்றன. அந்தத் திட்டத்தில் வயோதிப நிலையில் இயலாது உள்ளவர்களும் உள்வாங்கப்பட வேண்டும். -என்றார். (ற-7)




## நகராட்சி மன்றம், சாவகச்சேரி
## பெறுகை அறிவித்தல்

01. தவிசாளர், பெறுகைக் குழு, **நகராட்சிமன்றம், சாவகச்சேரி அவர்களினால்** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
02. பெறுகைக்கு தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் பெறுகைதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப் படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் **வேலைகளுக்கான** இக்ராட் (ICTAD) பதிவுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
03. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் **நகராட்சிமன்றம், சாவகச்சேரியில் 26.12.2016** தொடக்கம் **29.12.2016** ஆம் திகதிவரை அலுவலக நாள்களில் மு.ப **9.00** மணிமுதல் **15.00** மணிவரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபா.**847.50/- (With VAT, NBT)** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
04. பெறுகை ஆவணங்களின் மூலப்பிரதியை 29.12.2016 ஆம் திகதி10.00 மணிக்குமுன்பதாககிடைக்கக் கூடியவாறு தவிசாளர் / செயலாளர், நகராட்சிமன்ற பெறுகைக் குழு, **நகராட்சி மன்றம், சாவகச்சேரி** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். இணைப் பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். பெறுகைதாரர்கள் வேலைக்கான பெறுகை விவரத்தினை தபாலுறையின் இடது பக்கமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் 29.12.2016 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு **நகராட்சிமன்றம், சாவகச்சேரி** அலுவலகத்தில் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
05. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமைவதுடன் குறித்த தொகை அலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

***மீள் கேள்விஅறிவித்தல்***

| இல | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (Vat, Tar நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி பிணைவைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | மீசாலை அல்லாரை ஊரெல்லை வீதி புனரமைத்தல் | 1.272 | **03**மாதம் | C8/C9 | 12,800.00 |
| 2 | புதியவீரபத்திரர் வீதி புனரமைத்தல் | 1.059 | **03**மாதம் | C8/C9 | 10,600.00 |
| 3 | தாமோதரம்பிள்ளை வீதி தொடர் வேலை | 1.803 | **03**மாதம் | C8/C9 | 18,100.00 |
| 4 | சங்கம் வீதி புனரமைத்தல் | 0.988 | **03**மாதம் | C8 | 10,000.00 |
| 5 | நகராட்சிமன்றகேட்போர் கூட மண்டபம் கண்ணாடிப் பிரிப்புசெய்தல் | 0.421 | **03**மாதம் | C8 | 4,300.00 |

***கேள்விஅறிவித்தல்***

| இல | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (Vat, Tar நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | வெங்காயக் கடைக்கு நிலம் அமைத்தல் | 0.309 | **03**மாதம் | C8 | 3,100.00 |
| 2 | நிர்வாகப் பகுதி புனரமைப்பு | 0.855 | **03**மாதம் | C8 | 8,600.00 |

செயலாளர்,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.
23.12.2016.

(C/27248)(10.18)

மீண்டும் புதுப்பொலிவுடன் சாறிகளின் சாம்ராஜ்ஜியமான
சரவணா ரெக்ஸ்
பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவு
- திருமணப்பட்டு சாறிவகைகள், Office wear சாறிகள்.
- நவீன டிசைன் சல்வார்கள், சல்வார்த் துணிகள், ஸ்கேட் & பிளவுஸ் வகைகள்.
- பட்டு வேட்டி சேட் வகைகள்.
- சிறுவர்களுக்கான ஆடைத் தினுசுகள் மற்றும் அனைத்து ஆடைவகைகளும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.



நல்லூர் சரவணா ரெக்ஸ்
526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(சிவன்கோயில் அருகில்)
077 844 8045/ 021 221 6866

நெல்லியடி சரவணா ரெக்ஸ்
171, பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.
(சம்பத்வங்கி அருகில்)
021 226 2992

English Trainer Training Diploma
(Teacher Training)
சர்வதேச தரத்திலான ஆங்கிலத்தை முழுமையாகவும் அடிப்படையிலிருந்து கற்க விரும்புபவர்களுக்கும்
- ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்று ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
- ஆங்கிலத்தை முழுமையாக கற்க விரும்புபவர்களுக்கும்
- பல்கலைக்கு தெரிவாகியுள்ள மாணவர்களுக்கும்
- " English Medium " மாணவர்களுக்கும்
- Speaking, Writing. Listening and Reading திறனை விருத்தி செய்ய விரும்புபவர்களுக்குமானது.

பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் English Medium மாணவர்கள் மற்றும் ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்கள் தெரிவு செய்கின்ற ஒரேயொரு கற்கைநெறி.

New Batches Start on 02.01.2017 9.00 a.m / 1.30 p.m Weekdays
07.01.2017 9.00 a.m / 1.00 p.m Weekend

ELAS
Sirpon Ramanathan Road, Thirunelveli,
Jaffna.
T.P: 021 221 2410, 076 697 3040

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை அச்சுறுத்தத் தூண்டுதல்

## எமது உறுப்பினர்களே அதை செய்கின்றனர் என்கிறார் அனந்தி

யாழ்ப்பாணம் டிசெ. 24

வடக்கு மாகாண சபை பேரவைச்செயலகத்துக்குள் எனக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதற்கான தூண்டுதலில் எமது உறுப்பினர்கள் ஈடுபடுவது மன வேதனையை ஏற்படுத்துகின்றது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையில் நேற்று நடைபெற்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபைக்கு நேற்று (நேற்று முன்தினம்) வந்திருந்த கடமைநிறைவேற்று அதிபர்கள் பேரவை செயலகத்துக்கு வெளியில் வெயிலில் நின்றார்கள். அவர்கள் எங்களுக்கு வாக்கு அளித்தவர்கள் வெயிலில் நிற்கின்றார்கள். அவர்களை உள்ளே கூட்டி வந்தபோது, பொலிஸார் தடுத்து விட்டனர். அவர்கள் உங்களுடைய (அவைத்தலைவரின்) கட்டளையை அடுத்துத்தான் தடுத்தார்கள். நீங்கள் தான் (அவைத் தலைவர்) இந்தப் பேரவைச் செயலகத்துக்கும் முழுப் பொறுப்பு. அவர்களை முன்னால் உள்ள தகரக் கொட்டகைக்குள் விடுமாறு கேட்டிருந்தேன். அவர்கள் படித்தவர்கள். பண்பானவர்கள். நாகரிகமானவர்கள் என்று தான் நான் உங்களிடம் கேட்டிருந்தேன். நீங்கள் அதை நிராகரித்து இருந்தீர்கள். அதன் பின்னர் முதலமைச்சருடன் பேசுவதற்கு ஐந்து அதிபர்களைப் பேரவைச் செயலக மண்டபத்துக்குள் அழைத்து வந்தேன்.

இன்று (நேற்று) நண்பகல் வெளியில் சென்றபோது ஏழு பேர் என்னிடம் வந்து உங்களுடன் பேசவேண்டும் என்று கேட்டிருந்தார்கள். நீங்கள் யார் என்று கேட்டதற்கு நாங்கள் அதிபர் பரீட்சையில் தோற்றியவர்கள் என்று சொன்னார்கள். வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் உள்ளோம். இப்போது சந்திக்க முடியாது. பிறகு சந்திக்கிறேன் என்று அவர்களிடம் சொன்னேன்.

இதனையடுத்து இரண்டு பேர் முன்னால் வந்து 'நீங்கள் பேசியது எல்லாவற்றையும் பார்த்தோம். நீங்கள் எங்களுக்கு எதிராகத்தான் நடந்து கொண்டிருக்கின்றீர்கள்' என்ற கருத்தைச் சொன்னார்கள்.

ஒரு மாகாண சபை உறுப்பினரின் அனுமதியில் நான்கு பேருக்கு உள்ளே வர அனுமதி வழங்கப்பட்டதாக பின்னர் நான் அறிந்தேன். அவர்கள் இங்கிருந்து எல்லாவற்றையும் பார்த்திருக்கின்றார்கள். இந்த அச்சுறுத்தல்கள் இடம்பெறுவதற்கான துண்டுதலில் எமது உறுப்பினர்கள் ஈடுபடுவது மன வேதனையை ஏற்படுத்துகின்றது. அதிபர்கள் விடயத்தில் யாரும் பாதிக்கப்படாத வகையில் முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று தான் சொன்னேன்-என்றார்.

'உங்களுடைய ஆதங்கத்துக்கு எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் எதற்குமே நான் பொறுப்பில்லை. அவர்கள் வருவதற்கு இன்றும் நான் அனுமதி வழங்கவில்லை. இன்றும் (நேற்று) அனுமதி வழங்கவில்லை. இதைப் பகிரங்கமாகச் சொல்ல விரும்பவில்லை. நானும் சிக்கலுக்குள் மாட்டுப்பட்டுள்ளேன். ஒரு உறுப்பினர் 4 பேருக்கு அனுமதி கேட்கும்போது அனுமதி வழங்கினேன். எனக்கு வேறு நோக்கமோ கருத்து வேறுபாடோ இல்லை. இதில் தவறுகள் நடைபெற்று இருக்கலாம். இதற்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் என வடக்கு மாகாண அவைத் தலைவர் தெரிவித்தார். (த-21-7)

# 6 மணிக்குப் பின்னரும் மாலைநேர வகுப்புக்கள்

## அனுமதிக்க வேண்டும் என சிவாஜிலிங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம். டிசெ.24

தனியார் கல்வி நிலையங்களில் மாலை நேர வகுப்புக்களை 6 மணிக்குப் பின்னரும் நடத்துவதற்கு அடுத்த ஆண்டு முதல் தகுந்த அனுமதி வழங்கப்படவேண்டும் என்று மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் கோரிக்கை விடுத்தார்.

வடக்கு மாகாண சபையில் நேற்று நடைபெற்ற 2016 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மாகாண சபையில், 2016 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்ட அறிக்கையைச் சமர்ப்பித்த வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, அடுத்த ஆண்டு தனியார் கல்வி நிலையத்தில் மாலை 6 மணிக்கு பின்பு வகுப்புக்கள் நடத்தப்படமாட்டாது என்று தெரிவித்தார்.

இந்தக் கருத்தை எதிர்த்து கருத்து தெரிவிக்கும் போதே மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவிக்கையில், மாலை நேர வகுப்புக்கள் நடக்கக்கூடாது என்பது நீதிமன்ற உத்தரவாக இருந்தாலும் சரி இல்லையென்றாலும் சரி வன்முறைகளுக்குப் பயந்து நாம் ஏன் எமது பிள்ளைகளை ஒளித்து வைத்திருக்கவேண்டும். பல்கலைக் கழகத்தைப் பாருங்கள். அங்கு 5 மணிக்குப் பிறகும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. தனியார் வகுப்புக்களில் படிக்கின்ற எமது பிள்ளைகள் தான் அங்கும் (பல்கலைக்கழகம்) செல்லப் போகிறார்கள். அங்கு 5 மணிக்குப் பின்னர் வகுப்புக்கள் நடைபெற்றால் அந்த வகுப்புக்களுக்குச் செல்லத்தானே போகிறார்கள். அதே போன்று தனியார் கல்வி நிலையங்களிலும் வகுப்புக்கள் நடந்தால் அவற்றை நாம் ஏன் நிறுத்தவேண்டும். வகுப்பு முடிந்ததும் பெற்றோரோ அல்லது பாதுகாவலரோ சென்று பிள்ளைகளை அழைத்து வரலாம்.

எமது பாடசாலைகள் சிலவற்றில் இரவு நேர வகுப்புக்கள் நடக்கின்றன. அந்த வகுப்புக்கள் 8 மணிவரை அல்லது 9 மணிவரை நடக்கின்றன. அப்படிப் பாடசாலைகளில் நடக்கின்ற போது ஏன் தனியார் கல்வி நிலையங்களில் நடத்த முடியாது. இதனையும் கல்வி அமைச்சர் சீர்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார். (த-21-ரி)

# சுகாதாரத் தொண்டருக்கு 2017இல் நியமனங்கள்

## வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 24

சுகாதாரத் தொண்டர்களுக்கான நியமனங்கள் வழங்குவது தொடர்பாக நிதி அமைச்சர் ரவி கருணநாயக்கவுடனும், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுடனும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டு விசேடவேலைவாய்ப்புஊடாக நியமனம் வழங்கப்படும்.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 2017ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட விவாதம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் சுகாதார சுதேச மருத்துவம் மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சுக்கள் தொடர்பாக உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தத்துவங்களை உருவாக்குவது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் தவராசா கூறியிருந்தார். நான் அந்த விடயங்களை கருத்தில் எடுத்துள்ளேன். விந்தன் குறிப்பிட்டதை ஏற்றுக்கொள்கின்றேன். தீவகத்துக்கான அம்புலன்ஸ் சேவை முக்கியமானது. தீவுப் பகுதிகளுக்குரிய மூன்றாவது அம்புலன்ஸ் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும்.

சுகாதாரத் தொண்டர்கள் நியமனத்தில் அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட வேண்டும் என்பதில் நானும் முயற்சி எடுத்துள்ளேன். 2017ஆம் ஆண்டு விசேட வேலைவாய்ப்பு ஊடாக நியமனம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரமுயர்த்தப்பட வேண்டிய வைத்தியசாலைகளின் தரவுகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. வவுனியா மாவட்டச் செயலருடைய விடுதிக்குரிய காணியின் ஒரு பகுதியைவைத்தியசாலைக்கு எடுப்பது என்று கூறப்பட்டது. மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இது தொடர்பாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார பரிசோதகர் இடமாற்றம் இடமாற்ற அடிப்படையில் தான் வழங்கப்பட்டது. எந்தப் பாகுபாடும் இல்லை. அனைத்து உத்தியோகத்தர்களுக்குமான இடமாற்றங்கள் இடமாற்ற அடிப்படையிலேயே வழங்கப்பட்டன.

சங்கிலியன் வீதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் கையகப்படுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. அந்த ஆரம்ப சுகாதார நிலையம் எங்களுடைய அமைச்சுக்குள் வரவில்லை. முதலமைச்சரின் அமைச்சுக்குள் உள்ளது.

கிளிநொச்சியில் வைத்தியசாலையில்நிலவும்ஆளணிப் பற்றாக்குறையால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைச் சீர் செய்ய உள்ளோம். பிரேத அறையை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும். முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக் காணி விடயம் அதன் உரிமையாளர்களுடன் பேசி ஒரு சமரசத்துக்கு வந்திருக்கின்றோம் - என்றார். (ந-7)

### மனைவி, பிள்ளைகளை மீட்டுத் தருமாறு கோரி குடும்பஸ்தர் உணவு தவிர்ப்பு

குடும்பத்தில் ஏற்பட்ட சச்சரவை அடுத்து வீட்டில் இருந்து வெளியேறி உறவினரின் வீட்டுக்குச் சென்றுள்ளதனதுமனைவி மற்றும் மூன்று பிள்ளைகளையும் மீட்டுத் தருமாறு கோரி வவுனியா மாவட்டத்தில் உள்ள நொச்சிமோட்டை கிராமசேவகர் அலுவலகத்திற்கு அருகில் குடும்பத் தலைவர் ஒருவர் உணவு தவிர்ப்பை ஆரம்பித்துள்ளார்.

வவுனியா-பறநாட்டான்கல் கிராமத்தில் வசிக்கும் 40 வயது குடும்பத் தலைவர் ஒருவரே இவ்வாறு உணவு தவிர்ப்பில் இருந்துவருகின்றார். குடும்பத்தில் ஏற்பட்ட சச்சரவை அடுத்து வீட்டில் இருந்து வெளியேறி உறவினரின் வீட்டிற்கு சென்றுள்ள தனது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளையும் மீட்டுத்தருமாறு அவர் கோரியுள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் கிராமசேவகர் அலுவலகத்தில் உணவு தவிர்ப்பை முன்னெடுக்க முயற்சித்த போதும் பொலிஸார் அதற்கு அனுமதிக்கவில்லை. இதனையடுத்து அவர் அருகிலுள்ள மரத்தின் கீழ் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-10)

# அபிவிருத்தி சட்டவரைவு; வட மத்தியும் நிராகரித்தது

கொழும்பு, டிசெ 24

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட வுள்ள அபிவிருத்திச் சிறப்பு ஏற்பாடுகள் சட்டவரைவு வட மத்திய மாகாண சபையில் மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

சட்டவரைவுக்கு எதிராக 19 வாக்குகளும் ஆதரவாக 10 வாக்குகளும் கிடைத்தன.

முதலமைச்சர் பேசல ஜயரத்ன உள்ளிட்ட சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சட்டவரைவுக்கு எதிராகவும் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் ஆதரவாகவும் வாக்களித்தனர். (த)

# முறையிடும் செயலகத்தை ஜன. 4 யாழில் திறந்துவைப்பார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், டிசெ. 24

பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை ஜனாதிபதிக்கு நேரடியாகத் தெரிவிக்கும் அலுவலகத்தை எதிர்வரும் 4 ஆம் திகதி ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

இது தொடர்பான செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. அதில் ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண ஆளுநர் அலுவகத்தில் ஆளுநரின் மேற்பார்வையில் இந்த அலுவலகம் அமையவுள்ளது. இந்த அலுவலகத்தை 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதியே திறந்து வைக்கவுள்ளார். ஜனாதிபதிக்கு முறையிடுங்கள் என்று ஏற்கனவே இணைய முகவரியும் உள்ளது. ஜனாதிபதிக்கும் மக்களுக்குமான இடைவெளியைக் குறைக்கவும், வடக்கு மாகாண மக்கள் தமது குறைகள் பிரச்சினைகளை நேரடியாகத் தெரிவிக்கும் வகையிலும் இந்த அலுவலகம்செயற்படும். இதற்கெனத் தமிழ் மொழித் தேர்ச்சியுடைய இரண்டு அலுவலர்கள் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் தினமும் மக்களின் முறைப்பாடுகளைப் பெற்று உடனுக்குடன் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்துவார்கள். மக்கள் வாரத்தில் ஒரு தடவை இந்த அலுவலகத்துக்கு நேரடியாக வந்து தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்யமுடியும்.

ஏற்கனவே ஆளுநரைப்பொது மக்கள் சந்திக்கவென வாரத்தில் ஒரு நாள் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் மக்கள் என்னிடம் வந்து கதைப்பது மிகக் குறைவாகவுள்ளது.

அரச உத்தியோகத்தர்கள், படையினர், பொலிஸ் உத்தியோகத்தர்களே அதிகளவில் வருகிறார்கள். அவ்வாறு இல்லாமல் பொதுமக்கள் இந்த ஜனாதிபதிக்கு முறையிடும் செயலகத்துக்கு எந்தவித தயக்கமும் இன்றி முறையிட வேண்டும்.

ஆளுநர் செயலகத்தில் அலுவலகம் திறந்து வைக்கும் தினமன்று ஆளுநரின் பங்களிப்புடன் கற்றல் உபகரணங்கள் வழங்கல், மரம் நடுகை என்பன ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் ஆரம்பித்து வைக்கப்படும்.

யாழ்ப்பாணக் கோட்டைக்கும் வீரசிங்கம் மண்டபத்துக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் மரநடுகை இடம்பெறும். பதிவு செய்யப்பட்ட நோயாளர்களுக்கு ஜனாதிபதி நிதியம் மூலமாக மருத்துவ உதவிக் கொடுப்பனவும் வழங்கப்படும்-என்றார். (த-4,ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நேர மாற்றத்தில் கரிசனை கொள்ளல் அவசியம்

## வடக்கு மாகாண சபையில் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.24

அடுத்த ஆண்டில் பாடசாலை நேர மாற்றம் தொடர்பில் அமைச்சர் கரிசனை கொள்ள வேண்டியது அவசியமாகிறது என்று மாகாண சபை உறுப்பினர் ஆனோல்ட் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண சபையில் நேற்று நடைபெற்ற கல்வி அமைச்சின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட அமர்வின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மாகாண சபையில், 2017ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்ட அறிக்கையை சமர்ப்பித்த வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, அடுத்த ஆண்டு நடைமுறைக்கு வரும் வகையில் பாடசாலை ஆரம்பிக்கும் நேரம் காலை 7.30 மணி என்று குறிப்பிட்டார்.

இதுகுறித்துஉறுப்பினர்ஆர்னோல்ட் தெரிவிக்கையில், அடுத்த வருடம் பாடசாலை ஆரம்பிக்கும் நேரம் காலை 7.30 என்று குறிப்பிடுவது எத்தனை மாணவர்களுக்கு சாத்தியமாகிறது என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். இவ்வாறு பாடசாலை ஆரம்பித்தால் மாணவர்கள் 7.30 மணிக்கு முன் செய்யும் கடமைகள் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். மாணவர்களுக்கு உரிய சூழல் ஆரோக்கியமாக இருக்கவேண்டும். அதாவது மாணவர்கள் பாடசாலைக்கு வந்து செல்லக்கூடிய போக்குவரத்து சீரமைக்கப்பட வேண்டும். இந்தச் சட்டம் அயலில் இருந்து செல்லும் நகரப்புறப் பாடசாலை மாணவர்களுக்குத்தான் பொருத்தமானதாக இருக்கும். அடுத்த ஆண்டு அனைத்துப் பாடசாலைகளுக்குமாக இந்தச் சட்டத்தைச் செயற்படுத்தினால் அவர்கள் கல்விச் செயற்பாடுகளில் மிகவும் சிரமப்படுவர். மாணவர்களுக்குரிய ஆரோக்கியமான சூழலைக் கவனத்தில் எடுத்து செயற்பட்டு எமது மாணவர்களின் சிறப்பான கல்விக்கு வழி செய்ய வேண்டும் - என்றார்.

(கு-21-ரி)

# காஸ் சிலிண்டரால் ஏற்பட்ட பரபரப்பு

தென்மராட்சி, டிசெ.24

புதிதாக வாங்கிய காஸ் சிலிண்டரிலிருந்து திடீரென காஸ் வெளியேறிதால் கிராமம் முழுவதும் புகைமண்டலமாக காட்சியளித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நாவற்குளி ஐந்து வீட்டுத் திட்டத்தில் இடம்பெற்றது.

வீட்டுத்தொகுதியில்உள்ளவீடொன்றில் அந்தப் பகுதி வாழ்வின் எழுச்சி அலுவலர் ஒருவர் தனது அலுவலகத்தை அமைத்திருந்தார். அந்த வீட்டில் வயோதிபத் தம்பதியினர் தங்கியிருந்தனர். இவர்களது பிள்ளைகள் அண்மையில் புதிதாக காஸ் சிலிண்டர் ஒன்றைக் கொள்வனவு செய்து தம்பதியினரின் பாவனைக்கென வீட்டில் வைத்து விட்டுச் சென்றுள்ளனர்.

நேற்றுக் காலை வாழ்வின் எழுச்சி அலுவலர் தனது கடமைக்குச் சென்றிருந்தவேளை வீடு முழுவதும் காஸ் மணம் வீசியதால் வயோதிபத் தம்பதியை வெளியேற்றினார். வெளியே வந்து அவ்வழியே வந்த போக்குவரத்துப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். அவர்களும் உடனடியாகச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்குத் தகவல் அனுப்பினர். சாவகச்சேரி பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தலைமைப் பொறுப்பதிகாரி உட்பட பெருமளவு பொலிஸார் அங்கு விரைந்தனர். அதற்கிடையில் காஸ் அனைத்து இடங்களுக்கும் பரவி புகை மண்டலமாகக் காணப்பட்டது.

பொலிஸார் மக்களை அந்தப் பகுதியிலிருந்து வெளியேற்றிய பின்னர் வீட்டினுள் புகுந்து காஸ் வெளியேறியசிலிண்டரைவெளியே எடுத்தனர். மக்களைக் குறிப்பிட்ட நேரம் வரை சமையலுக்குக் கூட நெருப்பு எரிக்கவேண்டாமெனவும், தொலைக்காட்சிப் பெட்டி, தொலைபேசி போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டாமெனவும் கூறினர். புகை மண்டலம் அடங்கும் வரை மக்கள் சமையல் வேலை ஒன்றும் செய்யாமல் காத்திருந்து மதியத்திற்குப் பின்னரே பீதியுடன் சமையல் மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(கு-9)

# வடக்கு முதல்வர் செய்வது சரியாயின் கொழும்பு அரசு செய்வது தவறா?

## கேள்வி எழுப்பினார் தவராசா

யாழ்ப்பாணம், டிசெ. 24

வடக்கு முதல்வர் மாகாண சபையின் எதிர்க்கட்சியில் உள்ள சிங்கள மொழி பேசும் உறுப்பினர்களுக்குத் தமிழில் கடிதம் அனுப்புவது சரியென்றால் மத்திய அரசு செய்வதும்சரிஎன்றுகொள்ளவேண்டும். மத்திய அரசில் பிழை கண்டு பிடிக்கமுடியாதுஎனவடக்குமாகாண எதிர்க்கட்சிதலைவர் தவராசா குற்றஞ்சாட்டினார்.

வடக்கு மாகாண சபையில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட அறிக்கையை வழிமொழிந்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வவுனியாதெற்குப்பிரதேசசெயலகத்தில் உள்ள காணி உத்தியோகத்தரின் நடவடிக்கையால் அந்தப் பகுதி மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். குறித்த உத்தியோகத்தர் 25 வருடங்களுக்கு மேலாக அந்தப் பகுதியில் கடமை புரிகின்றார். அவர் மக்களை மதிக்காது நடக்கின்றார். அதனை முறையிட்டபோதும் நடவடிக்கை இல்லை.

அத்துடன் வடக்கு மாகாண முதலமைச்சர், அமைச்சர்களிடம் இருந்து வரும் கடிதங்கள் தமிழ் மொழியில் இருப்பதால்அதனைப்புரிந்துகொள்வதில் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்என எதிர்க்கட்சியில்உள்ள சிங்கள மொழி பேசும் உறுப்பினர்கள் பல முறை தெரிவித்துள்ளனர். கடிதங்களைச் சிங்கள மொழியில் மொழிமாற்றம்செய்யப்பட்டுஅனுப்புவதன் ஊடாகச் சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம். மொழிபெயர்ப்பாளர் இல்லை என்பது பதிலாகாது. அதற்கு நாங்கள் பதிலைக் கண்டுபிடிக்க வேண்டும். அது செய்வது சரியென்றால் மத்திய அரசு செய்வது சரி என்று கொள்ளவேண்டும். மத்திய அரசில் பிழைகண்டு பிடிக்க முடியாது. முதலமைச்சருக்கு மார்ச் மாதம் அனுப்பிய கடிதத்துக்கு நவம்பர் மாதம் தான் பதில் வருகின்றது. இதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை. முஸ்லிம் மக்கள் எல்லோரும் நல்லாக இருக்கின்றார்கள் என்று சொன்னதால் அவர்கள் மனவேதனைக்கு உள்ளாகி உள்ளனர். நீங்கள் ஒரு இனத்துக்கோ அல்லது ஒரு மதத்துக்கோ உரியவர் அல்ல வடக்கு மாகாணத்துக்குப் பொது வானவர்-என்றார்.

'சபையில் குற்றஞ் சாட்டப்பட்ட எல்லா விடயங்களையும் எழுதி வைத்திருக்கின்றேன் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கின்றேன் எனச் சொல்லியிருக்கின்றேன். அத்துடன் உறுப்பினர் ஜெயதிலக சில விடயங்களைக் குறிப்பிடும்போது பரீசிலித்துப் பார்ப்போம் என்று கூறியிருந்தேன்.

மொழிபெயர்ப்பாளரை இன்னொரு இடத்தில் இருந்து கொண்டு வர முடியாது. 5 வெற்றிடங்கள் இருக்கின்றன. இன்னும் எங்களுக்கு மொழிபெயர்ப்பாளர்கள் கிடைக்கவில்லை. மொழிபெயர்ப் பாளர்கள் பெரிய பிரச்சினையாக உள்ளது. முஸ்லிம் மக்கள் தொடர்பாக முன்னைய ஆளுநர் இருந்த காலத்தில் எத்தனை பேர் பதிவு செய்து இருக்கின்றார்கள். அவர்களில் எத்தனை பேர் மீள்குடியேற்றப்பட்டிருக்கின்றார்கள். எத்தனை பேருக்கு உதவிகள் கொடுக்க வேண்டி உள்ளது என்பன உட்பட சகல விவரங்களையும் கொடுத்திருந்தோம். அதைவிட 2013ஆம் ஆண்டில் இருந்து இதுவரை எத்தனை காணிகள் முஸ்லிம் மக்களுக்குக் கொடுக்கப்பட்டன என்பதற்கு என்னிடம் முழு விவரங்களும் இருக்கின்றன. அந்த விவரத்தைத்தான் சொன்னேன். அந்த விவரத்தின்படி முக்கால் வாசிக்கு மேல் முஸ்லிம் மக்களுக்கு காணி கொடுக்கப்பட்டுள்ளது என்று முதலமைச்சர்பதிலளித்தார். (கு-21-7)

# அமிர்தலிங்கத்துக்கு சிலை அனுமதி இன்னும் இல்லை

## வடமாகாண அவைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.24

அமிர்தலிங்கத்துக்கு சிலைஅமைப்பதற்கு அனுமதி கேட்டுக் கடிதம் அனுப்பிப் பல மாதங்கள் கடந்த போதிலும் இன்றுவரை முதலமைச்சரின் அனுமதி கிடைக்கப்பெறவில்லை என அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையில் நேற்று இடம்பெற்ற வடக்கு மாகாண சபையின் வரவு-செலவுத்திட்ட விவாத நிறைவில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த 2014ஆம் ஆண்டு நானும் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சித்தார்த்தன் ஆகியோரும் வலிமேற்குப் பிரதேசத்தில் எங்களின் நிலப் பிரதேசத்துக்குள் சிலை அமைப்பதற்கு ஆரம்ப நடவடிக்கையை மேற்கொள்ளச் சென்றிருந்தோம். அப்போது அங்கு வந்த உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரி, சிலை அமைப்பதற்கான வேலைகளைச் செய்ய விடாது தடுத்து நிறுத்தினார். அத்துடன் அந்த இடத்தில் சிலை வைக்கப்பட்டால் உடைத்து அகற்றப்படும் எனவும் எங்களிடம் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் நடைபெறும்போது வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் இங்கு இருக்கவில்லை. எனினும் நான் குறித்த சம்பவத்தின் பின்னர் சிலை அமைப்பதற்கு அனுமதி கேட்டு உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் முதலமைச்சருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தேன். எனினும் இன்று வரை சிலை அமைப்பதற்கான கடிதமோ, அனுமதியோ கிடைக்கவில்லை -என்றார்.

(கு-8)

# சிதம்பரம் செல்ல அனுமதி இதுவரை கிடைக்கவில்லை

## கூறுகிறது இந்தியத் துணைத் தூதரகம்

யாழ்ப்பாணம், டிசெ. 24

காங்கேசன்துறைமுகத்தில் இருந்து கப்பலில் இந்தியாவின் சிதம்பரத்துக்குச் செல்வதற்கான அனு மதிகள் எவையும் இன்றுவரை கிடைக்கவில்லை என்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகம் தெரிவித்தது.

யாத்திரை செல்வதற்காகச் சிவசேனை அமைப்பினால் வடக்கு மாகாண ஆளுநர் ஊடாக ஒழுங்குகள் இடம்பெறுவதாகக் கூறப்பட்டமை தொடர்பில் தூதரகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோதே இவ்வாறு பதிலளிக்கப்பட்டது.

இது தொடர்பில் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது:

காங்கேசன்துறையில் இருந்து சிதம்பரம் கோயிலுக்குக் நேரடியாகக் கப்பலில் செல்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாக கூறப்படுகின்றது. எனினும் உள்ளூரில் இடம்பெறும் ஏற்பாடுகளுக்கான உத்தியோகபூர்வமான அனுமதிகள் எவையும் இன்றுவரை எமக்குக் கிடைக்கவில்லை. அவ்வாறு அனுமதிகள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் அடுத்தகட்ட 'நடவடிக்கைகள் தொடர்பில்தெரியப்படுத்த முடியும்-என்றார்.

இதேவேளை, இந்த விடயம் தெடர்பில் தீர்மானம் எடுப்பதற்குத் தனக்கு அதிகாரம் இல்லை என்று வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்தார். அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

சிவசேனை அமைப்பு இங்கிருந்து இந்தியாவுக்கான கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் பேசி இருந்தார்கள். அந்த நேரத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர் வெளிநாட்டில் இருந்தார்.

முதலில் இரு நாட்டு அரசுகளும் அனுமதியளிக்கவேண்டும். செல்வதற்கான விசாவை வழங்கவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாகச் சிறந்த படகு வேண்டும். சாதாரணமான படகுகளில் செல்ல முடியாது. எனவே முதலில் பெருமளவானவர்கள் செல்வது சந்தேகமானது.

ஆனால் எதிர்காலத்தில் அதிகளவானவர்கள் செல்வதற்கு இது ஒரு செயற்பாடாகக் காணப்படும். இங்கிருந்து நாம் சிதம்பரம் செல்வதைப் போல இந்தியாவில் உள்ளவர்கள் இங்கு வருவதற்குமான நல்லதொரு நல்லிணக்கச் செயற்பாடு இதுவாகும். அவர்கள் இங்குள்ள கச்சதீவு ஆலயத்துக்கோ, கீரிமலை நகுலேஸ்வரத்துக்கோ வந்து செல்ல முடியும்.

ஆனாலும் இதற்கு அனுமதி வழங்குவது தொடர்பான தீர்மானத்தை என்னால் எடுக்க முடியாது. அதற்கு என்னிடம் அதிகாரம் இல்லை. என்னால் இந்த நல்லிணக்க செயல்முறைக்கு உதவி மட்டுமே செய்ய இயலும். இதை நான் இயன்றவரைக்கும் செய்வேன்-என்றார்.

(கு-4-101-ரி)

# பாலிநகரில் தாக்குதல் இளைஞர் படுகாயம்

முல்லைத்தீவு, டிசெ.24

முல்லைத்தீவு, பாலிநகர் கிராமத்தில் வாள் மற்றும் கொட்டன்களால் தாக்கப்பட்ட இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. இந்த சம்பவத்தில் பாலிநகரைச் சேர்ந்த குணபாலசிங்கம் நிருசன் (வயது-23) என்ற இளைஞரே படுகாயமடைந்த நிலையில் பொத மக்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

பாலிநகர் கிராமத்தில் அண்மை நாள்களாக மதுப்பழக்கத்திற்கு அடிமையான இளைஞர் குழுவின் அடாவடித்தனம் அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் ஒரு குழுவினர் மதுபோதையில் வீதியில் நின்று அடாவடித்தனம் புரிந்ததோடு மோட்டார் சைக்கிளில் வந்த குறித்த இளைஞருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதன்போது அவர் மீது வாள் வீச்சை மேற்கொண்டு விட்டுத் தப்பித்து சென்றுள்ளனர்.

இதனால் படுகாயமடைந்த இளைஞர் பொதுமக்களால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் மல்லாவிப் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (கு-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகள்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# நவாலி மகா வித்தியாலத்துக்கு கட்டட வசதிகளை ஏற்படுத்துக

## கல்வி இராஜாங்க அமைச்சருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், டிசெ.22

2016 ஆம் ஆண்டு முடிவடைய உள்ள நிலையில் நவாலி மகா வித்தியாலயத்துக்கான கட்டடத் தேவை குறித்த முன்மொழிவுகளுக்கு உரிய தரப்பினர் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை

இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாக்கிருஷ்ணனுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

புத்தகங்களுக்குப் பதிலாக ஐ-பாட் வசதிகளுடன் மாணவர்களுக்கான கற்கைவசதி அளிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கல்வி அமைச்சர் இணைந்து இலங்கையின் கல்வியில் புரட்சிமிகு மாற்றத்தை ஏற்படுத்த முயல்கின்றனர்.

இந்தக் காலகட்டத்திலும் நவாலி மகா வித்தியாலயம் முழுமையாக உட்கட்டுமான வசதி இன்றி இருப்பது கவலையளிக்கிறது.

நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிய நவாலி மகாவித்தியாலய மாணவர்களும் நல்லதொரு பௌதிக சூழலில் வளமிகு கல்வியை பெற்றிட வேண்டும்.

கல்வி இராஜாங்க அமைச்சர் ஆகிய தாங்கள் வடக்கில் பல பாடசாலைகளுக்கு பயணம் செய்து அபிவிருத்தி செய்து நிதி ஒதுக்கீடு செய்து முன்னெடுத்துவரும் நிலையில், நவாலி மகாவித்தியாலயத்துக்கும் ஒரு தடவை பயணம் செய்து அந்தப் பாடசாலைகளின் உட்கட்டுமானத் தேவை மற்றும் பிறநல சேவைகளை 2017ஆம் ஆண்டிலாவது முன்னெடுத்து உதவ வேண்டும்.-என்றுள்ளது. (ற-50)

---

## பௌதிகவியல் / இணைந்தகணிதம்
## A/L 2019, 2018, 2017

பிரபல கல்லூரிகளில் (3 பிரபல தேசிய பாடசாலைகள் உட்பட) பல ஆண்டுகள் மேற்படி பாடங்களைக் கற்பித்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஆங்கில மொழிமூல விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியரினால் தமிழ்/ஆங்கில மொழிகள் மூலம் ஏராளமான பயிற்சிகளுடன் (தனிப்பட்ட முறையிலும்) கற்பிக்கப்படுகிறது. வகுப்புக்கள் நடைபெறுகின்றன. பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**R. பாலசுப்பிரமணியம் BSc, PGDE**
**42/1, இந்துக்கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, Pink House, Jaffna.**
**சித்தவைத்தியசாலை முன்பாக.**
**077 242 3400/ 077 887 1217/ 077 517 8727**

---

## (பிரதேசசபை துணுக்காய்)
## வரவு செலவுத்திட்டம்

துணுக்காய் பிரதேசசபையின் 2017ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டம் துணுக்காய் பிரதேசசபை அலுவலகத்திலும், மல்லாவி பொது நூலகத்திலும் அலுவலக நேரத்தில் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது என்பதனை தயவாக அறியத்தருகின்றேன்.

22.12.2016 (C 27239) (22.18)
செயலாளர்,பிரதேசசபை
துணுக்காய்

---

## அறிவித்தல்

**வலி.தென்மேற்கு பிரதேசசபை.**
**மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை**
**வட்டாரம் :- 14**
**ஆதன இல:- 26/7 (புதிய பதிவு)**
**உடுவில் றோட்.**

வட்டாரம் 14. உடுவில் றோட், ஆதன இலக்கம் 26/7 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று, சண்டிலிப்பாய் இறை 'கொத்தனை தெல்லித்தல் நரிவேலியடி' என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 09 குளி 3.96 கொண்ட இவ்வாதனமானது கல்வயல் சண்டிலிப்பாயைச் சேர்ந்த தம்பிஐயா அரிச்சந்திரன் பெண் ஜெனதா அவர்களால் மெமோறியல் ஒழுங்கை, மானிப்பாயைச் சேர்ந்த அற்றோனித்தத்துவக்காரரான கந்தசாமி வரதராசா மூலம் வெள்ளைக்கண்ணு மனோகரன் பெண் லில்லி என்பவருக்குப் பிரசித்த நொத்தாரிஸ் செல்வி கிருஸ்ணவேணி சந்திரலிங்கம் முகதாவில் நிறைவேறிய 204ஆம் இலக்க 14.03.2011 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.நா.சரவணமுத்து அவர்களால் வரையப்பட்ட 199ஆம் இலக்க 2004.07.11 ஆம் திகதிய நில அளவைப் படத்தின் பிரகாரம் Lot 07 நிலப்பரப்பு 08 குளி 5.96 கொண்ட இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாகப் பிரசுரத்திகதியிலிருந்து 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் வெள்ளைக்கண்ணு மனோகரன் பெண் லில்லி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றோன்.

**செயலாளர் ,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.** (வெ/7097) (1L18)

---

## 2017ஆம் ஆண்டுக்கான றெட்பானா, கற்சிலைமடு, ஒட்டுசுட்டான் பொதுச்சந்தைகள், கற்சிலைமடு, ஒட்டுசுட்டான், மாங்குளம், முத்தையன்கட்டு, மாட்டிறைச்சிக்கடைகள் மற்றும் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் கோழி இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க ஏலங்கூறும் அறிவித்தல்

மேற்படிசந்தைகள், கடைகளுக்கான 2017.01.01 – 2017.12.31 வரை குத்தகைக்கு வழங்குவதற்காக ஏலங் கூறும் நடவடிக்கை கீழ் குறிப்பிடப்படும் விவரத்துக்கமைய நடைபெறவுள்ளது.

ஏலங்கூறும் இடம் :- அலுவலகமண்டபம்,
புதுக்குடியிருப்பு பிரதேசசபை.

ஏலங்கூறும் திகதி :- 2016.12.29
வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணி

ஏலத்தில் பங்குபற்றுவோர் மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூபா1,000.00 (ஆயிரம் மட்டும்) உம் மீளளிக்கக் கூடிய வைப்புப்பணமாக ரூபா5,000.00 (ஐயாயிரம் மட்டும்) உம் செலுத்திப் பற்றுச் சீட்டினைக் குறித்த தினத்தில் குறித்த இடத்தில் முற்பகல் 8.30 தொடக்கம் 10.30 மணிவரை பெற்றுக் கொள்ள முடியும்.

**கறுப்புப்பட்டியலில் உள்ளவர்கள் ஏலத்தில் பங்கு பற்றத் தகுதியற்றவர்களாவார்கள்.**

ஏலத்தில் தெரிவுசெய்யப்படும் குத்தகையாளர் ஏலத் தொகையின் 1/3 பகுதியை உரிய வரிகளுடன் உடன் அலுவலகத்தில் பணத்தினைச் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொண்டு அன்றைய தினமே அலுவலகத்தில் ரூபா 25 பெறுமதியான முத்திரைகள் இரண்டுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும். ஏலத்தில் பங்குபற்றுவோர் வதிவிடத்தை உறுதிப்படுத்திய கிராமசேவையாளரின் சான்றிதழுடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய நிழற் பிரதியினையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

**மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

(சி/27241) (1L18)
**திரு.ந.ஜெயராஜா, செயலாளர்,**
**பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.**

---

## வீடு, காணி விற்பனைக்கு

மல்லாகம் நீதிமன்ற வீதியில் அமைந்துள்ள 10 பரப்புக் காணியுடன் வீடும் விற்பனைக்கு உண்டு.

**077 494 1750, 021 224 1604**

---

## வாடகைக்கு

கோணாவளை,கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கில் மூன்று றூம், சமையலறை, இரண்டு Bathroom, பெரிய கோல் முதலாம் மாடியில் வாடகைக்கு விடப்படும்.

**தொடர்பு: 077 732 8370** (C 27198) (14,17,18)

---

## Air Ticketing வகுப்புக்கள்

மற்றும் 2 மாத பயிற்சிகள் தற்போது நடைபெறுகின்றன. முற்பதிவுகளுக்கு விஷேட கழிவுகள்.

SB Travels & Tours (Pvt) Ltd.
**216, கஸ்தூரியார் வீதி, யாழ்.**
021 222 9555, 021 222 8555, 076 691 1082

---

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி, ஈச்சமோட்டை, கடற்கரை வீதியிலுள்ள ஒரு பரப்பும் 16 குளியும் உள்ள காணியும் அதனுள் அடங்கும் வீடும் விற்பனைக்குண்டு.

**077 614 6434**

---

## இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொய்லர், கல்பேட் கோழிகள் விற்பனைக்கு உண்டு. (சுகாதார முறைப்படி சுத்தம் செய்யப்படுகின்றது) தினமும் காலை 6மணி தொடக்கம் மாலை 7மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர்பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்.

---

## பெயர்மாற்றம்

மாதனை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைச் சேர்ந்த **விக்னேஸ்வரன்** ஆகிய நான் எனது பெயரை **இன்றிலிருந்து விக்கினராசா** எனப் பெயர்மாற்றி சகல ஆவணங்களிலும் கைையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

**- விக்கினராசா -**

---

## தேவை

ஆடை உற்பத்தி நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதி, விற்பனை முகவரும் தேவை. (25 வயதிற்கு மேல் ஆண்கள் மட்டும் விரும்பத்தக்கது.)

**தொடர்பு: 077 670 1495/ 077 559 0495 / 021 227 1495**

---

## வேலையாள்கள் தேவை

ஹாட்வெயர், பெயின்ரிங்,வயறிங் வேலை தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். (கொக்குவில், கோண்டாவில், இணுவில் பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது).

**076 752 8957**

---

## பெயர்மாற்றம்

இல- 02, சென்பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **பேடினன் சந்திரன் நிருஷன்** ஆகிய நான் எனது பெயரை **நிருஷன் சந்திரன் பேடினன்** என மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.

**நிருஷன் பேடினன்**

---

## பெண் உதவியாளர் தேவை

London இல் பிறந்து வளர்ந்த 16 வயதுடைய India (சென்னை) பல்கலைக்கழகத்தில் கற்கும் தாய், தந்தையுடன் தங்கியிருக்கும் பெண் ஒருவரைப் பார்ப்பதற்கு பெண் உதவியாளர் ஒருவர் தேவை. அத்துடன் India செல்வதற்கான அனைத்து வசதிகளும் செய்து தரப்படும்.

**30 வயதுக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.**
(9 am - 7p.m)

077 175 5720, 077 021 0255

---

## "O" பொசிடிவ் சிறுநீரகம் உடனடியாக தேவை

சிறுநீரகம் பாதிப்புக்குள்ளான ஒருவருக்கு "O" பொசிடிவ் வகையைச் சேர்ந்த சிறுநீரகம் ஒன்றை உடனடியாய் பொருத்த வேண்டுமென வைத்தியர்கள் பரிந்துரை செய்துள்ளனர். அவசரமாக சிறுநீரகம் ஒன்றை வழங்குபவருக்கு [illegible]

[illegible]

**தொடர்பு: 0771 692 093**

---

## பொது அறிவித்தல் - மாந்தை கிழக்கு பிரதேசசபை

மாந்தைகிழக்கு பிரதேசசபையின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட வரைபு மக்களின் பார்வைக்காக பிரதேசசபையிலும் பிரதேசசபை பொது நூலகத்திலும் வைக்கப்பட்டுள்ளதால் 22.12.2016 தொடக்கம் 30.12.2016 வரை அலுவலக நேரங்களில் வருகைதந்து பார்வையிடுவதுடன் தங்களது கருத்துக்களையும் முன்வைக்கலாம் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

செயலாளர்,
மாந்தைகிழக்கு, பிரதேசசபை.

---

## நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
## ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

### கூலிக்கான கூறுவிலை கோரல்

சங்கத்தால் களஞ்சியசாலை அமைப்பதற்கான கூலிக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இவ்வேலையினை கூலி அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் இவ்வேலைக்கான கூறுவிலைப் பத்திரத்தை 30.12.2016 ஆம் திகதிக்கு முன் சங்கக் காரியாலயத்தில் இருந்து பெற்று பூர்த்தியாக்கப்பட்ட கூறுவிலைப்பத்திரத்தை 07.01.2017 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்

**பொதுமுகாமையாளர்**
**நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.** (27846)
**தொ.பே. 021 222 2143** (13.18)

---

## புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டம் - 2017 மக்கள் பார்வைக்கு

1987ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் 2017 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

பொதுமக்கள் இதனை கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் எதிர்வரும் 23.12.2016 ஆம் திகதியிலிருந்து 29.12.2016 ஆம் திகதிவரை பார்வையிடலாம் என்பதனை சபையின் செயலாளர் திரு.ந.ஜெயராஜா அவர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

### பார்வையிடும் இடங்கள்

- தலைமை அலுவலகம் - புதுக்குடியிருப்பு
- உப அலுவலகம் - புதுக்குடியிருப்பு
- உப அலுவலகம் - ஒட்டுசுட்டான்
- உப அலுவலகம் - ஒலுமடு
- பொதுநூலகம் - ஒட்டுசுட்டான்

**ந.ஜெயராஜா**
**செயலாளர்,** (சி.27242)
**புதுக்குடியிருப்பு பிரதேச சபை.** (13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி முகமாலை பகுதியில் அண்மையில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு மிதிவெடி சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்ச்சி டாஸ் நிறுவனத்தால் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. அந்தப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள டாஸ் நிறுவனத்தினர் அங்கு மீட்கப்பட்டுள்ள வெடிபொருள்கள் மற்றும் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் மீட்கப்பட்டுள்ள வெடிபொருள்களை காட்சிப்படுத்தி அவை தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்தினர்.(ற-6)

# திண்மக் கழிவு அகற்றலில் வவு. நகர சபை படுமோசம்

## வடக்கு உறுப்பினர் தியாகராசா குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 24

வவுனியா நகர சபை திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்காவிட்டால் வவுனியா மாவட்ட மாகாண சபை உறுப்பினர்கள் வீடுகளுக்கு முன்பாகப் பொது மக்கள் திண்மக் கழிவுகளைக் கொட்டுவதைத் தடுக்க முடியாது. இவ்வாறு எச்சரித்தார் வடமாகாண சபை உறுப்பினர் தியாகராசா.

வட மாகாண சபையின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட விவாதத்தில் கடந்த புதன்கிழமை முதலமைச்சரின் அமைச்சுக்கள் தொடர்பான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வவுனியா நகரசபை எல்லைக்குள் உள்ள மக்கள் குடியிருக்க முடியாது இடம்பெயரும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். திண்மக் கழிவு அகற்றல் படுமோசமாக உள்ளது. பொது மக்கள் திண்மக் கழிவுகளை மாகாண சபை உறுப்பினர் வீடுகளுக்கு முன்னால் கொண்டு வந்து போடுவதற்கு எத்தனிக்கின்றார்கள். இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்கின்றார்கள். நவீன முறையில் திண்மக்கழிவுகள் அகற்றுவதற்கு உரிய வசதிகளை செய்து தரவேண்டும்.

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் பல உள்ளூராட்சி வீதிகள் திருத்தப்படாது மிக மோசமான நிலையில் உள்ளன. கனகராயன்குளம் கிராமத்தில் ஒரு சுற்றுலா மையம் ஒன்றை அமைத்துக் கொடுக்கவேண்டும் - என்றார். (ற-7)

### மன்னார் மதுவரி திணைக்களத்தால் 215 வழக்குகள் தாக்கல்

மன்னார், டிசெ. 24

மன்னார் மாவட்டத்தில் இந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் 215 வழக்குகள் மன்னார் நீதி மன்றத்தில்தாக்கல்செய்யப்பட்டுள்ளன என்று மாவட்ட மதுவரித் திணைக்களத்தின் பொறுப்பதிகாரிஎஸ்.ரஞ்சன் தெரிவித்தார்.

கசிப்பு வடித்தமை, அனுமதிப்பத்திரம் இன்றி சாராயம், கள், பியர் போன்றவை விற்பனை செய்தல், சட்ட விரோதமான முறையில் கஞ்சா போதைப் பொருள்களை தம் வசம் வைத்திருந்தமை உள்ளிட்ட வழக்குகளே தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மன்னாரில் 187 கிலோ கிராம் கேரள கஞ்சாப் பொதிகளும் மீட்கப்பட்டு மன்னார் நீதி மன்றத்தில் ஒப்படைக்கப்பட்டன.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி வரை மன்னார் மாவட்டத்தில் 4 லட்சத்து ஆயிரத்து 671 லீற்றர் பியர் (மோல்ட்) வகை குடிபானம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 10 ஆயிரத்து 747 லீற்றர் வெளிநாட்டு மது வகைகளும், 4 லட்சத்து 7 ஆயிரத்து 271 லீற்றர் அரச சாராய வகைகளும் நுகர்வோரால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அனுமதிப்பத்திரம்பெற்ற மது விற்பனை நிலையங்களுக்கு எதிராக 31 குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டு தண்டப் பணம் அறவீடு செய்யப்பட்டுள்ளது -என்றார். (ற-5,56)

# எல்லைகள் பறிபோகாதவாறு திட்டங்களைச் செயற்படுத்துக

## வடக்கு உறுப்பினர் சிவநேசன் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.24

முல்லைத்தீவின் எல்லைக்கிராமங்கள் பறிபோகாதவாறு பாதுகாக்கும் வகையில் முதலமைச்சரின் அமைச்சால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் மற்றும் வடக்கு அமைச்சர்களுடைய திட்டங்கள் எல்லைப் பகுதிகள் வரைக்கும் விஸ்தரிக்கப்படவேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் க. சிவநேசன் கோரிக்கை விடுத்தார்.

வட மாகாண சபையின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்ட விவாதத்தில் முதலமைச்சரின் அமைச்சுக்கள் தொடர்பான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கில் சுற்றுலா மையங்கள் அமைக்கப்படுவது தொடர்பில் பேசப்படுகின்றது. முல்லைத்தீவு கயட்டப் பகுதி மற்றும் குறுந்துமலை ஆகிய இடங்கள் மிக முக்கியமான இடங்கள். அவற்றையும் சுற்றுலா மையங்களாக அறிவிக்க முன்வரவேண்டும். முல்லைத்தீவு மாவட்டமே பறிபோகும் நிலையில், அங்கு குடியேறி எமது எல்லையை பாதுகாக்க எவரும் முன்வருதில்லை. சுற்றுலா மையங்களை அறிவித்தாவது அந்தப் பகுதிகளைக் காக்க வேண்டும்.

தண்ணிமுறிப்புக் கிராமம் 5 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டது. அங்கு இன்றுவரை எவருமே மீளக்குடியமரவில்லை. அதற்கு போதிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப் படவில்லை.- என்றார்.

விவாதத்தின்போது பிரதி அவைத் தலைவர் கமலேஸ்வரன், உறுப்பினர்களான சிவமோகன், தியாகராசா, சுகிர்தன் ஆகியோரும் உரையாற்றினர்.

பிரதி அவைத் தலைவர் கமலேஸ்வரன்

"உள்ளூராட்சி சபைகளின் செயற்றிட்டம் தொடர்பில் உரை நிகழ்த்திய முதலமைச்சர், மாந்தை கிழக்கு பிரதேசத்தில் பாய் நெசவுக்காக நடப்பாண்டில் 2.8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்திருந்தார். அது இன்றுவரை எமக்குத் தெரியாது. பொருளாதார மையத்தின் மரக்கறி வாணிபம் மாங்குளத்தில் அமைக்கப்படவுள்ளது என்று தெரிவித்ததையடுத்து அதற்கான இடத்தை மாங்குளம் சந்தை நிர்வாகம் ஒதுக்கியது. அந்த இடம் தற்போது வர்த்தகர்களுக்கு வழங்கப்படாததனால் சபையின் வருமானம் இழக்கப்பட்டுள்ளது. தற்போது பொருளாதார மையமும் வருமா என்ற கேள்வி எழுந்துள்ளது."

உறுப்பினர் சிவயோகன்

"வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளின் கீழ் 9 ஆயிரத்து 91 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் உள்ளன. அவற்றில் 6 ஆயிரத்து 742 கிலோமீற்றர் வீதி திருத்தப்படாதுள்ளது. வீதித் திருத்தங்களுக்காக 88 மில்லியன் ரூபா மட்டுமே ஒதுக்கப் பட்டுள்ளது. அந்த நிதியில் 2.6 கிலோமீற்றர் வீதிகளையே செப்பனிடமுடியும். அதனால் வடக்கில் செப்பனிடப்பட்ட வீதிகளைப் பராமரிப்பதற்கு இந்த நிதியைப்ப பயன்படுத்த வேண்டும்."

உறுப்பினர் தியாகராசா

"எனது ஒதுக்கீட்டிலும், உறுப்பினர் இந்திராசாவின் ஒதுக்கீட்டிலும் வவுனியாவில் ஒரு வீதியைத் திருத்துவதற்கு ஒதுக்கீடு செய்தோம். அந்த நிதியில் எமக்கே தெரியாது செயலாளர் தான் நினைத்த வீதியைத் திருத்தியுள்ளார். இதேபோன்று இந்த ஆண்டு ஒதுக்கீட்டில் ஒரு வீதித் திருத்தத்துக்கு அனுமதித்த நிதியும் வேறு வீதிக்கே பயன்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் செயலாளரைக் கேட்டால் எந்த வீதி உடன் திருத்தப்படவேண்டியது என்பது தமக்கே தெரியும் என்கிறார். இதுதான் தற்போதுள்ள நிலமை."

உறுப்பினர் சுகிர்தன்

"உள்ளூராட்சி திணைக்களங்களால் வழங்கப்படும் பணிகள் பல தரமற்ற ஒப்பந்தகாரர்களிடம் வழங்கப்படுகின்றன. பணிகளும் தரமற்றுக் காணப்படுகின்றன. பருத்தித்துறை பிரதேச சபையின் எல்லைக்குள் போடப்பட்ட வீதிகளில் மதகு இல்லாத இடங்களில் கூட வெள்ளம் வீதிக்கு கீழாகப் பாய்கின்றது. மாகாண சபையில் 28 லட்சம் ரூபா மோசடி எனச் செய்திகள் வருகின்றன. அவ்வாறானால் உயர் அதிகாரிகள் என்ன செய்கின்றனர்?. அவர்கள் ஏன் கண்காணிக்கவில்லை?. இவற்றிற்கும் அப்பால் எதிர்காலத்தில் இடம்பெறப்போகும் பெரிய இடர் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். எமது பகுதிகளில் பெரிய கட்டடங்களை அமைக்கும் போது தீ அணைப்பு சேவை வாகனம் செல்லும் வசதி உண்டு என்ற சான்றிதழ் பெற்றே அமைக்கப்படவேண்டும். இங்கு மறுக்கப்படுபவர்கள் அந்தச் சான்றிதழை கொழும்பில் பெறுகின்றனர். இது உடனடியாக தடுக்கப்பட வேண்டும்." (ற-21,101)



# பயிற்சித் தரத்திலான விவசாய போதனாசிரியர் நியமனங்கள்

## 12 பேருக்கு வழங்கியது வடக்கு விவசாய அமைச்சு

யாழ்ப்பாணம், டிசெ. 24

வடக்கு விவசாய அமைச்சால் பயிற்சித்தர விவசாயப் போதனாசிரியர்கள் பதவிக்கான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

12 பேருக்கான நியமனக் கடிதங்களை வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அவரது அலுவலகத்தில் அண்மையில் வழங்கினார் என்று அமைச்சால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

அதில் உள்ளதாவது:

விவசாயிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு விரிவாக்க சேவையை முன்னெடுப்பதில் விவசாயப் போதனாசிரியர்களின் பங்களிப்பு இன்றியமையாதது. வடக்கு விவசாயத் திணைக்களத்துக்கு அனுமதிக்கப்பட்ட 161 விவசாயப் போதனாசிரியர்களது ஆளணியில் தற்போது 103 விவசாயப் போதனாசிரியர்களே கடமையாற்றுகின்றனர். 58 வெற்றிடங்கள் நிலவுகின்றன.

இந்தப் பதவிக்கான ஆள் சேர்ப்புத் திட்டத்தில் கோரப்பட்டுள்ள தகுதியான விவசாய டிப்ளோமாவைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் போதிய அளவு வடக்கில் இல்லாத காரணத்தாலேயே இந்த வெற்றிடங்களை நிரப்ப முடியாத நிலை நீடிக்கிறது.

வெற்றிடங்களை ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்யும் நோக்கிலேயே க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞான பாடத்தில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளில் இருந்து போட்டிப் பரீட்சையின் மூலம் 12 பேர் பயிற்சித் தர விவசாயப் போதனாசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். பயிற்சிக் காலத்தில் இவர்கள் வவுனியா விவசாயக் கல்லூரியில் விவசாய டிப்ளோமா பயில்வதற்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்படவுள்ளது. பட்டம் பெற்றவர்கள் பின்னர் நிரந்தரமாக விவசாயப் போதனாசிரியர் பணிகளில் உள்ளீர்க்கப்படுவார்கள்.

நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்ச்சியில் விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர் - என்றுள்ளது. (ற-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கக் கிளையை அகற்றுமாறு தீர்மானம்

முல்லைத்தீவு, டிசெ. 24
ஒட்டுசுட்டான் முத்துஐயன் கட்டு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஆளுகைக்குட்பட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பகுதியில் வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் அமைக்கப்பட்ட கிளையை உடனடியாக அகற்ற வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் இணைத்தலைவர்கள் தீர்மானம் நிறைவேற்றினர்.

ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் கடை கரிப்பட்ட முறிப்பில் இயங்குகின்றது. வவுனியா வடக்கு ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தினர் தமது கிளைக் கடை ஒன்றை அதே பகுதியில் அமைத்துள்ளனர். இது தொடர் பாக கடந்த 19ஆம் திகதி நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. இந்த விடயத்தை ஆராய்ந்த இணைத் தலைவர்கள் ஒரு சங்கத்தில் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் அண்மையில் உள்ள ஒரு சங்கத்தால் கிளைக் கடைகள் நடத்துவது ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. அந்தப் பகுதியில் அமைந்த சங்கக் கிளைக் கடையை உடனடியாக அகற்ற வேண்டும் என்று தீர்மானித்தனர். (ற-7)

# வசூலிக்கும் நிதியை பயன்படுத்துவதில்லை உள்ளூராட்சி சபைகள்

## வடக்கு உறுப்பினர் அரியரட்ணம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ.24
பிரதேச அபிவிருத்திகள் உள்ளூராட்சி சபையிலேயே முழுமையாகத் தங்கி உள்ளன. அவை மக்களிடம் வசூலிக்கப்பட்ட நிதியை அபிவிருத்திக்கு பயன்படுத்தாது நிரந்தர வைப்பில் இட்டு வைத்துள்ளன. அபிவிருத்தி ஏற்படுவதில்லை. 2017ஆம் ஆண்டு இந்தப் பிரச்சினையை நிவர்த்தி செய்து 75 வீதமான நிதியையேனும் அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம் வேண்டுகோள் விடுத்தார்.

வடக்குமாகாணசபையின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட விவாதத்தில் முதலமைச்சரின் அமைச்சுகள் தொடர்பான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைகளில் அட்டவணைப்படுத்தப்படாத வேலைவாய்ப்பு 2015ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. 2016ஆம் ஆண்டு விண்ணப்பம் கோரப்பட்டு நேர்முகத் தேர்வும் இடம்பெற்றன. எனினும் நியமனங்கள் வழங்கப்படவில்லை. இந்த நியமனங்களில் புள்ளியிடும் நடைமுறையில் ஒவ்வொரு சபையிலும் முரண்பாடுகள் காணப்படுகின்றன. பாதிக்கப்படுபவர் மேல் முறையீடு செய்தாலும் பதில் அளிக்கப்படுவதில்லை. புதுக்குடியிருப்பு, சாவகச்சேரி பிரதேச சபைகளின் நூலகர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் ஒருவர் பல்கலைக்கழகத்தில் துறைசார் தகமை உடைய போதும் நிராகரிக்கப்பட்டுள்ளார். மற்றொருவர் தாய் மற்றும் தந்தையை போர் காரணமாக இழந்தபோதும் அவருக்கும் சந்தர்ப்பம் மறுக்கப்பட்டுள்ளது. அவர்கள் மேல் முறையீடு செய்தும் நீதி வழங்கப்படவில்லை.- என்றார்.

மாகாண சபை உறுப்பினர் விந்தன் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி அமைச்சின் கீழ் வரும் யாழ். மாநகர சபையின் மோசடி தொடர்பில் பிரேரணை மூலம் ஒரு குழு நியமிக்கப்பட்டது. கஸ்தூரியார் வீதியில் ஐந்து மாடிக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டு சட்டவிரோதமாக வழங்கப்பட்டது. அதை நாம் பலமுறை சுட்டிக்காட்டினோம் அந்த விசாரணை அறிக்கை இதுவரை வெளியிடப்படவில்லை. அதற்கான எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. தெற்கில் கடந்த காலத்தில் இடம்பெற்ற பல சம்பவங்களுக்கு விசாரணைகள் இடம் பெறுகின்றன. ஏன் வடக்கில் இடம்பெற்றவைக்கு விசாரணைகள் இல்லை என மக்கள் கேள்வி எழுப்புகின்றார்கள்?-என்றார். (ற-10,107)



# மழலைகளுக்கான பாவைகள் அரங்கு

*திங்களன்று நல்லூரில் ஆரம்பம்*

யாழ்ப்பாணம், டிசெ.24
நத்தார் மற்றும் புதுவருட கொண்டாட்டங்களை முன்னிட்டு சிறுவர்களுக்கான பொம்மைகள் நாடகங்கள் நல்லூரில் மேடையேற்றப்படவுள்ளன.

செயல் திறன் அரங்க இயக்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நாடகங்களின் மேடையேற்றங்கள் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகி புதுவருட தினத்தன்று முடிவடையும்.

வருடாந்தம் நல்லூர் திருவிழாக் காலத்தில் சிறுவர் நாடகங்களை தயாரித்து மேடையேற்றும் செயல் திறன் அரங்க இயக்கம் அந்த அனுபவத்தின் அடிப்படையில் மழைக் காலத்தில் மழலைகளுக்கான பாவைகள் அரங்கு என்ற இந்த நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளது. ஏழுநாள்கள் நடைபெறுகின்ற இந்த நாடக விழா சிறுவர்களுக்கான அரிய வாய்ப்பாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டது.

பொம்மைகளும் நிழற்பாவைகளும் விசேடமான மேடையில் நாடகமாடுகின்றன. பாட்டி, கொண்டைச் சேவலார்,பசுவும் புலியும், நாங்கள் காற்று ஆகிய நாடகங்கள் இந்த விழாவில் ஆற்றுகை செய்யப்படவுள்ளன. ஒரு நாளில் இரண்டு நாடகங்கள் ஆற்றுகை செய்யப்படும். முன்பதிவுகளை 0212216061 என்ற தொலைபேசி அழைப்பின் மூலம் மேற்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

# தொண்டர் ஆசிரியருக்கு அவசர கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 24
வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் எதிர்வரும் திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள தனியார் கல்வி நிலையத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட அனைத்து தொண்டராசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு வடக்கு மாகாண தொண்டராசிரியர் சங்கத் தலைவர் இ. ஜெயராஜ் தெரிவித்தார். (ற-7)




கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு கிறிஸ்மஸ் குடில்கள், சவுக்குக் கிளைகள் மற்றும் அலங்காரப் பொருள்களின் விற்பனை யாழ். நககரிலும், புறநகர்ப் பகுதிகளிலும் சூடுபிடித்துள்ளன. பாலன் பிறப்பு சொரூபங்கள், அலங்கார மின்விளக்குகள் என்பவற்றை மக்கள் ஆர்வத்துடன் கொள்வனவு செய்து வருகின்றனர். வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் இருந்து சவுக்குக் கிளைகள் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டுகின்றன. (ற-135)

# முடிவுறாத நிலையில் அபிவிருத்தி வேலைகள்

யாழ்ப்பாணம், டிசெ.24
பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டத்தின் கீழ் (2016ஆம் ஆண்டு) ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பல முடிவுறாது உள்ளமை இனம்காணப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகள் பிரதேச செயலக மட்டத்துக்குக் கீழ் சமூக மட்ட அமைப்புக்கள் (சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பொது நிறுவனங்கள், அரச நிறுவனங்கள்) மற்றும் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி வேலைகளே முடிவுறாத நிலையில் உள்ளன் என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக நிதிகளை ஒதுக்கிய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதன் முன்னேற்ற விவரங்களைக் கோரியுள்ளனர். அதேவேளை இந்த வருட இறுதிக்குள் சகல வேலைகளும் முடிவுறுத்தப்பட்டு ஒதுக்கப்பட்ட சகல நிதித் தேவைப்பாட்டுக்கும் சம்பந்தப்பட்ட பொது அமைப்புக்களுக்குச் செல்ல வேண்டும். சில பிரதேச சபைகள் பிரதேச செயலகங்களில் 100வீத வேலைகள் முடிவுற்ற நிறுவனங்களும் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-50)

# அம்புலன்ஸ் படகுச் சேவை தீவகத்தின் தேவை

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 24
தீவகங்களில் ஏற்படும் அவசர நிலையில் நோயாளர்களை கொண்டுசெல்வதற்கு நோயாளர் அம்புலன்ஸ் படகு சேவையை வழங்குவதற்கான ஆளணியையும் அவர்களுக்குரிய பயிற்சிகளையும் வழங்கவேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.விந்தன் கோரினார்.

வடமாகாண சபையின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்ட விவாதம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் சுகாதார சுதேச மருத்துவம் மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சுக்கள் தொடர்பான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சுகாதாரத் துறை என்பது பின்தங்கிய நிலையில் இருந்து தற்போது மீண்டு எழுகின்றது. மத்திய அரசு ஆளணி விடயத்திலும் சரி, நிதி ஒதுக்கீடுகளிலும் சரி பங்களிப்புச் செய்யவில்லை.

தீவகத்தில் உள்ள பிரதேச வைத்தியசாலைகளுக்கு அடிப்படையில் பல தேவைகள் இருக்கின்றன. ஆளணிப் [illegible], மருத்துவர்களின் குறைபாடுகள், [illegible] போக்குவரத்து சிரமமாக உள்ளது. சிலவற்றுக்கு தீர்வு காணப்பட்டிருந்தாலும் சில குற்றபாடுகள் நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளன.

அனலைதீவு, எழுவைதீவுகளுக்கும் அம்புலன்ஸ் படகுச் சேவை நீண்ட காலமாக இல்லாதுள்ளன. அதற்குரிய படகுச் சேவைகளையும் விரைவில் செய்யப்பட வேண்டும். வேலணை வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டி நீண்ட காலமாகப் பழுதடைந்துள்ளது. அதனையும் சீர் செய்து கொடுக்க வேண்டும். போர் இடம்பெற்ற காலத்தில் சுகாதாரத் தொண்டர்களாக பணிபுரிந்தவர்களுக்கான நியமனங்கள் இன்னும் வழங்கப்படவில்லை. அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்.- என்றார். (ற-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ.போ.ச வின் முன்னாள் தலைவருக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, டிசெ. 24
இலங்கைப் போக்கு வரத்துச் சபையின் முன்னாள் தலைவர் சஷி வெல்கமவை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறுகொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
இவர் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவராக இருந்தபோது இடம்பெற்ற 126 மில்லியன் நிதி மோசடி தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
குறித்த வழக்கு நேற்று முன்தினம்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
இந்த வழக்கு எதிர்வரும் 26ஆம் திகதி மீண்டும் விசரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.
சஷி வெல்கம முன்னாள் அமைச்சர் குமார வெல்கமவின் நெருங்கிய உறவினர் என தெரிவிக்கப்படுகிறது. (து)

## சிங்கமலை காட்டில் தீ

கொழும்பு, டிசெ. 24
ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹற்றன் டிக்கோயா நகரப் பகுதிக்கு குடிதண்ணீர் வழங்கும் சிங்கமலை பாதுகாப்பு வனப்பிரதேசத்தினுள் நேற்று முன் தினம் மாலை 6 மணியளவில் ஏற்பட்ட தீயினால் பல ஏக்கர்கள் எரிந்து நாசமாகியுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.
மத்திய மாகாணத்தில் நிலவும் வறட்சியான கால நிலையால் தீ வேகமாகப் பரவி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
தீயினால் இங்கு காணப்படும் அரிய வகை தாவரங்கள், விலங்குகள் அழிக்கப்பட்டு இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (து)

### நிலையான அபிவிருத்தி வேலைத் திட்டம்


# தமிழர்களின் பகுதிகளுக்கு முன்னுரிமை

### ஜனாதிபதியின் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 24
மைத்திரிபால சிறிசேன பதவியேற்று, ஜனவரி மாதம் 8ஆம் திகதியுடன், இரண்டு வருடங்கள் நிறைவடைகின்றன. அதனையொட்டி, நிலையான அபிவிருத்தி யுகம் - மூன்றாண்டு ஆரம்பம் எனும் தொனிப்பொருளில் பல்வேறான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. அதில், தமிழ் பேசும் பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.
இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. அபயக்கோன்.
ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.



அவர் தெரிவித்ததாவது:
தேசிய வைபவம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் பங்குப்பற்றலுடன், கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனவரி மாதம் 8ஆம் திகதி இடம்பெறும்.
நாட்டின் எதிர்காலச் சந்ததியினரை கவனத்திற்கொண்டு, நல்லாட்சி அரசால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதில், வறுமையொழிப்பு முக்கியமானதாகும்.
"நிலையான அபிவிருத்தி யுகம்- மூன்றாண்டு ஆரம்பம்" எனும் தொனிப்பொருளிலான வேலைத்திட்டம் ஜனவரி 2ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஆரம்பித்து வைக்கப்படும்.
அதன் பின்னர், ஜனவரி 4ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும், ஜனவரி 8ஆம் திகதி, பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்திலும், ஜனவரி 19ஆம் திகதி கண்டி- குண்டசாலையிலும், ஜனவரி 25ஆம் திகதி முல்லைத்தீவிலும் வேலைத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்படும்.
பெப்ரவரி மாதம் முதலாம் திகதி அம்பாறை, அக்கரைப்பற்று, பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி ஹற்றனிலும் பல்வேறான வேலைத் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.
வறுமை ஒழிப்பு எனும் தொனிப்பொருளில், 15 ஆயிரம் கிராமங்களை இனங்கண்டு, அந்தக் கிராமங்களில் 5 ஆண்டுகளில் வறுமையை இல்லாமல் செய்வதற்கான செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும். அதற்கு அப்பால், நிலையான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக, 2,000 சிறுவர் குழுக்கள் நியமிக்கப்படும்.
பாடசாலைத்தோட்டம் என்ற வேலைத்திட்டத்தை மீண்டும் உருவாக்கி, அதனை ஒரு கலாசாரமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இவையெல்லாம், அடையாள அரசியல் என்பதற்கு அப்பால், அபிவிருத்தி அரசியல் எனும் நோக்கிலேயே முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது—என்றார்.(து)



### ஒரே குடும்பத்தைச் சேர்ந்த

## ஈழத் தமிழர் மூவர் நியூசிலாந்தில் சாவு

### தீ விபத்தால் ஏற்பட்ட பரிதாபம்

ஒக்லாந்து, டிசெ. 24
நியூசிலாந்தின் சவுத் ஒக்லாந்தில் நேற்று முன் தினம் அதிகாலை வீட்டில் ஏற்பட்ட தீவிபத்தில் ஈழத்தமிழர்கள் மூவர் பரிதாபகரமாக உயிரிழந்தனர். மேலும் மூன்று பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
நேற்றுமுன்தினம்அதிகாலை 3 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம் பெற்றது.
இந்தச்சம்பவத்தில்கைலேஸ் தனபாலசிங்கம் என்ற அகதிகள் நலன்களுக்கான சட்டவாளர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டார்.
அவரது மனைவி (வயது-39), மகன் (வயது-5), மாமியார் (வயது-66)ஆகியோர் இந்த விபத்தில் உயிரிழந்தனர்.
மேலும், கைலேஸ் தனபாலசிங்கத்தின் 11 வயது மகளும், மாமனாரும் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டனர்.
அதிகாலையில் வீட்டுக்குள் தீவிபத்து ஏற்பட்டதையடுத்து வெளியே ஓடி வந்த சிறுமி தகவல் வெளியிட்டதையடுத்து. அயலவர்கள், தீயணைப்புப் படையினரை உதவிக்கு அழைத்தனர்.
தீயணைப்புப் படையினர் வந்து உயிரிழந்தவர்களின் சடலங்களையும், காயமடைந்தவர்களையும் மீட்டனர்.
கைலேஸ் தனபாலசிங்கம், 10 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் இருந்து அகதியாகச்சென்று சவுத் ஒக்லாந்தில் குடியேறியிருந்தார். (து)

## மாகாணத்துக்கான நிதியைக் குறைப்பதா நல்லாட்சியின் இலட்சணம் ?

### கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

களுவாஞ்சிகுடி, டிசெ.24
இம்முறை முன்வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் எமது மாகாண சபைக்கு நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டுள்ளன. இதுவா நல்லாட்சியின் இலட்சணம் எனக் கேள்வி எழுப்பினார் கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் உதுமாலெப்பை.
கிழக்கு மாகாணசபை 2017 வரவு-செலவுத்திட்ட அமர்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
எனக்குத் தெரிந்த மட்டில் பல வரவு-செலவுத் திட்டங்களைச் சந்தித்துள்ளேன். இதுவே மிகவும் குறைந்த ஒதுக்கீடுகளைக் கொண்ட வரவு-செலவுத் திட்டமாகும்.
சென்ற அரசில் இவ்வாறு நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்படவில்லை. ஆனால் தற்போது நல்லாட்சி என்று சொல்லப்படும் இந்த அரசிலேயே இவ்வாறு நடந்துள்ளது.
மாகாண சபைக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதில் நல்லாட்சி அரசு கரிசனை கொண்டுள்ளதாகக் கூறப்படும் நிலையில் இவ்வாறு நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது.
இதுவா நல்லாட்சி? தற்போது மாகாணசபை முறையானது பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்ற அளவுக்கு மாறியுள்ளது. இதுவரை எமது மாகாண சபையூடாக முன்னெடுக்கப்பட்டுள்ள திட்டங்களில் 93 திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமல் உள்ளன.
மாகாண சபை ஊடாக எமது மக்கள் ஏதாவது பெற வேண்டுமாக இருந்தால் எமக்கு அதிகாரம் வழங்கப்படவேண்டும்.
எனவே இந்த நல்லாட்சி அரசு குறித்த விடயங்களில் கவனம் செலுத்தி எமது மாகாண சபைக்கான அதிகாரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.
(து-ய-49)

## கிழக்கில் மதத் தலங்களுக்கு காணி பகிர்வதில் பாரபட்சம்

### மாகாணசபை உறுப்பினர் குற்றச்சாட்டு

திருமலை, டிசெ.24
கிழக்கு மாகாணத்தில் மத வழிபாட்டுத் தலங்களுக்குக் காணிகள் பகிர்ந்தளிப்பதில் பாரபட்சம் நிலவுவதாக மாகாண சபை உறுப்பினரும் குழுத்தலைவருமான ஆர்.எம். அன்வர் தெரிவித்தார்.
கிழக்கு மாகாணசபை அமர்வின் மூன்றாவது நாளான நேற்று முன் தினம் வியாழக்கிழமை, கிழக்கு மாகாண வரவு-செலவுத் திட்டத்தில் வீதி அபிவிருத்தி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
மதத் தலங்களுக்கு காணிகள் வழங்கப்படுகின்றபோது சமனான பகிர்வு இடம் பெறுகின்றதா, உதாரணமாக திருகோணமலை கொமரங்கடவல பௌத்த விகாரைக்கு அண்மையில் ஜனாதிபதி வருகையின்போது 15 ஏக்கர் காணி வழங்கப்பட்டது. ஆனால் முஸ்லிம் மற்றும் தமிழ்ச் சமூகத்தின் மதத் தலங்களுக்கு மாத்திரம் நீண்ட காலக் குத்தகைக்கு பகிர்ந்தளிப்பது எந்த விதத்தில நியாமானது?
இவ்வாறான செயல்கள் மூலம் சிறுபான்மைச் சமூகங்களுக்கு ஒரு நியாயமும், பெரும்பான்மைச் சமூகத்தினருக்கு இன்னொரு நியாயமும் காட்டுவதானது இந்த நாட்டில் நல்லாட்சியிலும் சம உரிமை இல்லை என்பதையே உணர்த்துகின்றது எனவே, இவை மாற்றப்பட்டு அனைவருக்கும் சமனான பகிர்வு அளிக்கப்பட வேண்டும்- என்றார். (து-ய-47)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வறுமை ஒழிப்புத் திட்டம் குறித்து ஜனாதிபதி தலைமையில் ஆராய்வு

கொழும்பு, டிசெ 24
இலங்கையை வறுமையிலிருந்து விடுவிக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலோபாய அணுகுமுறைகள் தொடர்பான சிறப்புக் கலந்துரையாடலொன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.



2030 ஆம் ஆண்டளவில் வறுமை நிலையற்ற இலங்கையை கட்டியெழுப்பும் நோக்குடன் உலகளாவிய பேண்தகு அபிவிருத்தி இலக்குகளைப் பூர்த்தி செய்ய 2017ஆம் ஆண்டிலிருந்து பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இந்தச் செயற்றிட்டங்கள் குறித்த நீண்ட கலந்துரையாடலும் இதன்போது இடம்பெற்றது. இதேவேளை, வறுமை காரணமாக ஏற்பட்டுள்ள சிக்கல்கள், அவற்றைத் தீர்ப்பதற்கான வழி வகைகள் மற்றும் தேசிய உணவு உற் பத்தி நிகழ்ச்சித் திட்டம் குறித்தும் இங்கு பேசப்பட்டது. அமைச்சர்களான சரத் அமுனுகம, சஜித் பிரேமதாச ஆகியோரும் ஜனாதிபதியின் செய லாளர் பி.பீ. அபயக்கோன் உள்ளிட்ட அமைச் சுக்களின் செயலாளர்கள், அத்துரலியே ரதன தேரர் மற்றும் அரச உத்தியோகத்தர்களும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (த)

## விடைத்தாள்கள் திருத்தும் பணிக்கு 68 பாடசாலைகள் மூடப்படும்

கொழும்பு, டிசெ 24
2016 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணிகளுக்காக 68 பாடசாலைகள் மூடப்படவுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.
ஜனவரி 2ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை விடைத்தாள்கள் திருத்தும் பணிகளுக்காக 68 பாடசாலைகள் முற்றாக மூடப்படவுள்ளதுடன் 19 பாடசாலைகள் பகுதி அளவில் மூடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# சமையல் ஆடையில் புத்தரின் உருவம்

கொழும்பு, டிசெ 24
கௌதம புத்தரின் உருவம் பொறிக்கப்பட்ட ஆடைகள் மற்றும் கையுறைகள் என்பன சுங்கப் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளன.




ஏப்ரன் எனப்படும் சமையல் செய்பவர்கள் பயன்படுத்தும் ஆடை மற்றும் கையுறைகள் அடங்கிய 904 பொதிகள் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.
குறித்த பொருள்கள் இந்தியாவின் தூத்துக்குடியில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ளதோடு, இலங்கை ஊடாக இவை ஸ்லோவேனியாவுக்கு அனுப்பப்படவிருந்ததாகச் சுங்கப் பிரிவினர் குறிப்பிட்டனர். (த)

## ஏப்ரல்,மே மாதங்களில்

# உள்ளூராட்சி தேர்தலுக்கு தயாராகுங்கள்

## அமைப்பாளர்களுக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, டிசெ 24
சர்ச்சைக்குள்ளாகியுள்ள உள்ளூராட்சித் தேர்தல் அடுத்த வருடம் ஏப்ரல், மே மாதங்களில் நடக்குமெனவும், அதற்காக இப்போதிருந்தே தயாராகுமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்துள்ளார்.
கொழும்பு, இலங்கை மன்றக் கல்லூரியில் கடந்த புதன்கிழமை நடந்த சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களின் கூட்டத்தில் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி இந்த வேண்டுகோளை விடுத்தார்.
கிராம மட்டத்திலிருந்தே தொகுதி அமைப்பாளர்கள் தங்கள் பிரசாரங்களை ஆரம்பிக்கவேண்டும் எனவும், பல்வேறு மனஸ்தாபங்களால் கட்சிப் பணிகளிலிருந்து ஒதுங்கிநிற்பவர்களையும் இணைத்துக்கொண்டு தமது பணிகளைத் தொகுதி அமைப்பாளர்கள் மேற்கொள்ளவேண்டும் எனவும் அவர் பணித்துள்ளார். (த)


## பொலிஸ் ட்ரக்கின் மாற்றுச் சில்லையே களவாடிய திருடன்

நாரஹேன்பிட்டி பொலிஸ் கராஜ் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த பொலிஸ் ட்ரக் வாகனமொன்றின் மாற்றுச் சில்லு களவாடப்பட்டிருப்பதாக நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
களவாடப்பட்டுள்ள இந்தச் சில்லின் பெறுமதி சுமார் 30 ஆயிரம் ரூபா என முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டிருப்பதாக வும், திருடனைப் பற்றி இதுவரை தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை எனவும் நாரஹேன்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். (த)

# தேடி வருகிறது சொத்து

## நீங்களா அந்த அதிர்ஷ்டசாலி

கொழும்பு, டிசெ 24
20 வருடங்களுக்கு முன்பு தன்னிடம் பணிபுரிந்த இலங்கையர் ஒருவருக்கு அவரது எஜமானின் சொத்தில் பங்கொன்று ஒதுக்கப்பட்டிருப்பதாக எஜமானின் மகன் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்குத் தெரிவித்துள்ளதையடுத்து அந்த ஊழியரைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் பணியக அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.
தனது தந்தை இப்போது உயிரிழந்துவிட்டார் எனவும், அவரது உயிலில் இந்த ஊழியருக்கு ஒரு பங்கு ஒதுக்கப்பட்டிருப்பதால் அவரைத் தேடிக் கண்டுபிடித்துத் தருமாறும் எஜமானின் மகன் பணியகத்துக்கு அறிவித்துள்ளார்.
ஹமீட் லெப்பே மொஹமட் சியான் எனும் இந்த ஊழியரின் இலங்கைக் கடவுச் சீட்டு இலக்கம் I 150 924 எனவும், அவரோ அல்லது அவரது குடும்பத்தினரோ இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 011 2864 100 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் பணியகத்தின் அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த)



பதில் பிரதம நீதியரசராக உயர்நீதிமன்ற நீதியரசர் பிரியசாத் டெப் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. அபயக்கோனும் கலந்துகொண்டார். (த)

## சிறுவர்களை வைத்து பிச்சை எடுத்த கும்பல் கதிர்காமத்தில் சிக்கியது

சிறுவர்களைப் பிச்சையெடுக்கும் தொழிலில் ஈடுபடுத்தும் குழுவொன்றைச் சேர்ந்த சிலரைக் கதிர்காமம் பொலிஸார் கடந்த புதன்கிழமை மாலை கைதுசெய்தனர்.
யாத்திரிகள் பலர் கதிர்காமம் பொலிஸ் நிலையத்தில் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் திடீர்ச் சோதனைநடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதன்போது பிச்சையெடுக்கும் தொழிலில் ஈடுபடுத் தப்பட்ட ஏழு சிறார்களும், அந்தத் தொழிலை முன் னெடுத்த பெண்ணொருவர் உட்பட ஐவரும் கைது செய்யப்பட்டனர். அத்துடன், அங்கவீனர்களாக நடித்து, பிச்சை எடுத்து வந்த ஆறு பேரும் சிக்கினர். இவர்கள் அங்கவீனர்கள் அல்லர் என்பது விசாரணை களில் தெரிய வந்தது. கைதுசெய்யப்பட்ட அனைவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (த-ய-41)

# 14 நாள்களுக்குள் தீர்வில்லாவிடின் கடிதங்கள் வராது

## ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் தபால் தொழிற்சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ 24
தபால் ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு இன்னும் 14 நாள்களுக்குள் தீர்வு பெற்றுத்தர அரசு முன்வராது போனால், ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகை உட்பட அரச நிறுவனங்களுக்கான தபால் விநியோகமும் இடைநிறுத்தப்படும் எனக் கூட்டுத் தபால் தொழிற்சங்க முன்னணி அறிவித்துள்ளது.
முன்னணியின் ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
தபால் சேவை ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையின் பின்னால் எந்தவொரு அரசியல் நோக்கங்களும் கிடையாது எனவும், பொது நலன்களே உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.
தபால் ஊழியர்களுடன் விளையாட்டுக் காட்டாமல் அவர்களது தேவைகளுக்குச் செவிசாய்க்குமாறும் அவர் அரசைக் கேட்டுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள் உற்பத்தியை ஊக்குவிக்க ரூ.10 லட்சம் தர முன்வந்த சிவாஜி

## சிவாஜிலிங்கத்தின் கருத்தால் சூடாகியது சபை

தி.சோபிதன்

கள்ளு விடயத்தால் நேற்றுமுன்தினம் உசாரடைந்தது மாகாண சபை அமர்வு.

வடக்கு மாகாண சபையின் நேற்றுமுன் தினம் அமர்வு பதினெட்டு உறுப்பினர்களுடன் தான் ஆரம்பித்தது. அவைத் தலைவர் சபை நடவடிக்கைகளை ஆரம்பிக்க, விவசாய அமைச்சின் நடப்பாண்டு மற்றும் அடுத்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் உரையின்பின்னர் குழுநிலைவிவாதம் இடம்பெற்றது. எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, தமது தரப்பு உறுப்பினர்களுக்கும் நேரம் ஒதுக்கித் தாருங்கள்-என்றார். அதனை அவைத் தலைவரும் ஏற்றார்.

5 நிமிடம்தான் விவசாய அமைச்சின் பாதீடு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது என்று தெரிவித்த அவைத் தலைவர், உறுப்பினர்களுக்கு நேரக்கட்டுப்பாட்டை விதித்தார். சபை உறுப்பினர்கள் அனைவரும் கருத்துக்கள் தெரிவிக்க விரும்பினால் அவர்கள் 5 நிமிடங்கள் வரை கருத்து தெரிவிக்க முடியும். அதற்கும் அப்பால் பேசினால் நான் மணி அடிப்பேன். அவ்வாறு மணி அடித்தால் அவர்களின் நேரம் முடிவடையும். அத்துடன் அவர்களின் கருதுக்களையும் இடைநிறுத்த வேண்டும். அவ்வாறு நேரம் தேவைப்படும் பட்சத்தில் கேட்டுக் கதைக்க முடியும். அதை விடுத்துத் தொடர்ந்து கதைக்க முற்பட்டு நிறுத்தாமல் கதைத்தால் அடுத்த உறுப்பினர் எழுந்து கருத்துக்களைப் பகிரவேண்டும். இவ்வாறான நடைமுறைகள் எல்லாம் நாடாளு மன்றிலும் காணப்படுகின்றன. அதன் படி நாமும் பின்பற்றுவோம்-என்றார்.

**முணுமுணுப்பினால் கடுப்பானார்**

இதன்போது உறுப்பினர் சர்வேஸ்வரனை அவைத் தலைவர் அவதானித்துவிட்டார். "நீங்கள் என்ன முணுமுணுக்கிறீர்கள்? இது தான், இவ்வாறான செயற்பாடுகளால்தான் பிரச்சினைகள் ஏற்படுகின்றன"-என்றார்.

"வடக்கு மாகாண விவசாய அமைச்சரின் பாதீடு மிகவும் அருமையானது. ஐங்கரநேசன் எனக்கு மாமனோ மச்சானோ இல்லை. எனக்கும் அவருக்கும் தனிப்பட்ட ரீதியில் எவ்வித பிரச்சினைகளும் இல்லை. ஆனால் பொதுவிடயங்கள் என்று வரும்போது நான் யார் என்றாலும் பார்க்கமாட்டேன்"-என்றார் உறுப்பினர் லிங்கநாதன். வழக்கமாக ஐங்கரநேசன் மீது ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துபவர் இவரே. "நான் அமைச்சர் மீதான ஊழல்கள் தொடர்பில் எனக்குக் கிடைத்த வீடியோ, எழுத்து மூல ஆதாரங்களைப் பெற்றுக் கொண்டேன். அதனை நான் விசாரணைக் குழுவிட மும் ஒப்படைத்துவிட்டேன். இனி எனக்கும் அவருக்கும் எவ்வித பிரச்சினைகளும் இல்லை. இருந்ததும் இல்லை. இனிவிசாரணைகளின் அதிகாரிகள் அதனைப் பார்த்துக்கொள்வர்கள்" என்றுகூறி அமர்ந்தார்.

**செங்கோலை நோக்கி ஓடுபவர்**

அதன் பின்னர் எழுந்த உறுப்பினர் பரஞ்சோதி நடப்பாண்டு பாதீடு சொன்னபடி முழுமையாக நடந்திருந்தால் நல்ல விடயம். நான் அரசியல் ரீதியாகச் செயற்படுவதில்லை என்று விவசாய அமைச்சர் அடிக்கடி கூறுவார். இங்கு இருக்கின்ற அனைவருமே அரசியல்வாதிகள்தான்.

வழமையாகச் சபையில் செங்கோலைத் தூக்க ஓடுபவரான சிவாஜிலிங்கம், தேநீர் இடைவேளைக்கு 10 நிமி டங்கள் இருக்கும்போது சபைக்கு வந்தார்.

"கூட்டுறவுத்துறையில் கூட்டுறவாளர்களுக்குச் சிலை வைப்பது பெரிய விடயமல்ல. இன்று வரை கூட்டுறவுத்துறை நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. எனவே அதற்குத் தேவையான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று உறுப்பினர் சுகிர்தன் கூறினார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் மர நடுகைத் திட்டத்தில் முறைகேடுகள் இருப்பதாகக் கருத்துக்கள் வந்தாலும் நாங்கள் மாகாண சபைக்கு வரும்போது கைதடி வெளிப் பகுதிகளில் நீருக்குள் நிற்கின்ற மரங்களைப் பார்க்கும்போது சந்தோசமாக இருக்கின்றது. ஏனெனில் அவைகள் மிக அழகாக நிற்கின்றன.

முன்னைய ஆட்சிக் காலத்தில் மணல் அதிகளவில் அகழ்ந்தனர். ஆனால் தற்பொழுது அந்த நிலை மாறி மண் அகழ்வுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அப்படி இருந்தும் முன்னைய ஆள்கள் சில முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் அவர்களால் எதனையும் செய்ய முடியவில்லை"-என்றார் சுகிர்தன். அத்துடன் தேநீர் இடைவேளைக்காகச் சபை ஒத்திவைக்கப்பட்டது.

**நெல்லியடி மரக்கறி**

மீண்டும் அவை கூடியபோது, நெல்லியடிச் சந்தையின் மரக்கறி விவகாரத்தை உறுப்பினர் சிவயோகன் சபைக்குக் கொண்டுவந்தார். "தற்போதைய மரக்கறி வியாபார நிலவரத்தின் படி விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். விவசாயிகள் தங்களது விவசாயத்துக்கு ஏற்ற வருமானத்தை பெறுவது குறைவு" -என்றார்.

இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில், தனக்கும் 5 நிமிடம் பேசக் கிடைக்குமா? என்ற கேள்வியுடன் சிவாஜிலிங்கம் அவைத் தலைவரைப் பார்த்தார். "சபையில் அனைத்து உறுப்பினர்களுக்கும் 5 நிமிடங்கள் ஒதுக்கப்படும். மேலதிக நேரத்தைக் கேட்டுப் பெற முடியும். ஆகவே உங்களுக்கும் கிடைக்கும்"-என்றார் அவைத் தலைவர்.

**இரணைமடுவுக்கு மாற்றுத் திட்டம் எங்கே?**

"இரணைமடுத் திட்டத்தைத்தான் வேண்டாம் என்று சொல்லி அதை தடுத்து அதற்காக மாற்றுத் திட்டத்தைக் கொண்டுவருவதாகக் கூறியிருந்தார் அமைச்சர் ஐங்கரநேசன். தற்போது 3 வருடங்கள் கடந்து விட்டபோதும் அந்த மாற்றுத்திட்டம் எங்கே? தவராசா கதைத்ததுகளை நீங்கள் வெளியிடாதேங்கோ என்று ஒவ்வொரு ஊடகங்களுக்கும் ஏறி இறங்கிறார் அவர்" என்று எதிர்க்கட்சித் தலைவர் தவராசா உட்குத்தலாகக் கூறினார்.

"பசு மாடுகள் கொடுக்கும்போது ஒரு மாடு தான் பல இடங்களுக்கும் சுத்துது. கள்ள மாடுகளும் இதற்குள் சிக்குகின்றன. அம்மாச்சி உணவகம் சிறந்தது" என்றும் அவர் கூறிவிட்டு அமர்ந்தார்.

**புலிகளின் விலைக் கட்டுப்பாடு இப்போதில்லை**

"தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் மரக்கறி, மீன்கள் விற்பனையில் ஒரு கட்டுக்கோப்பு இருந்தது. தற்போது இல்லை" என்று உறுப்பினர் அனந்தி தெரிவித்தார். "கடற்படைத் தளபதியாக இருந்த சூசை, மீன் விலைகள் தொடர்பில் இறுக்கமான கட்டுப்பாடுகளை வைத்திருந்தார். மரக்கறி விலைகள் தொடர்பில் பால்ராஜ் கட்டுக்கோப்புகளை வைத்திருந்தார். அவர்களின் காலத்தில் நியாய விலைகள் காணப்பட்டன. தற்பொழுது அப்படி இல்லை. தனி ஒருவர் நிதியைத் திருப்பியதை ஏற்க முடியாது. ஊழல்கள் இடம்பெற்றதா என்பது தொடர்பில் விசாரணையை மேற்கொள்ளவேண்டும்"-என்றார் அனந்தி.

அவர் அவ்வாறு கதைத்துக்கொண்டிருக்கும்போது உறுப்பினர்களின் கருத்து தெரிவிக்கும் நேரம் முடிவடைவதற்கான மணி அவைத் தலைவரால் அடிக்கப்பட்டது.

"தூர இடத்திலிருந்து வருகிறவர்களுக்கு நேரம் அதிகமாகக் கிடைப்பதைப் போன்று யாழ்ப்பாணத்திலும் தூர பிரதேசங்களிலிருந்து வரும் எங்களுக்கும் நேரம் அதிகரித்துத் தாருங்கள்" என்று அவைத் தலைவரைப் பார்த்துக் கேட்டார் அனந்தி. அதற்கு அவைத் தலைவரும் அனுமதி கொடுத்தார்.

**ஒரு பெண்தானே கூடக் கொடுக்கலாம்**

அதனை அவதானித்த சயந்தன் "வடக்கு மாகாண சபையின் ஒரே ஒரு பெண் பிரதிநிதி என்பதால் இரண்டு மடங்கு நேரம்கூட வழங்கலாம்" -என்றார்.

அதன் பின்னர் அனந்தி தொடர்ந்து கருத்துக் களை தெரிவித்தார். "கூட்டுறவுத்துறையை முன்னேற்றவேண்டும். தொடர்ந்து கொண்டிருக்கும் பெண்கள் மீதான வன்முறைகளையும் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்"-என்றார்.

புகையிலைச் செய்கையை முடிவுக்குக் கொண்டு வருவது என்றால் அதற்குரிய மாற்றுத் திட்டங்களை கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை எடுங்கள் என்று சிவாஜிலிங்கம் கருத்து முன்வைத்தார். "தற்போது 2 ஆயிரத்து 500 கோடி ரூபா பெறுமதியான திட்டம் இரணைமடுத் திட்டம். அதை அவ்வாறே சொல்லுங்கள். அதை விட்டு மில்லியன் பில்லியன் எண்டா சனத்துக்கும் ஒண்டும் விளங்காது. யாழ்.மாவட்டதில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் என்று ஒன்றும் இல்லை எண்டு நினைக்கின்றேன். அதேபோல நன்னீர் திட்டமும் எந்தளவில் இருக்குதோ தெரியவில்லை"-என்றார் சிவாஜிலிங்கம்.

**உள்ளுக்க ஒண்டுமில்ல**

"கூட்டுறவு நகர்(கோப்சிற்றி)எண்டு ஒன்றைத் திறந்துபோட்டு அங்க உள்ளுக்க ஒண்டுமில்லாமல் வெறுமையா போட்டுகளை போட்டுட்டு குந்தி இருப்பதில் ஒரு பயனும் இல்லை. கள் குடிப்பவர்களைக் கட்டுப்படுத்துகிறோம் எண்டு அவர்களைக் கள்ளச்சாராயப் பழக்கத்துக்கு நாங்கள் தள்ளி விடக்கூடாது. கள் உற்பத்தியை நாங்கள் ஊக்குவிக்க வேண்டும். தேவையென்றால் அதற்கு எனது நிதியிலிருந்து ஒரு மில்லியன் ரூபாவை நான் ஒதுக்குகிறேன். மற்றையதுகளை விட கள் பாதிப்பு குறைவானது. குடிக்கிறவங்களை நாங்கள் நிப்பாட்டு எண்டா நிப்பாட்டமாட்டாங்கள். நான் குடிப்பதில்லை-என்றார் சிவாஜி.

அதன்போது எழுந்த சர்வேஸ்வரன் "கள் குடிப்பவர்களை ஊக்குவிக்கவேண்டும் என்ற வார்த்தையை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும். அதைசெய்யவேண்டும்என்றுமாகாண சபையில் கதைப்பது முறையல்ல" என்றார்.


"சபையின் தேநீர் இடைவேளை நேரத்தில் அதைக் கொடுக்கலாமே" என்று சயந்தன் கிண்டலாகக் கூறினார். கள் விட யத்தால் அவை சிறிது நேரம் கலகலப்பானது.

"கிளிநொச்சியில் விவசாய அமைச்சின் செயற்பாடுகள் பாராட்டத்தக்கதாக உள்ளன. எங்கட இடத்தில கொடுக்கின்ற ஆடுகள், மாடுகள் குட்டிகளோ, கன்றுகளையோ போடுவதில்லை. அது ஏன் எண்டு எங்களுக்குத் தெரியவில்லை" என்று உறுப்பினர் பசுபதிப்பிள்ளை கூறினார். "மற்றைய இடங்களில கழித்துவிடப்பட்ட - கன்றுகள், குட்டிகள் போட முடியாத கால்நடைகளைத்தான் எங்கட பிரதேசங்களுக்குத் தள்ளி விட்டினமோ தெரியாது. ஒரு மாடு 5 பேரிட்ட மாறிமாறி சுத்தி வந்திருக்கிற நிலமையும் இருக்குது. இதுகளையும் கவனத்தில் எடுக்க வேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை யோகராசா (ஆசாரியார்)

(தலைவர் - தச்சந்தோப்பு அருள் மிகு முத்துக்குமார சுவாமி ஆலய பரிபாலனசபை)



தச்சந்தோப்பு.கைதடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை யோகராசா (ஆசாரியார்) 21.12.2016 புதன் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மூத்த புதல்வனும் காலஞ்சென்ற பெரியதம்பி செல்லத்துரை மற்றும் சொர்ணலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பமலரின் அன்புக் கணவரும் யுஜிதா (கனடா), யுகந்தா, யுவீந்திரன் (கொழும்பு), யுஜீவன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் த்நதையும் மோகனதாசன் (கனடா), ஜெகன், Dr. அபிரா (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மாமனாரும் மகிஷாயினி (கனடா), மகிழ்யன்(கனடா), பிரவீன், தனிஷ்கா ஆகியோரின் அன்புப் பேரனும் இராசேந்திரம், காலஞ்சென்ற பஞ்சாட்சரம் மற்றும் மல்லிகாதேவி, இராசலிங்கம் (பிரான்ஸ்), மகாதேவன் (லண்டன்), ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), அருள்நேசன் (CEB யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், விக்னேஸ்வரநாதன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), ஸ்ரீதரநாதன் பவானி (ரதி- கனடா), அம்பிகைபாகன்(கர்ணன் - பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான பவளமலர், குகனேஸ்வரன் (ரங்கன்), நிமலன் மற்றும் பத்மராணி, கனகாம்பிகை, பிரேம்குமார் (ஓய்வுநிலை நிதி உதவியாளர் - பிரதேச செயலகம் - நல்லூர்), பர்வதகுமாரி (சுதா - பிரான்ஸ்), ரூபினி (லண்டன்), சஜிதா (பிரான்ஸ்), மனோகரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் குகனேஸ்வரி, வசந்தி, சிவராசா(கனடா), ஜெசிந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் வாகீசன், ஜெயகீசன், வருணகீசன், ரம்சிதா, பார்த்தீபன் (பிரான்ஸ்), கார்த்தீபன், காயத்திரி, பற்றீசியா (பிரான்ஸ்), பிரசன்னா (பிரான்ஸ்), கசிந்தா (பிரான்ஸ்), கிருஷாந் (லண்டன்), சந்தோஷ் (லண்டன்), ஆதீசன்(பிரான்ஸ்), ஆர்த்திசா (பிரான்ஸ்), அபிசா (பிரான்ஸ்), சௌமிகா, காணவி, சிவஜனனி (கனடா), சிவஜனீசன்(கனடா), சிவசெந்தூரி (கனடா) ஆகியோரின் பெரியதந்தையும் நிரோஜனன், அனோஜனன், சாருஜனன், நாகரட்சன், ஆரபி, ஆரணி, தாட்சாயினி, கஜானனி, அபிராம் (பிரான்ஸ்), கபில்ராம் (பிரான்ஸ்), அம்பாளினி(பிரான்ஸ்) ஆகியோரின் பெரியமாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.12.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

586, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 600 4376/ 077 918 8454

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணல் கொள்ளையிடும் மையங்கள் முற்றுகை



மட்டக்களப்பு மாவட்டத்தின் கரடியனாறு பொலிஸ் பகுதிக்குட்பட்ட பகுதியில் மணல் கொள்ளை நடைபெறும் பகுதிகள் விசேட பொலிஸ் பிரிவினால் நேற்றுமுன்தினம் முற்று கையிடப்பட்டன. மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் விசேட பொலிஸ் குழுவால் வேப்பவட்ட வான் பகுதியில் மணல் கொள்ளை நடைபெறும் பகுதிகள் முற்று கையிடப்பட்டன.

வேப்பவட்டவான், புத்தம்புரி குளத்தை அண்டிய எட்டு பகுதிகளில் மணல் கொள்ளையிடும் இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக விசேட பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி அலேசியஸ் டியராட் தெரிவித்தார்.

கரடியனாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.ஆர்.பி.சேனநாயக்க தலைமையிலான பொலிஸ் குழு மற்றும் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் விசேட பொலிஸ் குழு என்பன இணைந்து இந்த முற்றுகையை மேற்கொண்டன. குறித்த எட்டுப் பகுதிகளிலும் பெருமளவான மணல் குவிக்கப்பட்டிருந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் எவரும் கைதுசெய்யப்படவில்லை யெனப் பொலிஸார் தெரிவித்தனர். (த-ய)

## அபிவிருத்திச் சட்டம் ஊவாவில் தோற்கடிப்பு

பதுளை, டிசெ.24

ஊவா மாகாண சபையின் அனுமதியைப்பெற்றுக்கொள்வதற்காக மத்திய அரசினால் அனுப்பப்பட்ட துரித அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை வேலைத்திட்டச் சட்டவரைவு நான்கு அதிகப்படியான வாக்குகளினால் தோல்வியுற்றுள்ளது.

ஊவா மாகாணசபை அமர்வு அவைத் தலைவர் ஏ.எம். புத்ததாச தலைமையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது. இதில், மத்திய அரசினால் அனுப்பப்பட்ட துரித அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை வேலைத்திட்டச் சட்ட வரைவு குறித்து அவைத் தலைவரினால் அறிவிக்கப்பட்டது. இந்தச் சட்ட வரைவுக்கு மாகாண சபையின் அனுமதி கோரப்பட்டிருப்பதால் அது குறித்த விளக்கத்தை மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று அவைத் தலைவர் ஏ.எம். புத்ததாச கூறினார்.

சபை அமர்வில், சட்டவரைவுக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும், எதிராக ஆளும்கட்சியினரும் உரையாற்றினர். இறுதியாக, சட்டவரைவு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

வாக்கெடுப்பில் ஆதரவாக ஒன்பது வாக்குகளும், எதிராக பதின்மூன்று வாக்குகளும் கிடைத்தன. இதனடிப்படையில், நான்கு அதிகப்படியான வாக்குகளினால், சட்டவரைவு தோல்வியுற்றது. இந்த வாக்கெடுப்பில், மாகாண முதலமைச்சர் நடுநிலைமை வகித்ததுடன், மாகாண அமைச்சர் உபாலி சமரவீர சட்டவரைவுக்கு ஆதரவாக வாக்களித்தார். ஐ.தே.க. உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராய்ச்சி வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. இந்தச் சட்டவரைவு, ஊவா மாகாண சபையினால் நிராகரிக்கப்பட்டதாக மத்திய அரசுக்கும் அறிவிக்கப்பட்டது. (த-ய-41)


31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி
சறோஜினி சின்னையா

தோற்றம்
1945.07.01

மறைவு
2016.11.24

அம்மா எமது விழிகளின் வாசலில் நீங்கள் வீற்றிருக்க நேற்றைய பொழுதிலிருந்து
பிரிந்து சென்று விட்டதாக எல்லோரும் சொல்லுகிறார்கள்
எங்களிடமிருந்து உங்களை எப்படிப் பிரிக்க முடியும் ?
காலம் துயரை நிறையவே ஊற்றி வைக்கும்
ஆனாலும் அது பாசச் சமுத்திரத்தின் முன் ஒரு சிறு துளியளவே ....

எங்கள் தாயார் அமரத்துவமடைந்த செய்தியறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறி எங்கள் துயரில் பங்கெடுத்த உற்றார், உறவினர், நண்பர்கள், ஊடகத் துறை சார்ந்த நண்பர்கள், புலம்பெயர் தேசங்களிலிருந்து தொலைபேசி வாயிலாகவும் சமூக வலைத்தளங்களிலும் துயர்பகிர்ந்து அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலியினை பிரசுரங்கள், பத்திரிகைகள் மூலமாக வெளியிட்டவர்களுக்கும் பேரன்போடு இருகரம் கூப்பி நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம். அத்தோடு இன்று (24.12.2016) சனிக்கிழமை நண்பகல் 12மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் 31 ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பை மனமுவந்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரையும் சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

மீசாலை வடக்கு,
வேம்பிராய், கொடிகாமம்.
குடும்பத்தினர்.


# பன்னாடுகளின் தலையீட்டால் போர்ப் பூமியாக மாறுகிறது நாடு

### எச்சரிக்கிறது ஹெல உறுமய




யாழ்ப்பாணம், டிசெ. 24

நாடு எதிர்காலத்தில் போர்ப் பூமியாக மாறவுள்ளது. சீனா, இந்தியா, அமெரிக்கா நாடுகளைத் திருப்திப்படுத்த முயற்சித்து அவர்களை நாட்டினுள் அனுமதிப்பது பொருத்தமானது அல்ல. இது போருக்கே வித்திடும்.

இவ்வாறு அபாய எச்சரிக்கை விடுத்தது நல்லாட்சி அரசின் பங்காளிக் கட்சியான ஹெல உறுமய.

ஜாதிக ஹெல உறுமயவின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில்,

சீன நிறுவனத்துடன் அரசு செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை நாட்டுக்கு வெளிப்படுத்தவேண்டும்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சீனாவுக்கு 99 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கியுள்ளது. இது தொடர்பாகச் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நாட்டுக்கு வெளிப்படுத்தவேண்டும்.

அதில் ஒரு நிபந்தனையாக அம்பாந்தோட்டை முதல் காலி வரை மற்றும் அம்பாந்தோட்டை முதல் ஒலுவில் வரை 99 வருடங்களுக்கு எந்தவொரு பன்னாட்டுத் துறைமுகங்கள் அமைக்கக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இவ்வாறான ஒப்பந்தங்கள் நாட்டுக்குப் பொருத்தமானதல்ல. அத்துடன் அரசு நாட்டுக்குள் இந்தியா, சீனா மற்றும் அமெரிக்க நாடுகளை திருப்திப்படுத்த முயற்சித்து வருவதானது எதிர்காலத்தில் நாடு போர்ப் பூமியாக மாறும். அதனால் அரசு சிந்தித்து செயற்படவேண்டும் - என்றார். (த-5)



# ரூபா 3 1/2 கோடி நிதியில் வடிகாலமைப்புத் திட்டம்

செங்கலடி, டிசெ.24

ஆசிய அபிவிருத்தி வங்கியின் சுமார் 3 கோடி 67 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் மட்டக்களப்பு - ஏறாவூர்ப் பிரதேசத்தில் அமைக்கப் படவுள்ள வடிகாலமைப்புத் திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இடர் முகாமைத்துவ அமைச்சினூடாக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏறாவூர் - மிச்நகர், மீராகேணி மற்றும் தாமரைக்கேணி போன்ற கிராமங்களில் காலத்திற்குக் காலம் வெள்ளத்தினால் ஏற்படும் பாதிப்புக்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்த வடிகாலமைப்புத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

ஆரம்ப நிகழ்வில் மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர் ரா.நெடுஞ்செழியன், இடர் முகாமைத்துவ நிலையத்தின் மாவட்ட பணிப்பாளர் எஸ்.இன்பராஜன் மற்றும் ஏறாவூர்ப் பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனிபா ஆகியோரும் கலந்துகொண்டனர். (த-ய-46-47)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# லங்கா சதொசவின் பண்டிகைக்கால விசேட ஊக்குவிப்புத் திட்டம் அறிமுகம்

## அதிக பணப் பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

"லங்கா சதொச விற்பனையகம் ஒன்றிலிருந்து 250 ரூபாவுக்கு அதிகமான பொருள்களை இரண்டு சுவதேசி தயாரிப்புகளுடன் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள் இந்த வெற்றியாளர் தெரிவில் பங்கெடுப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது"



சுவதேசி தயாரிப்புகள்

- கொஹோம்பா
- ராணி
- கொஹோம்ப பேபி
- பேர்ள்வைட்
- லக் பார்

**கொள்வனவுப் பொதி**

இரண்டு சுவதேசி தயாரிப்புகள் உள்ளடங்கலான 250 ரூபாவுக்கு அதிகமான பொருட்கொள்வனவு

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு லங்கா சதொச நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கான விசேட ஊக்குவிப்புத் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

இதன்படி அதிக பணப்பரிசுகளை வெல்லும் வாய்ப்பு வாடிக்கையாளர்களுக்கு கிடைத்துள்ளது.

குறிப்பாக நத்தார் மற்றும் புதுவருட காலத்தில் சுவதேசி தயாரிப்புகளைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கே இந்த அரிய சந்தர்ப்பத்தை சதொச வழங்கியுள்ளது.

இந்த திட்டத்தினை சுவதேசி இன்டஸ்ரியல் வேக்ஸ் பிஎல்சியானது நாட்டின் முன்னணி சுப்பர் மார்க்கெட் தொடரான லங்கா சதொசவுடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ளது.

மேற்படி ஊக்குவிப்புத் திட்டமானது இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரையிலான இரண்டு மாதக் காலப்பகுதிகளுக்கு முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பெப்ரவரி மாதத்தில் மாபெரும் இறுதி வெற்றியாளர் தெரிவு இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள சுவதேசி இன்டஸ்ரீஸ் நிறுவனத்தினர்,

லங்கா சதொச வாடிக்கையாளர்களுக்கு வெகுமதிகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் இந்த ஊக்குவிப்புத் திட்டம் அமைந்துள்ளது. சுவதேசி தயாரிப்புகளை வாடிக்கையாளர்கள் தமது நம்பிக்கைக்குரிய பிரத்தியேகப் பராமரிப்பாக, ஆடைகள் பராமரிப்புத் தயாரிப்பாகத் தெரிவு செய்கின்றமையைக் கௌரவிக்கும் வகையிலேயே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. - என்றனர்.

**எதிர்வருகின்ற பண்டிகைக்காலத்தில் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பணப்பரிசுகளை லங்கா சதொசவிடமிருந்து வெற்றியீட்டுவதற்கான வாய்ப்பு வாடிக்கையாளர்களுக்கு கிடைத்துள்ளது**

1. 21 அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்கள் தெரிவு
2. 100,000 ரூபா பெறுமதி வாய்ந்த பணப் பரிசு
3. ஆயிரம் வெற்றியாளர்களுக்கு 1,000 ரூபாய் பெறுமதியான சதொச அன்பளிப்பு வவுச்சர்கள்




## எலுகா பிரிம் (Eluga Prim) அதிதிறன் பேசி

நுட்பம்

புதிய தொழிநுட்ப நவீனத்துவங்களுடன் அறிமுகம்



பனசொனிக் நிறுவனம் தனது தயாரிப்பான எலுகா பிரிம் (Eluga Prim) அதிதிறன் பேசியை புதிய தொழிநுட்ப நவீனத்துவங்களுடன் அறிமுகம் செய்துள்ளது. இவை 10 ஆயிரத்து 290 ரூபா விலை நிர்ணயத்தில் விற்பனை செய்யப்பட்டுவருகிறது.

இவ்வகை அதிதிறன்பேசிகளில் 4ஜி வோல்ரி காணப்படுவதுடன் கைபேசியின் முன்பக்கமாக கைரேகை ஸ்கானரையும் கொண்டமைந்ததாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அன்ரோயிட் 6.0 மார்ஷ் மெலோ மூலமாக இயங்குநிலை பெறும் மேற்படி அதிதிறன் பேசியானது டுவல் சிம் வசதியையும் 720 இற்கு 1280 பிக்சல் அள வுடைய டிஸ்பிளேயையும் கொண்டமைந்துள்ளது. இவற்றில் மைக்ரோ எஸ்.டி பயன்படுத்துகை மூலமாக 128 ஜி.பி வரை விரிவாக்க திறன் கொண்ட 16 ஜி.பி இனை உள்ளடக்கியதான சேமிப்பகம் காணப்படுகிறது. மேலும் ப்ரிப்பிள் எல்.இடி பிளாஸ் கொண்ட 13 மெகாபிக்சல் ஓட்டோ போகஸ் பின்புற கமரா மற்றும் 5 மெகாபிக்சல் முன்பக்க கமரா என்பன இணைப்புச் செய்யப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.

# நிதி அறிக்கைகளுக்கான விருது வழங்கல்

## சணச அபிவிருத்தி வங்கி வெள்ளி விருதினைப் பெற்றுக்கொண்டது




இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வருடாந்த நிதி அறிக்கைகளுக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வில் சனச அபிவிருத்தி வங்கி நிதி நிறுவனங்கள் பிரிவில் தங்களது 2015 ஆம் ஆண்டுக்கான நிதி அறிக்கைக்கு வெள்ளி விருதினை பெற்றுக்கொண்டுள்ளது.

பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் இடம்பெற்றிருந்த மேற்படி விருதுவழங்கும் நிகழ்வில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க முதன்மை அதிதியாக கலந்து கொண்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.

இதன்படி வருடாந்த அறிக்கைகளுக்கான கௌரவிப்பு மற்றும் விருது வழங்கல் என்பது நிறுவனத்தின் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை கவனத்தில் கொண்டு வழங்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக விரிவான முறையிலும் கவர்ச்சிகரமான வகையிலும் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டமை, செயற்திறன் மதிப்பீடு மற்றும் வெளிப்படைத்தன்மை போன்றன இம்முறை வெற்றியாளர் தெரிவின் போது முக்கிய விடயங்களாகக் கருதப்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் கருத்துரைத்துள்ள சனச அபிவிருத்தி வங்கியின் பிரதி பொது முகாமையாளர் ஹேமால் லொகுகீகன,


"இம்முறை வங்கியின் வருடாந்த நிதி அறிக்கை இரண்டாவது தடவையாகவும் பன்னாட்டு குறியீட்டுக்கிணங்க (GRI) தயாரிக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். இந்த அறிக்கையின் தகவல்களை வெளிப்படுத்துவதற்கு பொருத்தமாக இலங்கை மத்திய வங்கியின் விதிமுறைகள், பங்குப்பரிவர்த்தனையின் விதிமுறைகள், கம்பனிகள் சட்டத்தின் வெவ்வேறு உள்ளம்சங்களின் அடிப்படையிலே நிதி அறிக்கைத் தயாரிக்கப்பட்டுள்ளமை அனைவரின் கவனத்தையும் ஈர்த்திருந்தது. மேற்படி விவரங்களுக்கு மேலதிகமாக வங்கி 2015 ஆம் ஆண்டிற்கான செயற்றிறன் தொடர்பில் தகவல் பலதைச் சாராம்சப்படுத்தித் தெளிவாக சமர்ப்பித்திருந்தமையால் நிதி அறிக்கையானது பரிபூரணமான வருடாந்த அறிக்கையாக அமைந்துள்ளது.

மேலும் முதலீடுகளுக்காகத் தகவல்கள் கவர்ச்சிகரமானவையாகவும், முழுமையாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த விடயங்கள்வெள்ளி விருதை வென்றெடுப்பதற்கு உதவியாக அமைந்திருந்தது" என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸியில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டோர் கைதாகினர்

மெல்போர்ன், டிசெ. 24
ஆஸ்திரேலியாவில் கிறிஸ்மஸ் தினமன்று தாக்குதல் நடத்த திட்டமிட்டனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஐவர் கைது செய்யப்பட்டனர். மேல்போர்ண் நகரில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட திடீர் சோதனையிலேயே குறித்த ஐவரும் கைதாகினர் என்று தெரிவிக்கப்பட்டது. சந்தேக நபர்களின் வதிவிடங்களையும் சோதனை செய்ததில், வெடிபொருள்கள், கூரிய ஆயுதங்கள் மீட்கப்பட்டன. கைது செய்யப்பட்ட 5 பேரில் 4 பேர் ஆஸ்திரேலியாவையும், ஒருவர் லெபனானையும் சேர்ந்தவர்கள். இதனையடுத்து நாட்டின் முக்கிய நகர்களிலும் மக்கள் அதிகமாகக்கூடும்



இடங்களிலும் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டன. மெல்பேர்ண் நகரில் நாளைமறுதினம் ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகள் டெஸ்ட் ஆட்டத்தில் பலப்பரீட்சை செய்யவுள்ள நிலையில் குறித்த ஆட்டத்துக்கான பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டது. (ம-எ)



# துருக்கிச் சிப்பாய்கள் இருவர் உயிருடன் எரித்துக் கொலை

அங்காரா, டிசெ. 24
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் துருக்கிச் சிப்பாய்கள் இருவரை உயிருடன் எரித்துக் கொலை செய்தனர். இந்தக் காணொலி சமூக வலைத்தளங்களில் குறித்த அமைப்பால் பரப்பப்பட்டதை அடுத்து சமூக வலைத்தளங்களின் பாவனையை துருக்கி அரசு முடக்கியது. நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யும் சிப்பாய்களை ஆயுதக் கும்பல் ஒன்று எரித்துக் கொலை செய்வதைப் பார்ப்பது துருக்கி மக்களுக்கு உகந்தது அல்ல. இதனாலேயே சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டன என்று துருக்கி அரசின் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டது. (ம-எ)



# போகோ ஹரமுக்கு எதிரான பே
# நைஜீரிய அரசு கடும் முனைப்பு

நைஜீரிய அரசுக்கு எதிராக போகோ ஹரம் என்ற ஆயுதக் குழு செயற்பட்டுவரும் நிலையில் குறித்த ஆயுதக் குழுவின் பிடியிலிருக்கும் மக்களை மீட்கும் போரில் களமிறங்கியுள்ளது நைஜீரிய அரசு.
நைஜீரியாவின் வடகிழக்கு பிராந்தியமான போர்னோவில் போகோ ஹரம் அமைப்பு அதிக அளவில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. கடந்த 2014 ஆம் ஆண்டு 200 இற்கும் மேற்பட்ட பள்ளிக் குழந்தைகளைக் கடத்திச் சென்று பன்னாடுகளிலிருந்தும் கண்டனத்தைப் பெற்றது. மேலும், கிராமத்திற்குள் புகுந்து பொருள்களை சூறையாடி மக்களைக் கடத்திச் செல்வதையும் குறித்த அமைப்பினர் வாடிக்கையாகக் கொண்டிருந்தனர்.
போர்னோவின் சாம்பிசா காட்டுப்பகுதியில் சுமார் 1300 சதுர கிலோமீற்றர் அளவிற்கு போகோ ஹரம் தனது ஆதிக்கத்தை செலத்தி வருகிறது. இந்தப் பகுதி குறித்த அமைப்பின் கோட்டை என்று பன்னாட்டு ஊடகங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன. இந்த நிலையில் குறித்த பகுதியில் இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்து மக்களை மீட்கும் போரில் கடந்த 14 ஆம் திகதி நைஜீரிய அரசு களமிறங்கியது. நேற்றுமுன்தினம் குறித்த காட்டுப் பகுதியில் போகோ ஹரம் அமைப்பு கடத்தி வைத்திருந்த 2 அ
படையினரால் விடுவிக்கப்பட்டு மீட்கப்பட்ட
நூற்றுக்கணக்கான ஆயுததாரிகள் கொ
கிட்டத்தட்ட 600 பேர் கைதுசெய்யப்பட்டல
தரப்பால் தெரிவிக்கப்பட்டது. 2009 ஆம்
இன்று வரை நைஜீரிய அரசுக் கும் போகே
இடையில் நடைபெற்ற போரில் 20 அ
உயிரிழந்துள்ளனர் என்றும் 26 லட்சம்
இடங்களை விட்டு வெளியேறியுள்ளனர் எ
நாடுகள் சபை அண்மையில் குறிப்பிட்டிரு

# ஜப்பானில் பெரும் தீ விபத்து 140 கட்டடங்கள் தவிடுபொடி

டோக்கியோ, டிசெ. 24
ஜப்பானில் இட்டோகாவா நகரில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட தீவிபத்தில் 140 கட்டடங்கள் தீயில் எரிந்து சாம்பலாகின.
தீ கட்டுக்குள் அடங்காமல் விரைவாகப் பரவியதை அடுத்து குறித்த பகுதியில் வசித்த 500 குடும்பங்கள் துரித கதியில் வெளியேற்றப்பட்டன. உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை என்று முதல் கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் சிலர் தீக் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். தீ விபத்து குறித்து முழுமையான காரணங்கள் இன்னும் கண்டறியப்படவில்லை. விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ம-எ)





சீனாவின் ஹெலோங்ஜியாங் மாகாணத்தில், ஹர்பின் பகுதியில் வருடா
கண்காட்சியும் அங்கு நடைபெறவுள்ளது. இதற்கான பனிச் சிற்ப கலைஞர்க
இணைந்து பனி நகரத்தையும் உருவாக்கி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ளார்

வில்

ஆயிரம் மக்கள்
டனர். இதுவரை
கால்லப்பட்டனர்.
ளார் என்று அரச
ஆண்டிலிருந்து
கோ ஹரமுக்கும்
ஆயிரம் மக்கள்
மக்கள் சொந்த
என்றும் ஐக்கிய
ருந்தது. (ம-எ)

## உக்ரைனின் தேசியப் பூனை

கெய்வ், டிசெ.24
உக்ரைனின் தேசியப் பூனையாக ரீமா என்ற பூனை தெரிவாகிறது.
உத்தியோகபூர்வமற்ற முறையில் இணையம் ஒன்றினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் போட்டியில், அந்த நாட்டைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிக மான பூனைகள் கலந்து கொண்டன. அவற்றில் பல சுற்றுக்களில் வெற்றியீட்டிய 5 பூனைகள் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகின. அவற்றில் ரீமா பலரின் அபிமானத்தைப் பெற்றுத் தேசியப் பூனையாகத் தெரிவானது. (ம-எ)



## ரஷ்யாவில் நிலஅதிர்வு

மொஸ்கோ, டிசெ.24
ரஷ்யாவின் பெற்றோபவ்லஸ்க் பகுதியில் நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் எற்பட்டது என அமெரிக்க புவியியல் திணைக் களம் தகவல் வெளியிட்டது.
ரஷ்ய நேரப்படி இரவு 9:30 மணியளவில் உணரப்பட்ட இந்த அதிர்வு ரிச்டர் அளவில் 5.2 எனப் பதிவாகியது. கடலுக்கடியில் 22 கிலோமீற்றர் ஆழத்தில் உணரப்பட்ட இந்த நடுக்கத்தால் இதுவரை எந்தப் பாதிப்பும் ஏற்பட்டதாக அறிவிக்கப்படவில்லை.
அத்துடன் சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை. (ம-எ)

# அன்றி கார்லோவைச் சுட்டுக் கொன்றவர் எர்டகன் பாதுகாப்புக்கும் சென்றுள்ளார்

## முதல் கட்ட விசாரணையில் அதிர்ச்சித் தகவல் அம்பலம்

அங்காரா, டிசெ.21
துருக்கிக்கான ரஷ்யாவின் தூதுவர் கார்லோவை கொலைசெய்த பொலிஸ் உத்தியோகத்தர் துருக்கி ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு 8 தடவைகள் சென்றவர் என்ற அதிர்ச் சித் தகவல் வெளிப்பட்டது.
துருக்கித் தலைநகர் அங்காராவில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான சமகால கலை தொடர்பான கண்காட்சியில் கலந்து கொள்வதற்காக கார்லோவ் சென்றிருந்தார். நிகழ்ச்சியின் நடுவே கார்லோவிற்கு பாதுகாப்பாகச் சென்ற பொலிஸ் அதிகாரி நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அவர் உயிரிழந்தார். துப்பாக் கிச் சூடு நடத்தியவர் மர்ம நபர் என்று ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்ட போதிலும் பின்னர் நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவரது பெயர் ஆல்டின்டாஸ் என்பதும், அவர் துருக்கி பொலிஸ் உத்தியோகத்தர் என்பதும் தெரியவந்தது. இந்தக் கொலையின் பின்னணியில் இருப்பது யார் என்பது தொடர்பான விசாரணைகள் துருக்கியாலும் ரஷ்யாவாலும் தீவிரமாக நடத்தப்பட்டு வருகின்றன. தனக்கு முழுமையான அறிக்கை வேண்டுமென்று புடின் கேட்டுக்கொண்டுள்ளார்.



முதல் கட்ட விசாரணைகளின் அடிப்படையில் ஆல்டின்டாஸ், துருக்கி ஜனாதிபதி எர்டகனின் பாதுகாப்புக்காக 8 தடவைகள் அவருடன் சென்றுள்ளார் என்பது வெளிப்பட்டது. மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. (ம-எ)

# இனி இல்லை ஊனம்

வார்சா, டிசெ. 24
இறந்தவரின் கையை பிறிதொருவருக்கு வெற்றிகரமாகப் பொருத்தி போலந்து மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.
போலந்து நாட்டைச் சேர்ந்த 32 வயது வாலிபருக்கே இந்த அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. பிறவியிலிருந்து மணிக்கட்டின் கீழ் இயங்க முடியாத குறையுடன் பிறந்த குறித்த வாலிபருக்கு மருத்துவ நிபுணர் அடம் டொமேன்ஸ் விகாவின் தலைமையின் கீழ் குறித்த அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. 13 மணிநேரப் போராட்டத்தின் பின்னர் கை வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டது.



இதன் மூலம் உலகிலேயேமுதன்முறையாக இறந்தவரின் கையைப் பொருத்தி போலந்து மருத்துவர்கள் சாதனை படைத்தனர். கை ஊனமாகப் பிறந்தவர்கள் இந்த அறுவைச் சிகிச்சையின் மூலம் தமது குறைபாட்டிலிருந்து விடுபட முடியும் என்ற நம்பிக்கையை விகா வெளியிட்டார். (ம-எ)

## நீரிழிவு, இருதய நோய்களை தடுக்கிறது சூரியக் குளியல்

லொஸ்ஏஞ்சல்ஸ், டிசெ. 24
சூரியக் குளியல் உடல் நலத்துக்கு நல்லது என்ற பொதுவான கருத்து நிலவுகிறது. இதனால் மேலை நாடுகளில் கடற்கரையில் பொதுமக்கள் சூரியக் குளியலில் ஈடுபடுகின்றனர். இத்தகைய சூரியக் குளியலால் நீரிழிவு மற்றும் இருதய நோய்கள் வராமல் தடுக்கப்படும் என்ற புதிய தகவல் ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.
உணவுப்பொருள்களில் உள்ள அதிக அளவிலான கொழுப்பினால் வளர்சிதை நோய் ஏற்படுகிறது. உடலில் விற்றமின் டி குறைபாடினால் அத்தகைய நோய் உருவாகிறது என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.
இத்தகைய வளர்சிதை நோயினால் நீரிழிவு மற்றும் இருதய நோய்கள் ஏற்படுகின்றன. எனவே இவற்றுக்கு மூலகாரணமாக விளங்கும் விற்றமின் டி சூரிய ஒளியில் அதிக அளவில் உள்ளது. எனவே சூரியக் குளியல் செய்வதன் மூலம்



விற்றிமின் டி இனை அதிகரிக்கச் செய்து மேற்கண்ட நோய்கள் வராமல் தடுக்க முடியும். இந்த ஆய்வை அ... ரிக்க நிபுணர்கள் மேற் கொண்டுள்ளனர். (ம-



...ரந்த பனிக் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகியுள்ளன. பன்னாட்டு ஹாபின் பனிச்சிறப ...கள் மிகப் பெரிய சிலைகளை வடித்து வருகின்றனர். பல நூற்றுக்கணக்கான கலைஞர்கள்

## பன்னீரைச் சந்தித்தார் கிரிஜா

தமிழகத்தின் புதிய தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள கிரிஜா வைத்தியநாதன் மரியாதை நிமித்தமாக தமிழ்நாட்டின் முதலமைச்சர் பன்னீர் செல்வத்தைச் சந்தித்தார்.
தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளராக இருந்த ராமமோகன ராவ் வீட்டில் கடந்த புதன்கிழமை வருமான வரித்துறையினர் அதிரடிச் சோதனை நடத்தினர். இந்த சோதனையில் பல முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப் பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். புதிய தலைமைச் செயலாளராக கிரிஜா வைத்தியநாதன் நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டார். முறைப்படி நேற்று பதவியேற்ற கிரிஜா, மரியாதை நிமித்தமாக முதலமைச்சர் பன்னீர் செல்வத்தையும் சந்தித்தார். (ம-எ)

# மோசூலில் கார்க் குண்டுத் தாக்குதல் 23 பேர் உடல் சிதறி பரிதாபச் சாவு

பக்தாத், டிசெ. 24
ஈராக்கின் மோசூல் நகரில் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பினர் நடத்திய கார்க் குண்டுத் தாக்குதலில் 23 பேர் உடல் சிதறிச் சாவடைந்தனர்.
ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒருதனிநாடாக அறிவித்துள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேற்) அமைப்பு. ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் பிடியில் உள்ள முக்கிய நகர்களில் ஈராக்கின் மோசூலும் ஒன்று. இதனால் குறித்த நகரை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியிலிருந்து மீட்க ஈராக் தீவிரம் காட்டி வந்தது. துருக்கி, அமெரிக்கா போன்ற நாடுகளும் ஈராக்குக்கு ஆதரவாக உள்ளன. மோசூலில் ஐ.எஸ். அமைப்பின் பிடியிலிருந்து ஈராக் அரச படையால் கைப்பற்றப்பட்ட கிராமமொன்றில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் நேற்றுமுன்தினம் மூன்று கார்க்குண்டுத் தாக்குதலை சீரான இடைவெளியில் நடத்தினர். 23 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 15 பேர் ஈ... படையைச் சேர்ந்தவர்கள் ... பேர் பொதுமக்கள் ... பன்னாட்டு ஊடகங்கள் செ... வெளியிட்டன. (ம...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஒட்டகத்தின் தலை மட்டும் உள்ளே நுழைந்துள்ள நிலை

வடக்கு மாகாணத்தில் 2015ஆம் ஆண்டில் மட்டும் 11 விகாரைகள் புதிதாக முளைத்துள்ளன என்று புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டு மைத்திரி – ரணில் அரசு பதவியேற்றதன் பின்னரே இந்த விகாரைகள் புதிதாக முளைத்தன அல்லது ஆரம்பிக்கப்பட்டிருந்த கட்டுமானங்கள் முழுமை பெற்றன என்பது நிச்சயம் தமிழர்களுக்கு அதிர்ச்சியே!

இலங்கையின் இனப் பிரச்சினையைப் பௌத்தத்தை விலக்கி வைத்துவிட்டுப் பார்க்க முடியாது. நகமும் சதையுமாக அவை பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. ஒருவகையில் இலங்கையின் இனப்பிரச்சினை என்பது மத மற்றும் மொழிப் பிரச்சினையே என்று ஒருசாரார் குறிப்பிடுவதையும் நினைவிற் கொள்ளவேண்டும்.

இலங்கை எதிர்கொண்ட மிக மோசமான 30 வருட காலப் போருக்கு பௌத்த மதமும் சிங்கள மொழியும் முதல் முக்கிய காரணமாக இருந்திருக்கின்றன. இவையிரண்டுக்கும் கொடுக்கப்பட்ட அளவுக்கதிகமான முக்கியத்துவமே ஏனைய இனங்கள் இலங்கையில் தாம் சிறுமைப்படுத்தப்படுவதாகவும், அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுவதாகவும் எண்ணுவதற்கான முக்கிய காரணம். இவற்றின் வழியேதான் இனப்பிரச்சினை, தனது கோர முகத்தை மெல்ல மெல்ல விரிவாக்கியது.

தொடர்ந்து கட்டவிழ்த்துவிடப்பட்ட இனக் கலவரங்கள், எழுபதுகளில் கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல் என்பவை இந்த மூலத்திரிக்கு எண்ணெய் ஊற்றின. அயல் நாடான இந்தியா ஆயுதங்களைத் தமிழ் இளையவர்களின் கைகளில் கொடுத்தபோது, அந்தத் தீ மூண்டெரிந்தது. அதன் பின்னர் தமிழர்களின் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்று சித்தரிப்பதில் கொழும்பு அரசுகள் வெற்றி பெற்றிருந்தன. ஆனால், இனப்பிரச்சினையின் அடிநாதம் பௌத்த சிங்களம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

அத்தகையதொரு நிலையில் மீண்டும் பௌத்தம் வடக்கு கிழக்கில்சன்னதமாட –மேலும்மேலும்வளர– இடமளிப்பது இலங்கையில் நிரந்தரமான அமைதி ஏற்படுவதை ஒருபோதும் உறுதிப் படுத்தாது என்பதை கொழும்பு புரிந்துகொள்ளாதிருப்பது ஆச்சரியம்தான்.

வடக்கு மாகாணப் புள்ளிவிவரக் கையேட்டின் தகவல்களின்படி, 2014ஆம் ஆண்டில் 47 விகாரைகள் இருந்தன. 2015ஆம் ஆண்டில் அவை 58 விகாரைகளாகப் பெருகியுள்ளன. யாழ்ப்பாண மாவட்ட புள்ளிவிவரக் கையேட்டின் தகவலில் கூறப்பட்டுள்ள 3 விகாரைகளின் அதிகரிப்பையும் சேர்த்தால் வடக்கில் மொத்தம் 14 விகாரைகள் அதிகரித்திருக்கின்றன.

அதிலும் வடக்கின் எல்லை மாவட்டங்களான வவுனியா மற்றும் முல்லைத்தீவிலேயே விகாரைகளின் பெருக்கம் அதிகரித்திருக்கின்றது. முல்லைத்தீவில் 6 விகாரைகளும், வவுனியாவில் 8 விகாரைகளும் அதிகமாகியிருக்கின்றன. மன்னாரில் மட்டும் 3 விகாரைகள் குறைந்திருக்கின்றன.

எல்லையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் அதிகரித்து வருகின்றன என்கிற ஓயாத குரல்கள் ஒலித்துவரும் நிலையில், அங்கு விகாரைகளின் பெருக்கம், கொட்டகைக்குள் ஒட்டகத்திற்கு இடம்கொடுத்த கதையை நினைவூட்டத் தவறவில்லை. சிங்களப் பேரினவாதம் என்கிற ஒட்டகம், பௌத்தம் என்கிற தனது தலையைத் தற்போது வடக்கு என்கிற கொட்டகைக்குள் மெல்ல நுழைத்திருக்கிறது என்கிற உவமானத்தைப் பொருத்தப்பாடான ஒன்றல்ல, என்று நிராகரித்துவிட முடியாது. இனிவரும் காலங்களில் அது தனது முழு உடலையும் கொட்டகைக்குள் அழுத்தித் திணித்து நுழைக்க முயற்சிக்கும். இறுதியில் கொட்டகையில் இருந்தவர்கள் வெளியேற்றப்படுவார்கள்.

இத்தகைய ஒரு நிலையை மைத்திரி – ரணில் அரசு கட்டுப்படுத்தத் தவறியிருப்பதையும், அதைச் செய்வதற்கு அந்த அரசை நிர்ப்பந்திக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தவறியிருப்பதையும் கண்டிக்காமல் இருப்பது தவறு. எதிர்க்கட்சித் தலைவரான இரா. சம்பந்தன் பல தடவைகள் நாடாளுமன்றத்தில் இது பற்றித் தொட்டுக்காட்டியிருந்தபோதிலும் அரசு அதன் மீது காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்பது, இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான கொழும்பின் இதயசுத்தியைக் கேள்விக்குட்படுத்துகிறது.

ஒரு தீர்வைக் காண்பதற்குள் இதுபோன்ற, இனப் பரம்பல் விகிதாசாரத்தைக் குழம்பும் நடவடிக்கைகளைச் செய்துவிட்டால், பின்னர் அதனை மாற்றமுடியாது என்கிற நிலையை ஏற்படுத்தும் – இஸ்ரேலிய அரசின் பாணியிலான – நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்படவேண்டும். இல்லையேல், இனப்பிரச்சினை இன்னும் நீண்ட காலத்திற்குத் தொடரவே இவை வழிவகுக்கும்.

# ஒற்றுமையே தமது பலம் என்பதை தமிழ் மக்கள் உணர்ந்தாக வேண்டும்

நல்லூர் நாதன்



இலங்கை சுதந்திரம் பெற்ற நாள் முதல் இரண்டு பெரிய அரசியல் கட்சிகளின் ஆட்சியே நாட்டில் மாறி மாறி நடைமுறையில் உள்ளது. ஒன்று ஐக்கிய தேசியக் கட்சி. மற்றையது சிறிலங்கா சுதந்திரக் கட்சி. இடதுசாரிகளின் தலைவரான என் எம். பெரேரா உயிருடன் வாழ்ந்த காலத்தில், நாட்டின் மூன் றாவது சக்தியாக மிகுந்த எதிர்பார்ப்புக்களுடன் இடதுசாரிகள் ஐக்கிய முன்னணி ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அது பலன் தரு முன்னரே, இரண்டு முக்கிய கட்சிகளும் மந்திரிப் பதவிகளைக் காட்டி அதனை முளையிலேயே அழித்துவிட்டன.

1977ஆம் ஆண்டில் பதவிக்கு வந்த ஜே.ஆர். ஜயவர்த்தனாவும் தனது மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக்காட்டி செ.இராஜதுரை போன்ற கொள்கைவாதிகளைக் கட்சி மாறவைத்துச் சிறு கட்சிகளைஉடைக்கமுனைந்தார். 2015 ஜனவரி 8 இன் பின் ஏற்பட்ட அரசியல் புரட்சியின் பலனாக தேசிய அரசு ஒன்றை உருவாக்கும் ஞானம் பிரதான தலைவர்கள் மத்தியில் உதித்தது. அந்தச் சிந்தனை 2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 18ஆம் திகதியின் பின்னர் செயலுருவம் பெற்றது.

### சிக்கலைச் சுமுகமாகக் கையாண்ட ஜனாதிபதி

தான் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குப் பெரிதும் காரணமாகவிருந்த த.தே.கூட்டணியினருக்கு ஏதேனும் பிரதியுபகாரம் செய்தேயாக வேண்டும் என்ற ஆதங்கம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உள்ளத்தில் இருந்த வேளையில், பழம்நழுவி பாலில் விழுந்த மாதிரி த.தே.கூட்டணி, தேர்தல் முடிவின் பிரகாரம் நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரியகட்சியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால் கிட்டத்தட்ட 50 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் அதிருப்தியாளர் குழுவுக்குக் கிடைக்க வேண்டிய எதிர்க்கட்சித் தலைமைப் பதவி சில சட்டச் சிக்கல்கள் காரணமாக கைநழுவ நேர்ந்தது. நாடா ளுமன்றத் தேர்தலில் ம.வி.முன்னணியிலும் பார்க்கக் குறைவாகவே வாக்குகளைப் பெற்ற, ஆனால் 16 நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றிக் கொண்ட த.தே.கூட்டணியின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கொடுத்து மைத்திரி ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டார். த.தே.கூட்டணியினர் நாடாளுமன்றத்தில் எவ்வளவு ஆக்ரோசமாகப் பேசினாலும், ஒவ்வொரு வாக்கெடுப்புகளிலும் அரசுக்கு ஆதரவாகவே வாக்களிக்கிறார்கள். அதனால் இவர்களும் தேசிய அரசில் ஒரு பங்காளிகளாகவே இருக்கிறார்கள். இவர்களின் நோக்கமெல்லாம், தெளிவாகத் தெரியும் பிசாசு மீண்டும் தலைதூக்கக் கூடாது என்பதே!






### மலையக, முஸ்லிம் மக்களிடையேயும் வெவ்வேறு தலைமைத்துவங்களே

மேற்படி இரண்டு பெரிய கட்சிகளையும் விட பிராந்தியக்கட்சிகள் மூன்று சமூகங்களின் மத்தியிலும் இருக்கின்றன. அதாவது மலையகத்தில் இ.தொ.காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி என இரு கட்சிகளும், வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்களின் மத்தியில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் முன்னாள் அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான சிறியகட்சி என மூன்று கட்சிகளும் இருக்கின்றன. இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கட்சியைத்தவிர, மக்களின் பெரும் ஆதரவைப் பெற்ற ஒரே கட்சியாக தமிழ்த் தேசியக்கூட்டணியே உள்ளது. அது நாடாளுமன்றத்திலே 16 ஆசனங்களை கொண்டுள்ளது. மலையகத்தில் பழம்பெரும் தொழிற்சங்கமாக இருந்து, அரசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






யல் கட்சியாக மாற்றம் பெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஒரு காலத்தில் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களையும், இரண்டு அமைச்சரவை அந்தஸ்துப் பெற்ற அமைச்சர்களையும் கொண்டிருந்தது. அதன் தலைவர் அரசியலில் எதையும் தீர்மானிக்கும் 'கிங்மேக்கர்' ஆக இருந்தார். ஆனால் இன்று அந்தக் கட்சி நுவரெலியா மாவட்டத்தில் மட் டும் இரண்டு நாடாளுமன்றப் பிரதிநிதித் துவத்துடன் அடங்கிவிட்டது. ஆனால், இன்றைய அமைச்சர் மனோகணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியில், கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் மலையக மக்கள் முன்னணி மற்றும் தொழிலாளர் தேசிய சங்கம் போன்ற கட்சிகளும் இணைந்து த.மு.கூட்டணி என்ற பெயரில் போட்டியிட்டு மலையகத்திலும், கொழும்பிலும் 6 ஆச னங்களை வென்றிருக்கின்றார்கள். அத்துடன் 2 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர், ஓர் இராஜாங்க அமைச்சர் போன்ற பதவிகளையும் வகிக்கிறார்கள்.

ஆனால் தோட்டத் தொழிலாளர் சம்பளத்தை நிர்ணயிக்கும் விதத்தில் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை கையொப்பமிடப்படும் கூட்டு ஒப்பந்தத்தில் தொழிலாளர் சார்பில் கையெழுத்திடுகின்ற உரிமை, இ.தொ காங்கிரசுக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கத்திற் கும் மாத்திரமே உள்ளது. அதனால் இன்று அமைச்சர் திகாம்பரம் அடுத்த முறை கூட்டு ஒப்பந்தத்தில் தங்களது தமிழ் முற்போக்குக் கூட்டணியே தோட்டத் தொழிலாளர் சார்பில் கையயெழுத்திடும் எனச் சூளுரைத்துள்ளார். அண்மையில் 300 இ.தொ.கா. அங்கத்தவர்கள் தங்கள் சங்கத்திலிருந்து விலகி திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்துள்ளார்கள்.

பழைய தொண்டமான் போன்று அவரது பேரன் ஆறுமுகனும் சரி, மருமகன் செந்திலும் சரி அவருக்குக் கொஞ்சமும் இளைத் தவர்கள் அல்ல. செந்தில் தொண்டமான் ஊவா மாகாண சபையில் ஓர் அமைச்சராக இருக்கிறார். அமைச்சர் திகாம்பரத்திற்கும் மா.ச. அமைச்சர் செந்திலுக்குமிடையில் அடிதடி வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. போகிற போக்கைப் பார்த்தால், மலையகத்தில் மேற்படி இரண்டு அணியினரும் தமது சமூகம் சார்ந்த பிரச்சினைகளில் கூட ஒரே குரலில்பேச மாட்டார்கள் போலுள்ளது.

அடுத்ததாக, வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களை எடுத்து நோக்கினால், அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்ற இரண்டு பிரிவினரும் முஸ்லிம் மக்களது ஆதரவு பெற்று விளங்குகின்றனர். இந்த இரண்டும் கட்சிகளின் தலைவர்களும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களே. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், காலஞ்சென்ற அமைச்சர் அஷ்ரப் காலத்திலிருந்து வடக்கிலும் கிழக்கிலும், ஏன் தென்பகுதிகளிலும் பரவலாக ஆதரவாளர்களைக் கொண்டிருந்தது. ஆனால் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைவரான காலத்திலிருந்து கட்சிக்கு இறங்குமுகமாகவே உள்ளது. காரணம், அதன் போட்டியாளரான அமைச்சர் ரிசாத், தனது சொந்த மாவட்டமான வன்னியில் தளம் அமைத்திருந்தாலும், மெதுமெதுவாக புத்தளம், மட் டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய பிரதேசங்களில் இன்று பரந்துபட்டு ஆதரவாளர்களைப் பெற்றுவிட்டார். அதனால் இன்று அவரது கட்சி வன்னி, மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களில் நாடாளுமன்ற பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது. அம்பாறையில் கூட அவரது கட்சி வேட்பாளர் கணிசமான வாக்குகளைப் பெற்றுள்ளார்.

அமைச்சர் ரிசாத்தின் வருகை, புத்தளத்தில் தனது கட்சியின் இருப்பையே கேள்விக்குறியாக்கிவிடும் எனப் பயம் கொண்ட அமைச்சர் ஹக்கீம், அண்மையில் முன்னாள் பிரதியமைச்சர் பாயிஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இணைந்து கொண்ட



நிகழ்ச்சி தொடர்பான கூட்டத்தில், வன்னி எருமையைக் கட்டுப்படுத்தக் கூடியவர் முஸ்லிம் காங்கிரசின் இந்த மேர்வின் சில்வாவே முன்னாள் பிரதியமைச்சர் பாயிஸ்ஸை, அடிதடி அரசியல் புகழ் மேர்வின் சில்வாவுடன் ஒப்பிட்டு எனப் பெருமையாகக் கூறுமளவுக்கு, ரிசாத்தின் கட்சி குறித்து அவர் பெரிதும் அஞ்சுகிறார் என்பது தெளிவாகிறது. ரிசாத் கட்சியிலும் 4 நாடாளுமன்ற உறுப் பினர்களும், ஓர் அமைச்சரும், ஒரு பிரதியமைச்சரும் இருக்கிறார்கள். இதனால் இனிமேல் முஸ்லிம் மக்களிடையே இரண்டு அரசியல் கட்சிகளும் ஆதிக்கம் செலுத்தக்கூடும்.

## தமிழ் மக்களது ஏகப் பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே

அடுத்த பிராந்தியக் கட்சி, புலிகள் இயக்கம் தமது கட்டுப்பாட்டின் கீழேயே வைத்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகும். டக்ளஸ் தேவானந்தாவையும், நியமன உறுப்பினர் அங்கஜனையும் கழித்து விட்டுப்பார்த்தால், இன்று வடக்கு கிழக்கின் ஏகப் பிரதிநிதிகள் இவர்களேயெனலாம். இவர்கள் வடக்கு கிழக்குத் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளே தவிர, வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஏகப்பிரதிநிதிகள் அல்லர். ஏனெனில் வடக்கு கிழக்கின் மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகை 28. அதில் சரி அரை வாசிப் பிரதிநிதிகளே இவர்கள். அதனால் இவர்களை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதே சரி. 1956 ஆம் ஆண்டிலிருந்து தந்தை செல்வா தலைமையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னெடுத்த அறவழிப் போராட்டங்களில் எத்தனை வெற்றி பெற்றன? எவையெல்லாம் தோல்வியில் முடிந்தன என்பதையெல்லாம் மக்கள் அறிவர். 1983இல் ஆரம்பிக் கப்பட்ட ஆயுதப் போராட்டம், 2009 இல் முடிவுக்கு வந்தது. சகோதர இயக்கங்களினால்தான், எமக்குத் தலையிடி என த.ஈ.வி.புலிகள் அவர்களையெல்லாம் அழித்து தாங்கள் தனித்துப் போராடிய நிலையில் தெரிந்தோ தெரியாமலே, நாம் தமிழ் பேசும் சகோதர இனமான முஸ்லிம் மக்களைப் பகைத்து விட்டோம் என்று சொல்ல முடியாவிட்டாலும், அரசியலில் எம்மிடமிருந்து தூரவிலத்தி வைத்து விட்டோம் என்பதே பொருந்தும்.


அதனால் இன்று எம்மிடம் மீதமாக இருப்பது தமிழ் மக்களின் ஒற்றுமை என்ற ஓர் ஆயுதம் மாத்திரமே. த.தே. கூட்டணியினரின் பங்காளிக் கட்சியினருடனான ஒற்றுமை பற்றி பல குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால், எம்மிடம் தற்சமயம் இருக்கும் சிறிதளவு ஒற்றுமையையாவது தொடர்ந்து நிலைநாட்டப் போகிறோமா? இல்லையா? என்பதே இன்றுள்ள கேள்வி. சிங்களக் கட்சிகள் இரண்டு, மலையகக் கட்சிகள் இரண்டு, முஸ்லிம் கட்சிகள் இரண்டு என்ற மாதிரியான எடுத்துக் காட்டு எமக்கு வேண்டாம். ஏனெனில், மற்றவர்களிலும் பார்க்க நாம் செய்த, செய்யப்போகின்ற போராட்டங்கள் வித்தியாசமானவை. எமது ஒற்றுமையின் பெருமையும் போராட்டங்களின் வெற்றியும் உலக நாடுகள் தோறும் பேசப்பட்டவை. ஏன் ஐக்கிய நாடுகள் சபைவரை சென்று ஆராயப் பட்டவை. அந்தப் பெருமை தொடர்ந்து பேணப்பட வேண்டும்.

த.தே.கூட்டணி செய்வது எல்லாம் சரி என நான் கூறவில்லை. சென்ற தேர்தலின்போது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமது தமிழ்த் தேசியப் பல்லவியைக் கொஞ்சம் அடக்கி வாசித்திருந்தால், அல்லது வடக்கு மாகாண சபை முதலமைச்சர் தமது இரட்டை வேட அரசியல் செயற்பாட்டை நிறுத்தியிருந்தால், நிச்சயம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு யாழ். மாவட்டத்தில் ஆக 7 வாக்குகளால் இழந்த அந்த ஆறாவது ஆசனத்தையும் வென்றிருக்கலாம் அல்லவா?

இன்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகல விதத்திலும் திறமைசாலிகள் எனக் கூறவரவில்லை. ஆனால் எமக்குத் தேவை அதிக எண்ணிக்கை கொண்ட தகுதியான தலைவரைக் கொண்ட, ஒரு கூட்டணியே. எம்மிடம் எஞ்சியிருக்கும் ஒரே ஆயுதம் இந்த ஒற்றுமை மாத்திரமே.

இலங்கைத்தமிழரும் தமக்குள் பிளவுபட்டு இரண்டு மூன்று கட்சிகளானால், தெற்கில் நாமும் 'பத்தோடு பதினொன்று; இத்தோடு இன்னொன்று' என்ற கண்ணோட்டத்தில் எம்மை அழித்துக் கொள்ளவேண்டியது தான். அதனால் இன்றைய காலத்தின் தேவை கட்டிக்காக்கப்பட வேண்டிய ஒற்றுமையே"



# வாசகர் திருமுகம்

## மின்சாரம் சேமிக்கப்படுமா?

மின்சாரம் என்பது இன்றைய நாள்களில் ஓர் அத்தியாவசிய தேவையாகும். இதை முடிந்தவரை கட்டுமட்டாகப் பயன்படுத்துமாறு அரசு பொது மக்களை வேண்டிக் கொண்டாலும், நாம் அதனை அசட்டை செய்து வருகின்றோம்.

சாவகச்சேரி நகராட்சி மன்றக் கட்டடத் தொகுதியில் (சந்தையில் உள்ள கட்டடம்) பயன்பாட்டில் உள்ள மின்குமிழ்கள் 24 மணிநேரமும் ஒளிர்வதினால் மின் குமிழ்கள் பழுதடையும் நிலை ஏற்படுவதோடு, அநியாயமாக மின்சாரமும் வீண் விரயமாகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது குறித்து கவனம் எடுத்து, முடிந்தவரை மின்சாரத்தைச் சேமிக்க ஆவன செய்தல் சிறப்புடைத்து

*நலன் விரும்பி*
*சாவகச்சேரி*

## பாதுகாப்பற்ற நிலை கவனத்தில் கொள்ளப்படுமா?

கொக்குவில் ஆடியபாதம் வீதியும் புகையிரத வீதியும், சந்திக்கும் இடத்துக்கு அருகில் பள்ளமான, ஆழமான, பாதுகாப்பற்ற கிடங்கு ஒன்று வீதி ஓரமாகப் பாதசாரிகளையும் வாகன ஓட்டுநர்களையும் குறிப்பாகத் துவிச்சக்கர வண்டிகளில் பயணிப்போரைப் பயமுறுத்துவதாய் அமைந்து காணப்படுகிறது.

கரணம் தப்பினால் மரணம் என்பது போல, தப்பித்தவறி அதனுள் எவராவது விழுந்தால் அவ்வளவுதான்! இதற்கு இரும்புத்தகடுகளால் தகுந்த பாதுகாப்புவேலி அமைக்கப்படாவிட்டால் முதியவர்கள் அல்லது சிறுவர்கள் கண்டிப்பாக இந்தக் கிடங்கில் விழநேர்வது நிச்சயம். இதைப் பலராலும் உணரமுடிகிறது. ஆனால் எவருமே இதனைக் கவனத்தில் எடுத்ததாக அறிய முடியவில்லை. சம்பந்தப்பட்ட தரப்பினர், இது தொடர்பாகத் துரித நடவடிக்கை எடுப்பார்களாக இருந்தால் வேறொன்றுமில்லை; புண்ணியம் கிடைக்கும்.

*கே.எஸ்.சிவஞானராஜா*
*கொக்குவில்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமை



காட்டுக்கு வேட்டையாட வந்திருந்த தன் எஜமானனுக்காக புதரில் மறைந்திருந்த ஒரு முயலை விரட்டு, விரட்டு என்று விரட்டிற்று ஒரு நாய்.

ஓடி ஓடிக் களைத்த முயல் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க நின்று, "அட! இனத் துரோகி! என்னைப் போல் நீயும் ஒரு மிருகம், உன்னைப்போல் நானும் ஒரு மிருகம். கேவலம், ஒரு சில எலும்புகளுக்காக என்னை நீ இப்படிக் காட்டிக் கொடுக்கலாமா?" என்று கேட்டது.

"காட்டிக் கொடுத்தால் இனத் துரோகி; காட்டிக் கொடுக்காவிட்டால் எஜமானத் துரோகி. இதில் எது தருமம் எது அதர்மம்? என்று நீதான் சொல்லேன்!" என்று அதைத் திருப்பிக் கேட்டது நாய்.

முயல் விழிக்க, "அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். நீங்கள் உங்களுடைய கடமையைச் செய்யுங்கள். பயனை எதிர்பார்க்காதீர்கள்!" என்றது ஒரு கழுகு, அங்கிருந்த ஒரு மரக்கிளையில் அமர்ந்தபடி.

"சரி, இப்போது ஓடுவதுதான் என் கடமை! என்று சொல்லிக்கொண்டே" முயல் ஓடிற்று.

"என் கடமை உன்னைத் துரத்துவதுதான்!" என்று சொல்லிக்கொண்டே அதைத் துரத்திற்று நாய்.

டுமீர்! என்று ஒரு சத்தம். சுருண்டு விழுந்த முயலைப் பாய்ந்து வந்த கழுகு தன் காலால் இறுகப் பற்றிக்கொண்டு மேலே பறந்தது.

இதைக் கண்டதும் ஒரு கணம் திடுக்கிட்டு நின்ற நாய், மறுகணம் தன்னைத் தானே சமாளித்துக்கொண்டு சொல்லிற்று: "இது பயனை எதிர்பாராமல் செய்யும் கழுகின் கடமைபோலும்!"



உன்னுள் உள்ள வலிமையைத் தெளிவாக உணர முயலவேண்டும். நீ செய்வதெல்லாம் உனது சொந்த செயலாயில்லாமல், உன்னுள் உள்ள உண்மையின் செயலாயிருக்கட்டும். உனது ஒவ்வொரு சிந்தனையும் அந்த ஒரே ஊற்றிலிருந்து தெய்வீக ஊக்கம் பெறட்டும்; உனது திறன், நற்குணம், பண்பு எல்லாம் உன்னுள் கோயில் கொண்டுள்ள மனத்தின் பணிக்கே ஆகட்டும். இதற்காக முயல்வாயாக.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



## நற்சிந்தனை

அன்னையைத் தொழுவாய் - தம்பி
அன்பைப் பெறுவாய் - தம்பி

அப்பாவைத் தொழுவாய் - தம்பி
அறிவைப் பெறுவாய் - தம்பி

ஆண்டவனை வணங்குவாய் - தம்பி
ஆற்றலைப் பெறுவாய் - தம்பி

ஆண்டாளை வணங்கியே - தம்பி
ஆயகலைகளைக் கற்றிடுவாய்- தம்பி

இன்னா செய்தாரைக் கண்டால் - தம்பி
இனியவை கூறித் திருத்திடுவாய் - தம்பி

இன்பம் வேண்டின் - தம்பி
இறைவனை வணங்கு - தம்பி

*நி.ஜக்சியா*
*தரம் - 3*
*யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்*



## பொது அறிவுத் தகவல் துளிகள்

- கவிஞர் கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா.
- உலகிலேயே அதிக மொழிகள் பேசப்படும் நாடு இந்தியாதான்.
- தாய்லாந்து நாட்டில் மீன் சண்டை ஒரு பிரபலமான விளையாட்டு.
- இந்தியாவிற்குள் நுழைந்த முதல் ஐரோப்பிய வீரன் அலெக்ஸாண்டர்.
- ஆமை நிலத்தில்தான் மெதுவாகச் செல்லுமே தவிர நீரில் வேகமாக நீந்தும்.
- உலகிலேயே மினரல் வாட்டர் அதிகம் பயன்படுத்துபவர்கள் ரஷ்யர்கள்தான்.
- கைக்குட்டை, பதினான்காம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.
- அமெரிக்காவில் ஒவ்வொரு நிமிடமும் 12 கார்கள் தயாரிக்கப்படுகின்றன.
- உலகிலேயே அதிகமாகச் சேமிப்பவர்கள் சிங்கப்பூர்க்காரர்கள்தான்.
- குதிரை லாயத்தில் வேலை செய்தவரின் மகன்தான் பிரபல ஆங்கில நாடகாசிரியர் ஷேக்ஸ்பியர்.
- எழுத்தாளர் எர்னஸ்ட் ஹெமிங்வே தம் வாழ்நாளில் பேனா பிடித்ததில்லை. பென்சில்தான்.
- கிரேக்க நாட்டு தேசியகீதம்தான் உலகின் மிக நீளமான தேசியகீதம். 128 வரிகள்.
- மின்சார ரயிலை இயக்க 16 ஆயிரம் வோல்ட் மின்சாரம் தேவைப்படுகிறது.
- உலகம் முழுவதும் எல்லா நாடுகளிலும் எல்லா கால நிலைகளிலும் வளரக் கூடிய ஒரே பிராணி நாய்.
- அதிகாலை நேரத்தில் மட்டுமே வாத்து [illegible]



## வரலாற்றில் இன்றைய தினம்

1777 - கிறிஸ்மஸ் தீவு எனக் கூறப்படும் தீவு கிறிற்றி மாற்ரி ஜேம்ஸ் குக்கால் கண்டுபிடிக்கப்பட்டது.
1924 - அல்பேனியா குடியரசானது.
1929 - ஆஜன்ரீனாவின் ஜனாதிபதி ஹிப்போலிற்றா யிகோயன் மீது, படுகொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது.
1941 - லிபியாவின் இரண்டாவது சனத்தொகை கூடிய பென்காஷி நகர் பிரிட்டிஷ் படைகளால் வெற்றி கொள்ளப்பட்டது.
1966 - அமெரிக்க இராணுவத்தினரால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கனடா எயார் விமானசேவை விமானம் தென் வியட்நாமில் சிறிய ஒரு கிராமத்தில் விபத்துக்குள்ளாகியதில் 129 பேர் உயிரிழந்தனர்.
1988 - தமிழ் இளைஞர்கள் மூவரின் தலைகள் சீவப்பட்டுக் கொலை. அப்புத்தளையில் பதற்றம்; வேலை நிறுத்தம்.
- பருத்தித்துறையில் முன்னாள் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் சுட்டுக்கொலை.
1993 - இந்திய நிதியமைச்சர் மன்மோகன் சிங் திடீரெனப் பதவி விலகினார்.
1999 - இந்திய விமானம் 174 பயணிகளுடன் கடத்தப்பட்டது.
2005 - நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராசசிங்கம் நள்ளிரவு சுட்டுப்படுகொலை. நத்தார் பிரார்த்தனையின்போது தேவாலயத்தினுள் பயங்கரம்.
- யுவதி உட்பட 5 பேரின் சடலங்கள் யாழ். கோட்டைப் பகுதியில் மீட்பு. மோதலில் இறந்தவர்கள் என்கிறது இராணுவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் 2017 – 2020

சுப ஸ்ரீ துன்முகி வருடம் தை மாதம் [26.01.2017] 13ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7:29 மணியளவில் சனிபகவான் விருச்சிக ராசியிலிருந்து தனுசுராசிக்குள் பிரவேசிக்கிறார். இங்கு அவர் 24.01.2020 வரை 3 ஆண்டுகள் சஞ்சாரம் செய்கிறார்.




(விசாகம் 4ஆம் பாதம், அனுசம், கேட்டை)
(தோ, ந, நா, நி, நீ, நு, நூ, நே, நோ, ய, யா, யு போன்ற எழுத்துக்களில் பெயரை முதலாகக் கொண்டவர்களுக்கும் கார்த்திகை மாதத்தில் பிறந்தவர்களுக்கும் இப்பலன்கள் ஓரளவு பொருந்தி வரும்)

வான மண்டலத்தில் 8ஆவது ராசியாக வலம் வரும் உங்கள் ராசிநாதனான செவ்வாய் பகவான் நவக்கிரகங்களில் மிகவும் சக்தி வாய்ந்தவராகக் கருதப்படுவார். இவரை ராசி நாதனாகக் கொண்ட நீங்கள் உடற்பலமும், உள்ளப்பலமும் கொண்டவராகத் திகழ்வீர்கள். தனக்கு மேல் ஒரு சக்தி இயங்குகிறது என்பதில் நம்பிக்கையுடனும் மற்றவர்களிடம் இருந்து தனித்தும், சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் உடையவராகவும், எதையும் தலைமை ஏற்று நடத்தும் திறன் கொண்டவர்களாகவும், மற்றவர்களை வசியப்படுத்தி தங்கள் வழிக்கு கொண்டு வருவதில் வல்லவர்களாகவும் திகழ்வீர்கள்.

இத்தகைய வல்லமை உடைய உங்களது ராசியில் இதுவரை ஜென்மச் சனியாக சனிபகவான் சஞ்சரித்து வந்தார். இது வரை தேவையற்ற செலவினங்களையும் எதிர்பார்த்த உழைப்புகேற்ற பயனும் இல்லாமல் எக்காரியத்திலும் தடையும் தள்ளிபோடும் நிலையும் உருவாகி இருந்த நிலை மாறி சனி பகவான் சற்று உங்கள் ராசி மாறி உங்களுடைய 2ஆம் இடமான தன ஸ்தானம் மற்றும் குடும்ப வாக்கு ஸ்தானம் வருவது சற்று பரவாயில்லை என்று தான் சொல்ல வேண்டும்.

எந்த வேலையும் முடிக்காமல் தள்ளி போட்ட நிலை மாறும் இதுவரை உங்கள் ராசு ஜென்மராசியாக இருந்தவர் மாறி 2ஆம் இடத்தில் சஞ்சரிப்பது உங்களுடைய கௌரவம், அந்தஸ்து, புகழ், ஓரளவு காப்பாற்றப்படும். இதுவரை தள்ளிப் போன சுப காரியங்கள் இனிதே நடந்தேறும். இதுவரை தேகத்தில் இருந்த மந்த நிலை மாறி சுறுசுறுப்பும் வேகமும் விவேகமும் ஆரம்பமாகும். சமூகத்தில் சற்று பிரபலமாக வலம்வர வாய்ப்பும் சந்தர்ப்பமும் அமையும். இதுவரை இருந்த வந்த கவலை, வேதனை, அசிங்கம், அச்சம், அவமாணம் கஷ்டம் இவற்றிலிருந்து விடுபட்டு புதுவிதமான வாழ்க்கையை எதிர்நோக்கி உங்கள் பயணம் ஆரம்பிக்கும். உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டுக்கும் 4ஆம் வீட்டுக்கு அதிபதியான சனி பகவான் 2ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் குடும்பசனி குடும்பத்திற்கு ஆகாது. என்றே கூறுவர். அதை பற்றிய கவலைகளை தூக்கி எறிந்து விடவும். சனிபகவான் 3ஆம் வீட்டுக்கும் 4ஆம் வீட்டுக்கு அதிபதியாகி அவர் 2ம் இடத்தில் சஞ்சரிப்பதால் சகோதர சகோதரிகளால் எதிர்பாராத பண வரவும், பொருள் வரவும் கிட்டும். உறவினர்களால் பொருள் வரவு அல்லது சகாயம் ஏற்படும். புதிய விடயங்களைக் கற்க ஆர்வம் ஏற்படும். அடிக்கடி பயணங்கள் செய்ய வேண்டியது வரும். அந்தப் பயணங்களால் எதிர்பாராத நற்பலன்கள் ஏற்படும். இதுவரை இருந்து வந்த சோம்பல் நிலை மாறி சுறுசுறுப்பாகவும் வேகமாகவும் செயற்பட ஆரம்பிப்பீர்கள்.

உங்களைப் பற்றிய வீண் வதந்திகள் உலவிக் கொண்டிருக்கும். உங்களைப் பற்றிய விமர்சனங்களையும் தூக்கு எறிந்து எண்ணிய செயலில் கவனம் செலுத்துங்கள். எதிர்பார்த்த வெற்றி நிச்சயம்.

பேச்சில் அதிக கவனம் தேவை. தேவையற்ற விடயங்களை பேசுவதோ எழுதுவதோ கூடாது. மற்றவர்கள் விடயங்களில் அநாவசியமாகத் தலையிடுதல் கூடாது. கூடியவரை அமைதியாகவும் பொறு மையாகவும் இருந்து வருதல் வேண்டும். பண வரவு பொருள் வரவு தாரளமாக இருந்து வரும். தேவையற்ற செலவினங்களும் வரும். கூடிய வரை சுபச் செலவுகள் செய்துவர நன்மை ஏற்படும். யாருக்கும் தேவையில்லாமல் கடன் கொடுக்கவோ வாங்கவோ கூடாது. கொடுத்த பணம் வருவதில் சற்று தடை ஏற்பட்டாலும் கண்டிப்பாக தவணை முறையில் வந்து சேரும்.

காதல் விடயங்கள் மகிழ்ச்சியாக இருந்தாலும் திருமணம் என்று வரும்பொழுது சற்று போராட்டமே ஆகும். கூட்டுக் குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட்டு விலகும். குடும்பத்தில் வரும் புது வரவால் நன்மையும் தீமையும் கலந்தே காணப்படும். கேட்ட இடத்தில் கடன் கிடைக்கும். அரச கடன் விடயத்தில் அதிக கவனம் தேவை. வழக்குகள் சாதகமாக இருந்து வரும். கணவன் மனைவி உறவில் விரிசல் ஏற்பட வாய்ப்பு அதிகம். தேவையற்ற விடயங்களை இருவரும் பேசுதல் கூடாது. தேவையில்லாமல் மூன்றாவது மனிதரைக் குடும்ப விடயத்தில் இழுக்கக் கூடாது. வேலையில் அதிக முன்னேற்றம் அமையும். சுய தொழில்களால் நன்மை ஏற்படும். உங்களுடைய ராசிக்கு 3, 6ஆம் அதிபதியாக குரு சாதகமான இடங்களில் சஞ்சாரம் செய்யும் காலங்களில் எதிர்பார்த்த வேலை அமைய வாய்ப்பு அமையும். வேலை தேடுபவர்களுக்கு ஓரளவு எதிர்பார்த்த வேலை கிடைக்கும். அதே சமயம் அதிக உழைப்பு, குறைந்த வருமானம் என்ற அளவில் சனியின் தன்மை இருக்கும். உடம்பில் தேமல், சொறி, சிரங்கு இவைகள் வராமல் அல்லது பரவாமல் பார்த்துக் கொள்ளல் அவசியம். நேரத்திற்கு அவசியமாக உணவருந்துதல் வேண்டும். நீரிழிவு நோய் இருப்பின் அதைக் கட்டுக்குள் வைத்து பழகவும். தலை, முகம் அடி வயிறு போன்ற உடல் உறுப்புகளில் பிரச்சினை, கால், பாதம் இவற்றில் நோய் வராமல் மற்றும் பரவாமல் பார்த்துக் கொள்ளவும்.

**பெண்களுக்கு**

நல்ல வேலையாள்களுக்காகப் போராடிய உங்களுக்கு நல்ல வேலையாள்கள் அமைவார்கள். இதுவரை இருந்து வந்த அலைச்சல்கள் குறைந்து சற்று நிம்மதியான சூழ்நிலை உருவாகும். இது வரை மனதில் இருந்து வந்த இனம் தெரியாத பயம், கவலை, மனக் குழப்பம் நீங்கி அதிலி ருந்து விடுபட வாய்ப்புகள் அமையும்.

## நாளை

**மார்கழி-10**
ஞாயிற்றுக்கிழமை -25.12.2016
திதி: துவாதசி முழுவதும்
நட்சத்திரம்: விசாகம் பி.இ.05.18
ராகுகாலம்:04.56-06.26 வரை
சுபநேரம்:09.26-10.56 வரை
நத்தார் பண்டிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டாசுகளை வெடிக்க வைப்பதால் தீமைகள்தான் எஞ்சி நிற்கின்றன

கொண்டாட்டங்கள் என்றாலே வெடிகள் இல்லாமல் இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. சிலருக்கு இது அவர்களின் செல்வ நிலையைக் காட்ட கிடைக்கும் ஒரு சந்தர்ப்பமாகவும் அமைந்துள்ளது. பணக்காரக் குடும்பத்தினர் ஓர் இரவில் வெடித்துத் தள்ள, பல லட்சக் கணக்கான ரூபா செலவில் பட்டாசுகளை வாங்கிக் குவிக்கின்றனர்.

நத்தார் பண்டிகையுடன் தொடங்கி புதுவருடம், பொங்கல் என அடுத்தடுத்து பண்டிகைகள் வரவுள்ளன. இந்தப் பண்டிகைகளில் எது இருக்கின்றதோ இல்லையோ, பட்டாசு கட்டாயம் இடம்பிடிக்கும் என்பதில் ஐயமில்லை. பட்டாசு எம்மை எந்தளவுக்கு அடிமையாக்கி வைத்துள்ளது என்பதை நாம் கொஞ்சம் சிந்திக்க வேண்டியுள்ளது. பண்டிகைகளில் பட்டாசு வெடித்த காலம் போய்தற்போது நம் இளையவர்கள் பட்டாசுக்காகப் பண்டிகை களைக் கொண்டாடும் காலம் உருவாகியுள்ளது. பட்டாசை முதல் முதல் கண்டு பிடித்தவர்கள் சீனர்கள். பட்டாசு கண்டுபிடிக்கப்பட்டதன் நோக்கம் வெடிச் சத்தத்தில் பேய் பிசாசுகள் காணமாற்போகும் என்ற சீனர்களின் மூட நம்பிக்கையே ஆகும். இதனால் தான் இவர்கள் பட்டாசைக் கண்டுபிடித்தார்கள். அது வெடிக்கும் போது சிலருக்கு ஏற்பட்ட குதூகலத்தையடுத்து பின்னாளில் சீன புதுவருடப் பண்டிகைகளில் மகிழ்ச்சிக்காக பட்டாசு வெடிக்க வைக்கப்பட்டது. நம் நாட்டில் எல்லாப் பண்டிகைகளுக்கும் பட்டாசு வெடிக்கும் பழக்கம் வந்து விட்டது. பட்டாசு இல்லாத பண்டிகைகளே இல்லை என்ற அளவுக்கு நிலைமை உள்ளது.

பட்டாசைக் காசு கொடுத்து வாங்கும் முன், நம்மில் எத்தனையோ வீடுகளில் இன்னும் சமையல் செய்வதற்கு அடுப்பெரிக்க விறகு வாங்குவதற்குகூட காசில்லாமல் பட்டினியால் இருக்கிறார்கள். அத்துடன் எத்தனையோ சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் எமது நாட்டில் புதிது புதிதாக முளைத்துள்ளன என்பதெல்லாம் உங்களின் கண்களுக்குத் தெரிகின்றதா? இவைகளை ஒரு கணம் சிந்தியுங்கள். இவர்களுக்கு உதவுவதை விடவா நமக்கு இந்தக் காசைக் கரியாக்கும் கேளிக்கை அவசியமாகப்போய் விட்டது. பட்டாசை நாம் வெடிக்கும் போது ஓர் ஆபத்தும் உள்ளது என்பதை அறியவேண்டும். திடுக்கிடும் படியாக அதிக சத்தத்துடன் பட்டாசு வெடிக்கும்போது வயோதிபர்கள், பச்சிளங்குழந்தைகள் மற்றும் நோய்வாய்ப்பட்டோரின் நிலையை யோசித்ததுண்டா? ஏனெனில், சாதாரண நாள்களில் கிட்டத்தட்ட 30 டெஸிபெல் வரையுள்ள சத்தங்களையே நாம் அன்றாடம் செவியுறுகிறோம். அப்படியிருக்க பண்டிகைக் காலங்களில் 60, 90, 120 டெஸிபெல் அளவுக்கு வெடிச்சத்தம் எழும் போது அவர்களின் நிலை எவ்வாறு இருக்கும்?

பட்டாசில் பல வேதிப்பொருள்கள் கலந்துள்ளன. அவை வெடிக்கும்போது புகையாக, சாம்பலாக நிலத்திலும், நீரிலும், காற்றிலும் கலக்கின்றன. இவற்றைச் சுவாசிப்போருக்கு பெரும் உடல் நலக்கேட்டை ஏற்படுத்துகிறது. பச்சிளம் குழந்தைகள் மற்றும் கருவில் உள்ள குழந்தையைக் கூடப் பாதிக்கிறது.

சில சமயம் பட்டாசு வெடிக்கும். அன்று மழை பெய்தாலோ கேட்கவே வேண்டாம். காற்றை மட்டுமே மாசுபடுத்திய பட்டாசு, அடுத்து நீர் நிலையை மாசுபடுத்துகிறது. பட்டாசு வெடித்தபின்னர் மிகுந்து கிடக்கும் அத்தனை இரசாயனக் கழிவும் மழை நீரினால் அடித்துச்செல்லப்பட்டு குளம், ஆறு ஆகியவற்றில் கலக்க வாய்ப்புள்ளது. இதனால் நீரில் வாழ்வன, அவற்றை உண்டு வாழ்வன, பறப்பன என அனைத்தையும் பாதிக்கிறது. பட்டாசு கழிவுகள் பின்னர் நிலத்தடி நீரால் உறிஞ்சப்படுவதால் அதனை அருந்தி வாழும் மனிதர்கள், என்னதான் காய்ச்சி வடிகட்டிக் குடித்தாலும் நோய்க்குள்ளாகிறார்கள். நிலத்தில் வாழும் மண் புழுக்கள், தாவரங்கள் என்று அனைத்தும் பாதிக்கப்படுகின்றன. தாவரங்கள் பூப்பதும், காய்ப்பதும், வளர்வதும் தடைப் படுகிறது. விவசாயம் பேரிழப்பு அடைகிறது. நீர் மாசுபடுகின்றது.

பட்டாசு வெடிக்கும்போது விபத்துக்களும் ஏற்படுகின்றன. இதன் மூலம் கண்ணிழந்தோர், கையிழந்தோர், காலிழந்தோர், உடல் எரிந்தோர், தீப்பற்றி எரிந்த வீடுகள், பட்டாசுக்கடைகள், மனித உயிரிழப்புகள், பொருளாதார நாசம் என வருடா வருடம் எத்தனை எத்தனையோ சம்பவங்கள் நடக்கின்றன. இதன் பின்னுமா நாம் பட்டாசு வெடிக்க வேண்டும். காசைக்கரியாக்கும் இந்தப் பட்டாசு வெடித்தல் என்பது எவ்வித நன்மையையும் நமக்கு அளிக்காது, வீண் விரயத்தையே ஏற்படுத்துகின்றது.

பத்தி எழுத்து

எஸ்.மல்லிகா

# ஏழைகளின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.



## இன்று அன்னாரின் 29ஆவது நினைவுதினம்)

எம்.ஜி.ஆர். என்ற இந்த மூன்றெழுத்தைத் தமிழ் மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள். பூவுலகு வாழுமட்டும் அவர் புகழ் வாழும் என்பதற்கு நல்ல சான்று, அவரை அடக்கம் செய்த இடத்தில் ஆயிரக்கணக்கில் அஞ்சலி செலுத்தச் செல்லும் மக்கள் கூட்டம். சரித்திரத்தில் எந்தவொரு மனிதனும் பெற்றிராத புகழைப் பெற்ற விசித்திர மனிதர் எம்.ஜி.ஆர். என்று கூறினால், மிகையில்லை.

ஈழமணித் திருநாடு செய்த தவப்பயனால், 1917 ஜனவரி 17 ஆம் திகதி கண்டி மாநகரின் நாவலப்பிட்டிக் கிராமத்தில் கோபால மேனனுக்கும் சத்யபாமா அம்மையாருக்கும் கடைக்குட்டியாக எம.ஜி.ஆர். பிறந்தார். இவரது பிள்ளைத் திருநாமம் இராமச் சந்தர். தமிழ் மீதும் தமிழ் மக்கள் மீதும் அளவுகடந்த பற்றும் பாசமும் இவர் கொண்டிருந்தார். ஆதலால், தனது பெயரைக் கூட இராமச்சந்திரன் என்று மாற்றிக் கொண்டார்.

**தந்தையின் மறைவு**

கேரளாவிலுள்ள நல்லேபள்ளிக் கிராமத்தில் தான் எம்.ஜி.ஆரின் தந்தையான மேனக்கத் கோபால மேனன் பிறந்தார். தாயார் சத்ய பாமா பாலக்காட்டுக்கு அருகேயிருக்கும் மருதூர்க் கிராமத்தில் பிறந்தவர். எம்.ஜி.ஆரின் தந்தை நீதிபதியாகக் கடமையாற்றியவர். அச்சமயத்தில் அவரிடம் ஒரு விசித்திர வழக்கு வந்தது. அதில் அவர் தனது உறவினர்களுக்கு அளித்த தீர்ப்புச் சாதகமாக இல்லாததால், தனது மனைவி மற்றும் நான்கு பிள்ளைகளான காமாட்சி, பாலகிருஷ்ணன், சுமித்ரா, சக்ரபாணி ஆகியோருடன் இலங்கைக்கு வந்து, கண்டியிலுள்ள நாவலப்பிட்டிக் கிராமத்தில் குடியமர்ந்தார். அத்துடன், இங்குள்ள பாடசாலை ஒன்றில் தலைமை ஆசிரியராகக்கடமையுமாற்றினார். இச்சமயத்தில்தான் அவர்களது குடும்பத்தில்எம்.ஜி.ஆர்.பிறந்தார். எம்.ஜி.ஆர். பிறந்து இரண்டரை வருடத்தில் அவரது தந்தை நோய் வாய்ப்பட்டு உயிரிழந்தார். காய்ச்சல், பேதியால் அடுத்தடுத்து மூன்று குழந்தைகளும் உயிரிழந்தனர். துன்பக்கடலில் அவரது குடும்பம் மூழ்கியது. தாயார் சோகமே உருவாக, கனவுகள் சருகாகக் காட்சியளித்தார். இங்கிருந்து 1921ஆம் ஆண்டு தனது இரு பிள்ளைகளுடன் தமிழகம் சென்ற அன்னை சத்யபாமா, கும்பகோணத்தில் குடியமர்ந்தார். அங்கு அவர்களுக்கு வேலுநாயர் என்ற ஒரு உறவினர் உதவிபுரிந்தார். அருகிலிருந்த ஆனையடிப் பள்ளியில் தனது இரு பிள்ளைகளையும் அன்னை சத்யபாமா சேர்த்துப் படிக்க வைத்தார்.

பாடசாலை விழா ஒன்றில் எம்.ஜி.ஆரை குசன் வேடத்தில் ஆசிரியர் நடிக்க வைத்தார். அவரது நடிப்பிற்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. கல்வி, நடிப்பு என்று அவரது பாடசாலைக் காலம் இனிமையாக நகர்ந்த வேளை, கொடிய வறுமை அவரது கல்வியை இடைநிறுத்தியது. 3ஆம் வகுப்புடன் எம்.ஜி.ஆர். கல்விக்கு முழுக்குப் போட்டார். அவரைத் தாயார் அழைத்துச் சென்று மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பனியில் நாடகம் நடிக்க அமர்த்தினார். அந்தப் பணியில் இணைந்த எம்.ஜி.ஆர். எண்ணற்ற நாடகங்கள் நடித்து வந்தார்.

> “
> தமிழகத்தைப் பொறுத்தவரை எம்.ஜி.ஆர். என்பது வெறும் நடிகரின் பெயரோ, வெறும் அரசியல்வாதியின் பெயரோ ஏன், வெறும் பெயரோகூட இல்லை. அது ஒரு குறியீடு. இந்த மனிதர் எதைச் சாதித்து இப்படியொரு உயரத்தைத் தொட்டார் என்று எல்லோருக்கும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அவசியம் தோன்றும்.

**படங்களில் நடிக்க வாய்ப்பு**

சிறந்த நடிப்பாற்றல் பெற்றிருந்த எம்.ஜி.ஆருக்குச் சினிமாவில் நடிப்பதற்கான வாய்ப்புக் கிட்டியது. 1936ஆம் ஆண்டு சதிலீலாவதி என்ற திரைப் படத்தில் அறிமுகமானார். அவரது முதல் படமே நூறு நாள்களுக்கு மேல் ஓடியது. 1947 இல் இராஜ குமாரி திரைப்படத்தின் மூலம் கதாநாயகன் அந்தஸ்தைப் பெற்றார். இப்படத்தில் அவருக்கு ஜோடியாக ஜானகி அம்மா நடித்திருந்தார். அவரையே தனது வாழ்க்கைத் துணையாகப் பின்னர் அவர் வரித்துக்கொண்டார். அவருக்கு 16 எண் என்றால் மிகவும் பிடிக்கும். 7 வெற்றி எண் என்று கூறுவார். இராஜகுமாரி அவரது 16 ஆவது திரைப்படம். அதில் அவரைக் கதாநாயகனாக நடிக்க வைத்த பெருமை ஜூபிடர் பிக்சரையே சாரும். ஜூபிடர் என்றால் சுக்கிரன் (வெள்ளி). இந்த நிறுவனம் எம்.ஜி.ஆருக்கு வெள்ளி திசையாகவே அமைந்தது. 1948இல் வீர அபிமன்யு, மோகினி முதலான படங்களையும் அந்நிறுவனம் தயாரித்து எம்.ஜி.ஆரை நடிக்க வைத்தது.

மோகினி படத்தில் தான் ஜானகி அம்மாவின் உறவு நெருக்கமாகி, 1962இல் திருமணத்தில் முடிந்தது. மர்மயோகி படத்தில் அவர் கரிகாலனாக நடித்தார். கரிகாலன் குறிவைத்தால் தவறாது, தவறும் குறியும் வைக்கமாட்டான் என்ற வசனம் எல்லோர் காதுகளிலும் ஒலித்தது. அது ஆணவத்தால் நாட்டைச் சூறையாடும் அரசியலை எதிர்த்துப் போராடும் கதை. பேரறிஞர் அண்ணா எம்.ஜி.ஆரைப் பார்க்க விரும்பியதும் தன் கட்சிக்கு அந்தத் தம்பி கரிகாலனைத் தேவை என்று நினைத்ததும் அந்தப் படத்தில் தான். 1952ஆம்ஆண்டுஅன்னைசத்யபாமாமறைந்தார். தாயாரின் மறைவு எம்.ஜி.ஆரைப் பெரும் சோகக்கடலில் ஆழ்த்தியது. அதே யாண்டில்சொந்தநாடகக்கம்பனியொன்றை உருவாக்கினார். அதன் பின்பு 1953இல் எம்.ஜி.ஆர். தி.மு.கவில் இணைந்தார். 1958இல் தனது சொந்தப் பணத்தில்-இரட்டைவேடத்தில் நாடோடி மன்னன் திரைப்படத்தைத் தயாரித்து வெளியிட்டார். அப்படத்திற்குப் பாட்டுக்கோட்டை என்று புகழப்படும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும் பாடல்கள் எழுதியிருந்தார். அந்தத் திரைப்படம் மக்கள் மத்தியில் மாபெரும் வரவேற்பைப் பெற்றது.

எம்.ஜி.ஆர். நடித்த அரசிளங்குமரி திரைப்படத்தின் வாயிலாக நவரச நாயகனும் இயக்குநருமான முத்துராமன் அறிமுகமானார். அவரது 'தெய்வத்தாய்' திரைப்படத்தின் வாயிலாக கதை–வசன கர்த்தாவான இயக்குநர் சிகரம் கே. பாலச்சந்தர், க.மாதவன் ஆகியோர் அறிமுகமாயினர். அவரது 'அடிமைப் பெண்' திரைப்படத்தின் வாயிலாக எஸ்.பி.பாலசுப்பிரமணியமும் அவரது சகோதரியான எஸ்.பி.சைலஜாவும் (ஆயிரம் நிலவே வா....) பாடல் பாடி அறிமுகமாயினர்.

மேலும், தேவர் பிலிம்ஸ் தயாரித்து வெளியிட்ட முதல் படம் 'தாய்க்குப்பின் தாரம்' ஆகும். இயக்குநர் சங்கர் இயக்கிய முதல் படம் 'பணத்தோட்டம்' ஆகும். மெல்லிசை மன்னன் எம்.எஸ்.விஸ்வநாதன், எம்.ஜி.ஆரின் 'ஜெனோவா' என்ற படத்திற்குத் தான் முதலில் இசையமைத்தார். ஏ.வி.எம். நிறுவனத்தின் முதல் படம் 'அன்பே வா' ஆகும். எம்.ஜி.ஆர். நடிகர் திலகம் சிவாஜி கணேசனுடன் நடித்த ஒரே படம் 'கூண்டுக்கிளி' ஆகும்.


**மக்களில் ஒருவர்**

மக்களில் ஒருவராக எம்.ஜி.ஆர். வாழ்ந்ததால், மக்களின் உள்ள மெனும் சிம்மாசனத்தில் அவர் கோலோச்சினார். நல்ல அரசிற்கு அடையாளம், “ஆள்பவன் தனக்குப் படையை அணையாக வைப்பவன் அல்ல: தன் மக்களைத் தனக்குத் துணையாக வைத்துக்கொள்பவன்” என்று கூறினான் 3ஆம் ஹென்றி அரசன். அதனால்தான் அவன் இறந்த பின்னரும் அவனது உடலை இன்றும் மக்கள் காப்பாற்றி வைத்து வணங்குகின்றனர். அதேபோன்று மாவீரன் நெப்போலியன் வாட்டர்லு போரில் வெற்றி கொண்டு குதிரை மீது அமர்ந்து வரும்போது, “என்னை எனது குதிரை சுமந்து வரவில்லை. மக்களின் ஆசிகள் தான் சுமந்து வருகின்றன” என்று கூறினான். உலகை வென்ற அலெக்சாண்டர் புருசோத்மனிடம், “என் வெற்றிக்குக் காரணம் என் வாளின் கூர்மையல்ல, பிரஜைகள் என் மீது கொண்ட நேர்மையான நம்பிக்கை தான்” என்று கூறினான். கிருபானந்தவாரியார், “வானில் ஒரு சந்திரன் உண்டு, அது நிலாச்சந்திரன். பூமியில் ஒரு சந்திரன் உண்டு, அது பொன்மனச்செம்மல் இராமச் சந்திரன்” என்று கூறினார்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, எம்.ஜி.ஆர். என்பது வெறும் நடிகரின் பெயரோ, வெறும் அரசியல்வாதியின் பெயரோ ஏன், வெறும் பெயரோகூட இல்லை. அது ஒரு குறியீடு. இந்த மனிதர் எதைச் சாதித்து இப்படியொரு உயரத்தைத் தொட்டார் என்று எல்லோருக்கும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அவசியம் தோன்றும். பள்ளிகளில் சத்துணவு கொடுத்ததாலா? காமராஜர் செய்ததுதானே? பொக்கைவாய்க் கிழவிகளைக் கட்டிப்பிடித்து அன்பைத் தெரிவித்ததாலா? அதுவும் அரசியலில் புதிதில்லையே! எம்.ஜி.ஆர். என்ன செய்ததால் தமிழக மக்களின் நெஞ்சில் இன்றுவரை நீடித்து வாழ்கிறார் என்று கண்டுபிடிப்பது ஓர் ஆர்வம் தூண்டும் சவால்.

சினிமாவில் இருந்தவரை, அவரை முந்த இன்னொருவர் அங்கே கிடையாது. முதல்வரான பிறகு உயிருடன் இருந்த வரை அவரை எந்தத் தேர்தலிலும் தோற்கடிக்க யாராலும் முடியவில்லை. நேருவின் மகளானாலும் சரி, வேலுப்பிள்ளை மகனாக இருந்தாலும் சரி. அவரது பக்கபலம் இருந்தால் அனைத்திலும் வெற்றி என்று தீர்மானமாக நம்பினார்கள். அப்படித்தான் சொல்கிறது சரித்திரம். பொது வாழ்வில் அவரது பிரம்மாண்ட வெற்றி ஓரிரவில் வந்ததல்ல. கடும் உழைப்பும் சலியாத உத்வேகமும் எளிதில் கண்டு பிடிக்கமுடியாத சூட்சுமக் கணக்குகளும் நிறைந்த அவரது வாழ்க்கை, சந்தேகமில்லாமல் ஒரு பெரிய பாடம். அன்னார் 1987 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி இவ்வுலகைவிட்டு மறைந்தார். ஆனால் அவரது நாமம் தமிழர்கள் உள்ளவரை நிலைத்து நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூர்யாவின் எஸ்3 ஜனவரி 26 வெளியாகும்

ஹரி இயக்கத்தில் சூர்யாவின் எஸ் 3 படம் ஜனவரி மாதம் 26ஆம் திகதி வெளியாக உள்ளது. இந்தப் படத்தில் சூர்யா, அனுஷ்கா, ஸ்ருதி ஹாஸன் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். எஸ் 3 டிசம்பர் மாதம் 16ஆம் திகதி வெளியாகும் என்றார்கள். அதன் பிறகு வெளியீட்டுத் திகதியை டிசெம்பர் 23ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்கள்.

இந்த நிலையில் தற்போது எஸ் 3 படம் நிச்சயமாக ஜனவரி மாதம் 26ஆம் திகதி வெளியாகும் என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே எஸ் 3 பொங்கலுக்கு வெளியாகும் என்று கூறப்பட்ட நிலையில் வெளியீடு தள்ளிப் போனது பெரிய நன்மைக்கே என்று சூர்யா டுவிட்டரில் தெரிவித்திருந்தார். எஸ் 3 படம் தமிழ் மற்றும் தெலுங்கிலும் ஒரே நாளில் வெளியாக உள்ளது என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** மனதில் நல்லெண்ணம் நிறைந்திருக்கும். உறவினரின் தேவையறிந்து உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**இடபம்:** முயற்சிக்கான நற்பலன் உங்களைத் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி ஏற்படும். வருமானம் பெருகும். பணியாளர்களுக்கு விரும்பிய சலுகை கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**மிதுனம்:** பணியில் தேவையற்ற பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் நிர்வாகச் சீர்திருத்தத்தில் ஈடுபடுவீர்கள். லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்ல நேரிடும்.

**கடகம்:** எளிதான செயல்கூட சுமை போலத் தோன்றும். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேறுவதில், தாமதம் உண்டாகும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

**சிங்கம்:** மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் சேமிக்கும் விதத்தில் ஆதாயம் வரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். புத்திரரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமையைத் திறம்படச் சமாளிப்பர். பெண்கள் புகுந்த வீட்டினரால் மதிக்கப்படுவர்.

**துலாம்:** லட்சிய நோக்குடன் பணியாற்றுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். நிலுவைப் பணம் வசூலாகும். குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்கும். பெண்களுக்கு காணாமல் தேடிய பொருள் கிடைக்கும்.

**விருச்சிகம்:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழிலில் நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவது நல்லது. சராசரி அளவில் வருமானம் வரும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாகலாம்.

**தனுசு:** திறமையை வெளிப்படுத்தி புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு எளிதில் பூர்த்தியாகும். ஆதாயம் அதிகரிக்கும். குடும்பத்துடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**மகரம்:** புத்துணர்வுடன் செயலில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். கடனில் ஒருபகுதியைச் செலுத்துவீர்கள். ஆரோக்கியம் பலம் பெறும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**கும்பம்:** பேச்சில் நிதானம் அவசியம். தொழில், வியாபாரத்தில் மந்தகதி நிலவும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாகலாம். பெண்களுக்கு உடல் நலனில் அக்கறை தேவை.

**மீனம்:** இடையூறு செய்பவரை இனம் கண்டு கொள்வீர்கள். தொழிலில் லாபம் சராசரி அளவில் இருக்கும். உறவினர் வகையில் திடீர் செலவு ஏற்படலாம். வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 6 | 8 | | | | 1 |
| 9 | 8 | 3 | | 5 | | | | |
| | | | | | | 5 | | |
| 4 | 9 | | | 7 | | 1 | | 5 |
| | | | | | | | | |
| 2 | | 5 | | 4 | | | 7 | 8 |
| | | 4 | | | | | | |
| | | | | 2 | | 3 | 5 | 6 |
| 5 | | | | 9 | 8 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 5 | 3 | 6 | 7 | 4 | 2 | 9 |
| 7 | 2 | 6 | 9 | 8 | 4 | 1 | 3 | 5 |
| 3 | 9 | 4 | 1 | 2 | 5 | 7 | 8 | 6 |
| 6 | 7 | 1 | 8 | 5 | 2 | 9 | 4 | 3 |
| 4 | 5 | 9 | 7 | 3 | 1 | 2 | 6 | 8 |
| 2 | 3 | 8 | 4 | 9 | 6 | 5 | 7 | 1 |
| 9 | 6 | 2 | 5 | 7 | 3 | 8 | 1 | 4 |
| 5 | 4 | 3 | 2 | 1 | 8 | 6 | 9 | 7 |
| 1 | 8 | 7 | 6 | 4 | 9 | 3 | 5 | 2 |


சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

பொய் சொல்லக்கூடாது, என முடிவெடுக்கின்ற அன்று தான்...



மனைவி, "ஏங்க... சாப்பாடு எப்படி இருக்கிறது?" எனக் கேட்கிறாள்.

"ஐ லவ் யூ!"
"ஐ டோன்ட் லவ் யூ!"
"நல்லா யோசிச்சு சொல்லு டியர்!"



"கண்டிப்பா ஐ டோன்ட் லவ் யூ!"
"ஓ. கே. வெயிட்டர்... எனக்கு மட்டும் பில் போடு!"
"ஏய்! ஏய்! லவ் யூடா செல்லம்!"

ஏன்யா... இங்க புடவைக்கு போடறதுக்காக கஞ்சி காய்ச்சி வைச்சேனே எங்க அது...



என்னாடி சொல்ற... எனக்கு சாதம் தான் பிசைஞ்சு வைச்சிருக்கேன்னு நினைச்சு சாப்பிட்டுட்டேனே...



முட்டை போடும் மூன்று உயிரினம் பேர் சொல்லு

கெமிஸ்ட்ரி ரீச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படித்தவனிடம் பக்குவம் பேசாதே!
பசித்தவனிடம் தத்துவம் பேசாதே...

தீவிர நாத்திகர் ஒருவர் தன் மகனுக்கு வைத்த பெயர் "கடவுள் இல்லை" பள்ளியில் தமிழ் ஆசிரியர் "வருகைப் பதிவேடு" பதிவிற்காக அவன் பெயர் சொல்லி அழைக்கும் போது வகுப்பறையில் லேசான சிரிப்பலை வந்து போகும்.

ஆசிரியர்: "கடவுள் இல்லை"
மாணவன்: "உள்ளேன் ஐயா"



## தலையலங்காரம்




1, 2, 3, தலைப்பகுதியின் பாதி அளவில் டொச் அல்லது பிரஞ்சு பின்னலை பின்னுக. தலையின் ஒரு பகுதிக்கு வைத்து பாண்ட் இடவும்.

4, 5, 6 பின்னர், கீழே உள்ள முடியை சுருட்டுக. விரும்பினால் கண்கவர் பாண்ட் இட்டுக் கொள்ளவும்.

7, 8 சுருட்டியை முடியை அள்ளி கொண்டை போன்று செய்து கிளிப் செய்யவும்.

# பீட்ரூட் சாறில் உள்ள மருத்துவ பயன்கள்



பீட்ரூட்டை பிழிந்து சாறு எடுத்து தேனுடன் கலந்து சாப்பிட்டு வர அல்சர் நோய் குணமாகும். பீட்ரூட்டை சமையல் செய்து சாப்பிடுவதுடன் பச்சையாகவும் சாப்பிடலாம்.

பீட்ரூட் சாறுடன் வெள்ளரிச்சாறு கலந்து சாப்பிட்டு வர சிறுநீரகங்களும், பித்தப்பையும் சுத்திகரிக்கப்படும்.

பீட்ரூட்டை நறுக்கி பச்சையாக எலுமிச்சை சாற்றில் தோய்த்து உண்டுவர குருதியில் சிவப்பணுக்கள் உற்பத்தியாகும்.

கல்லீரல் கோளாறுகளுக்கும் பீட்ரூட் ஒரு சிறந்த ரொனிக். பித்தம் அதிகமாகி அடிக்கடி பித்த வாந்தி எடுப்பவர்களுக்கு பீட்ரூட் ஒரு சிறந்த ரொனிக்.

பீட்ரூட் சாறு அஜீரணத்தை நீக்கி செரிமானத்தைக் கூட்டும். நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறந்த உணவாகும். மலச்சிக்கல் உண்டாகாது.



தலையில் ஏற்படும் வெள்ளை நிற பொடுகுகளைக் களைய பீட்ரூட் ஜூஸை பொடுகு இருக்கும் இடங்களில் மசாஜ் செய்து இரண்டு மணிநேரம் கழித்து சிகைக்காய் பவுடர் கொண்டு தலை குளித்தால் நாளடைவில் பொடுகுகள் சரியாகும்.

புற்றுநோயினால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் நோயாளிகள், பீட்ரூட் ஜூஸ் தினமும் 1 டம்ளர் பருகி வந்தால் புற்றுநோய் பரவுவது தடுக்கப்படும். ஆரம்ப நிலையிலுள்ள புற்றுநோயை குணமாக்கும் வல்லமை படைத்தது பீட்ரூட்.

பீட்ரூட் கீரையையும் மற்ற கீரைகள் போல் சமையல் செய்து சாப்பிட அல்சர், மஞ்சள் காமாலை போன்ற நோய்கள் சரியாகும்.

புதியதாக குருதி அணுக்கள் உருவாக துணை புரிகிறது. பச்சைக் காய்கறிகள், கீரைகள், பழங்கள், பேரீச்சம் பழம், அத்திப்பழம் ஆகியவற்றை அதிக அளவு உண்டும், குருதியின் அளவு அதிகரிக்காமல் இருக்கும் பட்சத்தில் பீட்ரூட்டை வாரத்திற்கு நான்கு நாட்கள் உண்டால் நல்ல பயன் கிடைக்கும்.

பீட்ரூட் சாறு உடலுக்கு குளிர்ச்சி தரும். பீட்ரூட் புற்று நோய்க்கு மருந்தாக பயன்படுகிறது. பீட்ரூட் இரத்த சோகை, உடல் எடை ஆகியவற்றை குறைக்கச் செய்யும்.

பீட்ரூட் சிறு நீரக எரிச்சலை குறைக்கிறது.

## முட்டை மசாலா

### தேவையான பொருள்கள்

முட்டை - 5 வேக வைத்தது
வெங்காயம் - 2
தக்காளி - 2
இஞ்சி - சிறிது
உள்ளி - 4 பல்
கொத்தமல்லி - சிறிதளவு
மிளகாய் தூள் - 1 தேக்கரண்டி
மஞ்சள் தூள் - 1/4 தேக்கரண்டி
கொத்தமல்லித் தூள் - 1/2 தேக்கரண்டி
காரம்மசாலா - 1/4 தேக்கரண்டி
உப்பு - தேவைக்கேற்ப
எண்ணெய் -தாளிக்க
சீரகம் - அரை தேக்கரண்டி
கறுவா - சிறிய துண்டு
கராம்பு - 2
ஏலக்காய் - 1
பெருஞ்சீரகம் - அரை தேக்கரண்டி
கறிவேப்பிலை - சிறிதளவு

### செய்முறை

பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி சீரகம், கறுவா, கராம்பு, ஏலக்காய் போட்டு, தாளிக்கவும். அத்துடன் நறுக்கின வெங்காயம் சேர்த்து வதக்கி பின்னர் தக்காளி சேர்த்து வதக்கவும். வதக்கியவற்றை எடுத்து சற்று ஆறவைத்து நறுக்கின இஞ்சி, உள்ளி சேர்த்து விழுதாக அரைக்கவும். மீண்டும் பாத்திரத்தில் சிறிது எண்ணெய் ஊற்றி பெருஞ்சீரகம், கறிவேப்பிலை தாளித்து, வேக வைத்த முட்டையை கீறி விட்டு சேர்த்து கிளறவும். அத்துடன் அரைத்த விழுதினையும் சேர்த்து கிளறிவிடவும்.

அத்துடன் மிளகாய் தூள், கொத்தமல்லித் தூள், மஞ்சள் தூள், காரம் மசாலா தூள் சேர்த்து சிறிது தண்ணீர் ஊற்றி கொதிக்கவிடவும். மசாலா தயாரானதும் கொத்தமல்லி தழை சேர்த்து இறக்கவும். சுவையான முட்டை மசாலா தயார்.







எனாமல் ஆபரணங்கள் அறிமுகமாகியுள்ளன. ஆடம்பர வடிவமைப்பில் உருவாகியுள்ள இவை சில வருடங்கள் உத்தரவாதத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. 2 ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீருள் இருந்து நிலத்துள்ளாய்.!



பரிணாம வளர்ச்சிப் போக்கிலே நீரில் வாழ்ந்த மீன் இனம் ஒன்று எவ்வாறு நிலத்தில் வாழ்வதற்கேற்ற உடலமைப்பிற்கு மாறியது என்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். இதன்படி 375 மில்லியன் ஆண்டுகள் பழமை வாய்ந்த ஒரு மீனின் கற்படிமமானது கடந்த 2004 ஆம் ஆண்டு கனடாவின் எல்லஸ்மரே தீவில் கண்டிபிடிக் கப்பட்டுள்ளது. இந்த கற்படிமத்தின் பெயர் ரிக்ராலிக் றோசியா என்பதே. இந்த மீன் படிமத்தின் தலை எலும்பினை ஆராய்ச்சிக்கு உட்படுத்தியதில் பல உண்மைகள் வெளியாகி உள்ளன.

மீன்களின் முன்னிரு துடுப்புகளும் கால்களாக மாறிவிட்ட பின்னர் நான்கு கால் உயிரினம் எப்படி தோன்றியிருக்கும் என்பதையே ரிக்ராலிக் றோசியாவின் கற்படிமங்கள் வெளிப்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடிப்படையிலே ரிக்ராலிக் றோசியா ஒரு நீர்வாழ் உயிரினம். தட்டையான தலையையும் உடலையும் கொண்டது. கற்படிமத்தில் இருந்த இந்த உயிரினத்தின் உடலமைப்பை விஞ்ஞானிகள் ஆராய்ந்தபோது ஆழமற்ற நீர்நிலைகளின் அடிப்பரப்பில் இவை வாழ்ந்திருக்கலாமெனவும் இவை அடிக்கடி நீர்ப்பரப்பிற்கு வந்து சென்றிருக்கலாமெனவும் கருதப்படுகிறது.

இதன் உடலமைப்பில் மண்டையோடு, கழுத்து, விலா எலும்புகள் காணப்படுகின்றன. ஆரம்பகால நகரும் உறுப்புகளும் இவைகளின் எலும்புக்கூட்டில் இருந்தன. மீனுக்குரிய செதில்களும் துடுப்புகளும் காணப்பட்டன. நீந்தும், நடக்கும் பண்புகள் ஒருமித்துக் காணப்பட்ட இந்த மீனினத்தின் படிமம் என்பது ஆய்வாளர்களான எங்களுக்கு உயிரிகளின் பரிணாமத்தை விளக்கும் ஒரு பாடப் புத்தகமாக விளங்குகின்றது என்கின்றனர்.

இந்த மீனின் கபாலம், மேலண்ணம், செவுள்கள் என்பவற்றை ஆராயும்போது நிலத்தில் வாழும் உயிரியின் கூறுகளும், ஆழமற்ற நீர்நிலைகளில் வாழும் உயிரியின் கூறுகளும் ஒருசேர காணப்பட்டதான தகவலும் விஞ்ஞானிகளால் தெரியப் படுத்தப்பட்டுள்ளது.

மேலும் கால்கள் தோன்றுவதற்கு முன்பாகவே ரிக்ராலிக் றோசியா மீன் ஒரு நான்குகால் உயிரினமாக பரிணமித்திருக்கிறது. இந்த காலகட்டத்தில் தான் தலைப்பகுதி உடலை சாராமல் திருப்பக்கூடியதாக மாறி யுள்ளது. இதே காலகட்டத்தில் மண்டையோடு தட்டையாகமாறியதுடன் மூக்குப்பகுதிநீண்டுபோயுள்ளது. தலையை மட்டும் வேண்டும்திசையில்திருப்பி இரையைப் பிடிக்க உதவியாக அமைந்துள்ளதான உடல் அமைப்பு இருப்பதாகக் கூறுகின்றனர். வேறு எந்த இடைப்பட்டதான உயிரினமும் இதுவரை கண்டறியப்படாததால் இந்த உரு மாற்றம் என்பது மிகக் குறைந்தகாலஇடைவெளியில்நடைபெற்றிருக்க வேண்டும் என ஆராய்ச்சியாளர்கள் கருத்துரைக்கின்றனர்.

## சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.
## கொடிகாமம் சந்தை வளாகத்தில் அமைந்துள்ள இரண்டு கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்.

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட கொடிகாமம் பிரதேசத்தில் அமைந்துள்ள கீழ்க்குறிப்பிடப்படும் கடைகளினை 01.02.2017 ஆம் திகதியிலிருந்து நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கு எம்மால் கேள்விகள் கோரப்படுகின்றன.

குறித்த கடைகளினை பலசரக்கு வியாபாரம், குளிரகம், காகிதாதிகள், புத்தக சாலை, புதினப்பத்திரிகை விற்பனை நிலையம், போன் திருத்தகம், கைத்தொலைபேசி விற்பனை நிலையம், போட்டோ பிரதி செய்யும் கடை, பிஸ்கட் கடை, பலவகை பழ வியாபாரம், மிக்சர் கடை, அழகுசாதனப் பொருள் விற்பனை போன்ற விற்பனை நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்த முடியும்.

**கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி** :- 26.12.2016 தொடக்கம் 09.01.2017வரை.
**கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி** :- 10.01.2017மு.ப 10.00மணிவரை.
**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி** :- 10.01.2017மு.ப 10.30மணி.
**கேள்வி திறக்கப்படும் இடம்** :- பிரதேசசபை தலைமை அலுவலகம்.
**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல | குத்தகை விவரம் | இடம் | ஆகக் குறைந்த கேள்வி தொகை (Vat,NBT தவிர) | கேள்விப் வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (Vat,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| 01 | கொடிகாமம் சந்தை உட்புறக் கடை இலக்கம் - 02 | கொடிகாமம் சந்தை வளாகம் | 420000.00 | 4200.00 | 750.00 |
| 02 | கொடிகாமம் சந்தை உட்புறக் கடை இலக்கம் - 07 | கொடிகாமம் சந்தை வளாகம் | 420000.00 | 4200.00 | 750.00 |

**நிபந்தனைகள்:-**

1. விண்ணப்பிக்க விரும்புவோர் குறித்த 26.12.2016 தொடக்கம் 09.01.2017 வரையான காலப்பதிக்குள் படிவத்தினை சாவகச்சேரி பிரதேச சபை தலைமை பணிமனையில் பெற்றுக் கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீளவும் ஒப்படைக்க வேண்டும்.
2. விண்ணப்பிக்க விரும்புவோர் கோரிக்கைக் கடிதமும் , ஆள் அடையாளத்தினை உறுதிப் படுத்தும் ஆவணத்தின் பிரதியினையும் சமர்ப்பிக்கவேண்டும்.
3. பூரணப்படுத்திய கேள்விப் படிவத்தினை தபாலுறையின் இடது பக்கமேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை "செயலாளர் சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்" என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும் முதல் மாதவாடகைப் பணத்தினை அடுத்து வரும் (ஒவ்வொரு மாதமும்) 10ஆம் திகதிக்குள் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான தண்டப்பணமாக 10% அறவிடப்படும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவும்.
5. கேள்விச் சித்திகாரராகத் தெரிவுசெய்யப்படுபவர் கேள்வித் தொகையினை முழுமையாகச் செலுத்திப்பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினையும் மேற்கொள்ளவேண்டும்.
6. சித்திகர குத்தகைகாரர் பாதுகாப்பு வைப்புப் பணமாக மூன்று மாத கடை வாடகைத் தொகையினை முற்பணமாக செலுத்த வேண்டும்.
7. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபாரஉரிமகட்டணத்தினைவருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழினையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
8. சித்திகர குத்தகைகாரர் சாவகச்சேரி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு இணங்க நடந்துகொள்ள வேண்டும்.
9. மேலதிக விவரங்களை சாவகச்சேரி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செயலாளர்,
சாவகச்சேரிபிரதேசசபை,
கொடிகாமம.
2016.12.24.

(C/27247)(10.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்



### தம்பிப்பிள்ளை காசிநாதன்

(ஓய்வுபெற்ற பிரதிப் பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்)

சுதுமலை தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை காசிநாதன் 22.12.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவசோதியின் பாசமிகு கணவரும், சுசீலன், கிருஷாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயகுமார் (ஆசிரியர்), தர்மினி ஆகியோரின் அன்பு மாமனாரும், சங்கமேந்தி, சிவசங்கர், சகாரன் ஆகியோரின் அன்புப் பேரனும், சிவதாசன், சிவநேசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.12.2016 திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகத் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**தேவசகாயம் ஜெயகுமார்**
**(மருமகன் - ஆசிரியர்- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, முன்னாள் ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி)**

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.
(J/7104)
(11,18)



### பாலசுந்தரம் சிவானந்தன்

(முன்னாள் பணியாளர், அண்ணா தொழிலகம், இணுவில்)

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் மேதர் ஒழுங்கை மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுந்தரம் சிவானந்தன் 21.12.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம் - பாலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வர்களான தாமோதரம்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் சாரதாதேவியின் அன்புக் கணவரும் டுஷ்யந்தனின்( Nations Trust Bank - திருகோணமலை) பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் நாளை (25.12.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மேதர் ஒழுங்கை,**
**மானிப்பாய்.**
(J/7095)
(14,17,18,)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 615 6495 077 175 2717**

# பூமிக்கு வருகிறது அடுத்த பேரழிவு



பலகோடி உயிரினங்கள் வாழும் இடம் தான் பூமி, இது யதார்த்தம்! சூரிய மண்டலத்தில் உள்ள மிகப் பெரிய உட் கோள்களில் பூமியும் ஒன்று, இது அறிவியல்!

பூமியில் பல்லி, பாம்பு, ஆடு, மாடு போன்று 87 லட்சம் உயிரினங்கள் உள்ளன. பூமியில் ஆதி காலத்தில் தோன்றிய உயிரினங்கள் அனைத்துமே இப்போது காணப்படுவதாகச் சொல்ல முடியாது. பல்வேறு காரணங்களால் தாக்குப்பிடிக்க முடி யாமல் அழிந்த உயிரினங்கள் பல உண்டு.

இந்தப் பூமி சுமார் 4.54 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் உருவானதிலிருந்து பல உயிரினம் பேரழிவுகளைச் சந்தித்துள்ளன.

பூமியின் முதல் பேரழிவு 44 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் உலகின் கண்டங்கள் அனைத்தும் ஒரே நிலப் பிண்டமாக இருந்தபோது நிகழ்ந்தது. அப்போது நிலப்பகுதிகளை விடக் கடற் பகுதியில்தான் அதிக உயிரினங்கள் இருந்தன. கடலின் அதிகமான பகுதி பனியால் மூடப்பட்டதால் பேரழிவு ஏற்பட்டு உயிரினங்களில் 85 வீதம் அழிந்து போயின.

அடுத்த பேரழிவு 29 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் நடந்ததில் கடல்களில் இருந்த உயிரினங்களில் 96 வீதம் அழிந்தது. நிலப் பகுதியில் 70 வீத உயிரினங்கள் அழிந்தன.

அடுத்த அழிவு 20 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் நடந்தது. இந்த அழிவுக்கு பின்னர் தான் டைனோசர் உயிரினங்கள் தோன்றின.

சுமார் ஆறரைக் கோடி ஆண்டுகளுக்கு முன்னர் ராட்சத விண்கல் ஒன்று பயங்கர வேகத்தில் பூமியில் வந்து மோதியதில் டைனோசர் இனம் முற்றிலும் அழிந்து போனது.

மீண்டும் இதே போல பூமியில் விண்கற்கள் விழுந்தாலோ, மிகபெரிய எரிமலை வெடித்தாலோ அதிலிருந்து பெரும் தூசி படலம் தோன்றி, சூரியனிலிருந்து பூமிக்குக் கிடைக்கும் வெப்பம் குறைந்து, அதனால் பருவநிலை பாதிக்கப்பட்டால் பல உயிரினங்கள் உணவின்றிப் பட்டினிச் சாவு அடையக்கூடும்.

இனிப் பேரழிவு வந்தால் அதற்கு மனிதனின் செயல்தான் காரணம் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

ஆம், அதிகம் காணப்பட்ட சிட்டுக் குருவிகள் இப்போது தென்படுகிறதா? யானைகள் பல கொல்லபடுகின்றன, குறைந்து வரும் இனங்களான புலிகள் கூட வேட்டையாடப்பட்டு வருகின்றன.

(து)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**நடராசா நாகராசா**

அவர்கள் 23.12.2016
வெள்ளிக்கிழமை அன்று
**கலாபூசணம்**
விருது பெற்றதையிட்டு பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

**திரு. பொ. இராசேந்திரம் குடும்பம்**
**ஓய்வுபெற்ற கிராமசேவையாளர், இளவாலை.**

இம்முறை தனயோகம் உங்களுடையதா? 23.12.2016 | 2073 | சிவப்பு

கடகம் — வெற்றி இலக்கங்கள் 32 35 40 51

ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி ரூ 4,231,620 /=

வெற்றி இலக்கங்கள் 10 44 — டபள் சான்ஸ்

சீட்டிழுப்பு வாரம்: 77 — சீட்டிழுப்பு திகதி: 23.12.2016

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 81,602,320/-

Z 15 32 33 80

சீட்டிழுப்பு வாரம்: 525 — சீட்டிழுப்பு திகதி: 23.12.2016

வெற்றி இலக்கங்கள் 06 20 30 53 T

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 20,217,140/-

விசேட இலக்கங்கள் 273 | 143 | 25


## அறிவித்தல்
### பருத்தித்துறை நகரசபை பகிரங்க ஏலம்

01.01.2017 தொடக்கம் 31.12.2017 வரையான காலப்பகுதிக்கு கீழ்வரும் நிலையங்களை குத்தகைக்கு நடாத்துவதற்கான பகிரங்க ஏலம் **28.12.2016** ஆம் திகதி **பி.ப 2.00** மணிக்கு இவ்வலுவலகத்தில் நடைபெறும் .அதில் கலந்து கொள்வோர் அன்றைய தினம் மு.ப 10.00 மணிக்கு முன்னர் மீளளிப்பு செய்யப்படாத **ரூ.500.00** வைப்புப் பணமாக செலுத்தி ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம். மேலதிக தகவல்களை நகரசபை அலுவலகத்தில் கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**01. மீன் சந்தை** **03. ஆட்டிறைச்சிக்கடை**
**02. மாட்டிறைச்சிக்கடை**

**24.12.2016** **திரு.பு. ரமேஸ்வரன்**
**செயலாளர் ,பருத்தித்துறை நகரசபை .**

## பகிரங்க ஏலம் - யாழ்.மாநகரசபை
## பெரியகடை மரக்கறிச்சந்தை

யாழ் மாநகர சபையின் ஆளுகையின் கீழுள்ள பெரிய கடை மரக்கறிச்சந்தையை 2017 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலம்.

**இடம்:- நானாவித இறைவரிப்பகுதி,யாழ்.மாநகர சபை**

**காலம்:- 2016.12.29 ஆம் திகதி மு.ப 10.30**

**ஆரம்பகேள்வித்தொகை: 1,643,500.00 (வரி நீக்கலாக)**

தேவையான விவரத்தை அலுவலக நேரத்தில் நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு.பொ.வாகீசன்,**
**ஆணையாளர்,**
**மாநகரசபை.**

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு** 18 . 06 . 1957



**உதிர்வு** 28 . 12 . 2013

அமரர்
## முதலி மார்க்கண்டு

**திதி: அபரபக்க ஏகாதசி (24.12.2016)**

ஊர் புகழ உத்தமனாய் வாழ்ந்து
உறவுகளை நேசித்து இன்ப நிழல்தந்தாய்
ஆண்டவன் அடி சேர்ந்து ஆண்டு மூன்று ஆனதுவோ
என்றென்றும் உம் நினைவால் வாழ்ந்திருப்போம்
நெஞ் [illegible] கும் வரை நாம் மறவோம்...

விடத்த[illegible]
உசன் [illegible]

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**திருமதி லக்கினேஸ்வரி நித்தியானந்தன்**

திருநெல்வேலி வளாக வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லக்கினேஸ்வரி நித்தியானந்தன் (22.12.2016) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நித்தியானந்தத்தின் அன்பு மனைவியும் யசோதா (யா/கனகரத்தினம் ம.ம.வி) காலஞ்சென்ற முகுந்தன் மற்றும் கவிதா (யா/புனித கென்றியரசர் கல்லூரி), நிமலன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் குலரத்தினம் (EFLI - அமெரிக்கா உதைப்பந்தாட்ட இணைப்பாளர் யாழ்ப்பாணம்), கஜந்தா, சந்திரகுமார் (வலி தென்மேற்குப் பிரதேசசபை), சாமினி (லண்டன்) ஆகியோரின் அன்புமாமியும் மதீஷன் (யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), சங்கீர்த்தன் ஆர்வலன் (யா/இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் இலங்கைநாயகம், மங்கையர்க்கரசி காலஞ்சென்றவர்களான அரசநாயகம், செல்வநாயகம் மற்றும் பாக்கிய லட்சுமி, இராஜேஸ்வரி, தனநாயகம், சியாமளா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஞானேஸ்வரி, இராஜகோபால், செல்வப்புனிதவதி, திலகவதி காலஞ்சென்ற குகதாசன் மற்றும் பேரின்பசிவம், சாந்தி, சண்முகலிங்கம், இராஜேஸ்வரி, ஊர்மிளாதேவி, பத்மலோஜினி, சச்சிதானந்தன், பிரமானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.12.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**42, வளாகவீதி,**
**திருநெல்வேலி. 021 222 6659**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(ஜே/7032)(17.19.20)

## தவறிவிட்டது

**கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சிறீஸ்கந்தராசா சிவரூபன் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம், வரிப்பத்திரம் என்பன சந்நிதி கோயிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.**
**(சன்மானம் வழங்கப்படும்)**
**தொடர்பு - 077 216 5762**
**ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு.**

## விற்பனைக்கு

01. சிவப்பு முட்டை ஒரு நாள் கோழிக்குஞ்சுகள் முற்பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
02. கின்றாஜ கோழிக்குஞ்சுகள்(ஊர்க்கோழிக்குஞ்சுகள்)
03. 2 மாதம் நிறைந்த [illegible] சிவப்பு முட்டை கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு விலை ரூ. 675/=

**தொடர்பு: 077 531 5382** (27112)(14,17,18)

## கடைகள் வாடகைக்கு

**யாழ். ஆஸ்பத்திரி வீதியில் கடைகள் வாடகைக்குண்டு. நிறுவனங்களுக்கும் ஏற்றது. தொடர்பு - 077 162 0626**

## காணி விற்பனைக்கு

**கோண்டாவில் பழனியாண்டவர் கோயிலுக்கு வடக்குப்புறமாக 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு - 076 6972 287**

## விற்பனைக்கு உண்டு

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
புறொயிலர் 1Kg - 450/= விற்கப்படும்.
அத்துடன் ஊர்ச்சேவல், பேரன்ஸ்,
கல்பேட் முட்டை என்பனவும்
விற்பனை செய்யப்படும். (27113)(14,17,18)

**தாசன் பாம்**
**158 2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு....

(01 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நிறைவேறியது. வடக்கு மாகாண சபையில் 5 நாள்கள் ஆராயப்பட்ட இந்த வரவு-செலவுத்திட்டம் நேற்று நிறைவேற்றப்பட்டது. ஐந்து நாள்களாக இடம்பெற்று வந்த விவாதம் நேற்று முடிவுற்றது. இதன்போதுவடக்கு மாகாண முதலமைச்சரும்வடக்குமாகாணநிதி அமைச்சருமான சி.வி. விக்னேஸ்வரன் 2017 ஆம்ஆண்டுக்கானவரவு-செலவுத் திட்டத்தைச் சபையில் சமர்ப்பித்தார். அடுத்த ஆண்டுக்கான மொத்த ஒதுக்கீடான 22 ஆயிரத்து 728.117 மில்லியன் ரூபாவில் கல்வி அமைச்சுக்கு மீண்டுவரும் செலவினமாக 9 ஆயிரத்து 670.871 மில்லியன் ரூபாவும், மூலதனச்செலவினமாக 666.5 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டன. இறுதியாகக் கல்வி அமைச்சு மற்றும் மீன்பிடி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சுமீதான விவாதம் இடம்பெற்று, இதன்பின்னர் வடக்கின் மொத்த வரவு-செலவுத் திட்டத்தையும் ஏற்குமாறு சபையில் அவைத்தலைவர் கூறினார். இதனை அடுத்து உறுப்பினர்களின் எதிர்ப்பின்றி அது நிறைவேற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டது. (த-8)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை திருமதி
கவிதா சந்திரகுமார் அவர்களின்
அன்புத்தாயார்
திருமதி


**இலக்கினேஸ்வரி நித்தியானந்தன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவர்களின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரி கழகம்,
யா/புனித கென்றியரசர் கல்லூரி
இளவாலை.

## மரண அறிவித்தல்

### மாரிமுத்து சண்முகநாதன்
(சின்னத்துரை)



பிறப்பு 01.09.1951 — இறப்பு 23.12.2016

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சேமபுலம் வீதி, உரும்பிராய் தெற்கை வசிப்பிட மாகவும் கொண்ட மாரிமுத்து சண்முகநாதன் நேற்று (23.12.2016) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து-தெய்வானை தம்பதிகளின் அன்புமகனும் லோகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற நாகராசாவின் அன்புச் சகோதரனுமாவார்.


அன்னாரது இறுதிக்கிரியைகள் 25.12.2016 ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சேமபுலம் வீதி,
உரும்பிராய் தெற்கு.**

**தகவல்:
குடும்பத்தினர்.
077 651 0244**

## மரண அறிவித்தல்

### தம்பையா சங்கரப்பிள்ளை
(பாண் விற்பனையாளர் - கைதடி)



கைதடி கிழக்கு கைதடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட தம்பையா சங்கரப்பிள்ளை 23.12.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - சின்னம்மா தம்பதியரின் புதல்வரும் சின்னம்மா வின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற செல்லையா - வள்ளிப்பிள்ளை தம்பதி யரின் மருமகனும் கனகம்மா, கனகராசா (ஓய்வு பெற்ற விற்பனை திணைக்களம்) காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் புஸ்பராசா (முதியோர் இல்லம்), புஸ்பலீலாவதி, யோக மலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற நவரத்தினம் (கனகா பத்திரிகை விற்பனையகம்) மற்றும் பாக்கியராணி, உமா காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் சந்திரகுமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வினோதன் - அனுசியா (லண்டன்), வசந்தன், கம்சனா, வைஸ்ணவி, நிருசன், கஜானா, டிபர்சன் (லண்டன்), பாரிசா - நிமலன் (லண்டன்), கபிசன் (லண்டன்), சபேஸ், உஷா, பேணுஜா, தலக்சனா, விபிசன் ஆகியோரின் அன்புப்பேரனும் பபின் (லண்டன்) இன் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2016) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கைதடி கிழக்கு, கைதடி.
070 212 3538**


**தகவல்:
குடும்பத்தினர்**

(ஜே/7122)(17.19.20)

## மரண அறிவித்தல்

# கந்தையா பாலசிங்கம் (பிரபல வர்த்தகர் நல்லூர் மணியம்)

**( உரிமையாளர் - நல்லூர் மயிலூரன் அரங்கம், நல்லூர் மணியம் திருமணசேவை)**



**இல. 55/2, அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**பிறப்பு 29.08.1938 — இறப்பு 20.12.2016**

யாழ்.காரைநகர் விளானைப் பிறப்பிடமாகவும், யாழ். வீரமாகாளி அம்மன் வீதி, கொழும்பு, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசிங்கம் (20.12.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும் ஆனந்தலட்சுமி (ஆனந்தி) இன் கணவரும் மஞ்சுளா (அமெரிக்கா), மயிலூரன் (கனடா), சதிசா (லண்டன்), கலாஜினி (அமெரிக்கா), காலஞ்சென்ற கயேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வராசா, கிருஷ்ணன் காலஞ்சென்ற கனகரட்ணம் மற்றும் தில்லையம்பலம், பூமணி, நாகேஸ்வரி, அற்புதம், யோகராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை, இராசையா மற்றும் சத்தியலட்சுமி, சிவபாக்கியலட்சமி, ஆனந்தராசா ஆகியோரின் அன்புச் சகலனும் காலஞ்சென்ற ராஜாசெல்வன் மற்றும் அருந்தவராணி, சிறீஸ்கந்தராஜா, விஜயராஜா ஆகியோரின் மாமனாரும் மீனு, விஷ்னு, லட்சுமி, சிவதர்சன், சதீசன், சிந்து, சுகன்யா, இந்துயன், சகாரிக்கா ஆகியோாரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.12.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

ஆனந்தலட்சுமி - 0094 777 840 769, 0094 212 219 732,
மயிலூரன் - 077 173 9911,
சதீசா - 0044 208 782 1486, 0044 75 54422 158, 0044 77 86191 794,
கலாஜினி - 0019 172242349

(ஜே/7120)(17.19.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



தோற்றம்
15 . 12 . 1924

மறைவு
25 . 11 . 2016

**அமரர் சின்னையா குணரத்தினம்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (25.12.2016) ஞாயிற்றுக் கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.77, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
(ஜெ.6995) (13.18)
குடும்பத்தினர்.


# பன்னிரண்டு நோய்கள்!

## பதுங்கிப் பாயும் வீ(கா)ரியங்கள்.!



காலநிலை மாற்றம் என்பது இன்று உலகளாவிய பிரச்சினையாகக் காணப்படுகிறது. மனிதர்களுக்கு மட்டுமல்ல. விலங்குகளுக்கும் இவை விதிவிலக்கல்ல. வனபாதுகாப்பு சங்கத்தைச் சேர்ந்த அறிவியலாளர்கள் உலகளாவிய காலநிலை மாற்றத்தினால் 12 வகையான நோய்கள் மனிதர்களையும், வன உயிரினங்களையும் தாக்கக்கூடும் என எச்சரித்தனர். எச்சரிக்கின்றனர். வெப்பநிலை மாற்றத்தினால் பரவக் கூடிய இந்த நோய்களையும் அவர்கள் கண்கொண்டு பட்டியலிட்டுள்ளனர்.

இந்த நோய்க் கிருமிகளின் தாக்குதலை தாக்குப்பிடிப்பதற்கும் அதன் தாக்கத்திலிருந்து தப்பித்துக்கொள்ளவும் வனவாழ்வு என்பதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது அவசியம் என்றும் இந்த வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

காலநிலை மாற்றம் என்பது பனிக்கட்டியின் உருகுநிலை, உறைநிலை மாற்றங்களையும் கடல் மட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் எப்படி கடற்கரையை சார்ந்த கிராமங்களையும் நகரங்களையும் பாதிக்கின்றன என்பதையும் மட்டுமே கருதுவதல்ல. நீண்டு சிந்திக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக ஆபத்தான நோய்க் கிருமிகள் எவ்வாறு பரவுகின்றன என்பதைப்பற்றி நாம் கவனத்தில் கொள்வதில்லை. இதனை தவிர்த்து அவை பற்றி விழிப்படைய வேண்டும்.

வனவிலங்குகளுக்கு ஏற்படும் நோய்கள் எப்போதும் அவை வாழும் சுற்றுச்சூழலை சார்ந்தது. சூழலில் ஏற்படும் சிறுமாற்றங்கள் வனவிலங்குகளை நோய்க்கு ஆட்படுத்துவதுடன் நோய்களையும் பரப்புகின்றன.

குளோபல் கிளைமேற் சேஞ் அன்ட் எக்ஸ்றீம் வெதர் இவென்ற் என்ற புத்தகத்தில் வைல்ட் லைவ் கெல்த் ஆஸ் அன் இன்டிகேட்டர் ஒவ் கிளைமேற் சேஞ் என்பதான கட்டுரை வெளியாகி உள்ளதாகவும் அதன் தகவலளிப்பின்படி வன உயிரினங்களைத் தாக்கி நோயை உண்டு பண்ணும் இந்த நோய்க்கிருமிகள் பொருளாதார சேதத்தையும் ஏற்படுத்துவதாகவும் 1990 ஆம் ஆண்டில் மறைந்துபோன இன்புளூவென்சா போன்ற நோய்கள் மறுபடியும் உருவெடுத்து உலகப்பொருளாதாரத்தில் 100 பில்லியன் டொலர் அளவிலான பொருளாதார சேதத்தை கடந்த காலத்தில் ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதான ஆதார உரைப்பினையும் ஆய்வாளர்கள் குறித்துக்காட்டியுள்ளனர்.

வனபாதுகாப்பு சங்கத்தின் அறிக்கை பார்சிலோனா நகரில் நடந்த உலக பாதுகாப்பு காங்கிரஸ் கூட்டத்தில் வெளியிடப்பட்ட போது காலநிலைமாற்றம், புவிவெப்பமாற்றம், உறைநிலை மாற்றம் இவற்றால் வன உயிரினங்களில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சில நோய்களின் விவரங்களை பட்டியல்படுத்தியுள்ளது. இந்த பட்டியலானது இறுதியானது அல்ல எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி,

1. ஏவியான் இன்புளூவென்சா
2. பேபிசியாசிஸ்
3. கொலரா
4. எபோலா
5. குடல் ஒட்டுண்ணிகள்
6. லைம் நோய்
7. பிளேக்
8. சிகப்பு அலைகள்
9. ரிப்ட் வேலி ஜுரம்
10. உறக்கநோய்
11. காசநோய்
12. மஞ்சள் ஜுரம் ஆகியவையே அந்த நோய்களின் பெயர்கள்.

ஆக,நோய்க்காரணிகள் இடம்பெயருவதை கூர்மையாக கண்காணிப்பதன் மூலமே விலங்குகளுக்கும் மனிதர்களுக்குமிடையே இந்த நோய்கள் தொற்றிக்கொள்வதனையும் பரிமாறிக் கொள்ளப்படுவதனையும் தடுக்க முடியும் என்பதான விழிப்பூட்டல்களை விஞ்ஞானிகள் வெளிப்படுத்தியுள்ளனர்.


## இருபத்தாறாம் ஆண்டு நினைவலைகள்



பாஷையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட
**திருமதி ஆரோக்கியம் முடியப்பு**

பிறப்பு
10.09.1910

இறப்பு
24.12.1990

* இரத்தத்தைப் பாலாக்கி, ரசவாத வித்தை புரிந்து வித்து ஆலாக விழுதெறிய வைத்தவள் நீ!
* தங்கள் முகம்பார்க்காத நாள்கள் எங்கள் வாழ்வின் இருண்ட யுகங்களே!
* காலையிளங் காற்றில் மிதந்துவரும் பூபாளம் உங்கள் குரலில் கேட்கிறது தாயே!
* உங்கள் தியாகத்தரிசனம் தாய்மைக்கு உலகில் கிடைத்த வெகுமானம்!
* நீயுணர்த்திய பயனுள்ள கல்வித் தேடல்களால் எங்கள் இதயம் வசந்தத்தின் பசுமையை ஸ்பரிசிக்கிறது!
* கண்களிலே நீர்வற்றாத வரைக்கும் உன் நினைவுகளிலே பூச்சொரிவோம் அம்மா

35/6, விதானையார் ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
(J.6976)(13.18)

மகன் - சிங்கராயரும்
உறவுகளும்.



## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**நல்லதம்பி கனேசன்**
(பசறை, கிளிநொச்சி,
யாழ்ப்பாணம் - பிரபல வர்த்தகர்)
திதி: கார்த்திகை மாத அபரபக்க ஏகாதசி



தோற்றம்
15.04.1928

மறைவு
16.12.2006

எத்தனை ஆண்டுகள் ஆனாலும் என்றும் எம்
நெஞ்சில் நீங்காத உங்கள் நினைவுகளில்
உங்கள் ஆத்மா சாந்திக்காக
வாரிவளவுப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கும்

தகவல்: மனைவி
9/5, கோபால்லேன்,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **கந்தசாமி இந்திரகுமார் (குமார்)**

மலர்வு
27.12.1965

உதிர்வு
24.12.2014

ஆண்டாண்டு காலம் அழுதாலும் தீருமா உன் இழப்பு
ஈராண்டு காலம் ஓடி மறைந்தாலும் தீராது உன் பிரிவு
காலங்கள் மறையலாம் எம் கனவுகள் சுமந்த
உன் நினைவுகள் மாறாது.

பிரிவால் வாடும்....
குடும்பத்தினர்.
077 663 7883

620, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
(J7069)(13.18)



## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
19 . 12 . 1975



இறப்பு
24 . 12 . 2013

**திருமதி சிவலோஜினி சுரேஸ்குமார்**
(செல்வா எலக்ரிக்கல்ஸ்- திருநெல்வேலி உரிமையாளரின் அன்பு மனைவி)

வாழ்வெனும் பெருநதியில்
வற்றாத நினைவுகளுடன் வாழ்கின்றோம்
எரிந்தடங்கிப் போகாது உன் நினைவுகள்
வாழ்கின்றாய் நீ
அழியாத வானத்தின் வண்ணமாய் எம்முடன் கலந்து
பெரும் பேறாய் நீ வந்து சென்ற தடமெங்கிலும்
காயாதிருக்கின்றன எம் கண்ணீர்த்துளிகள்

கலைவாணி வீதி, சித்தன்கேணி.
077 764 2771
(J.7070)(13.18)

என்றும் நினைவில்...
கணவர், பிள்ளைகள்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வேலுப்பிள்ளை இரத்தினம்**

தோற்றம்
20.11.1930

மறைவு
06.01.2016

திதி: ஏகாதசி

வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மோடு பயணித்த எமது ஐயாவே!
இன்றுடன் ஓராண்டு முடிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை
விட்டு மறையாது ஐயா!
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

வாரிவளவு,
காரைநகர்.
(J.7094)(13.18)

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்திச்...

முதலமைச்சரால் கொண்டுவரப்பட்டது. இதற்குச் சபை உறுப்பினர்கள் அனைவரும் தமது ஏகோபித்த ஆதரவைத் தெரிவித்தனர். இதில் உரையாற்றும்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக வடக்கு மாகாணத்துக்கு உரித்துக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதில் அதிகாரங்களைப் பகிர்வது சம்பந்தமான சில விடயங்கள் கூறப்பட்டுள்ளன. சில விடயங்களை கொழும்பு அரசு நடைமுறைக்குக் கொண்டு வரும்பொழுது எங்களுடன் கலந்தாலோசிக்கவேண்டும். அப்போது எங்களுக்கு அந்த விடயங்களில் உடன்படக் கூடியதாக இருந்தால் அது சட்ட வரைவாகும். அல்லாதுவிட்டால் அது சம்பந்தமாக நாடாளுமன்றில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டுப் பெரும்பான்மை வாக்கின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தலாம். ஆனால் குறித்ததொரு விடயத்தை மாகாண சபை ஒன்று ஏற்காத சந்தர்ப்பத்தில் அந்தச் சட்டங்கள் அந்த மாகாண சபைக்கு ஏற்புடையதாக அமையாது என்ற நிலமை இருக்கின்றது.

கொழும்பு அரசு புதிய சட்டமொன்றைக் கொண்டுவர முற்படுகிறது. அபிவிருத்திச் சிறப்பு ஏற்பாடுகள் சட்டம் என்ற பெயரில் அதனைக் கொண்டுவர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்தச் சட்டத்தினூடாகக் கொழும்பு அரசு, தான் நினைத்ததை எவ்வாறு செய்யவேண்டும் என்று ஒரு முடிவுக்கு வந்து நாடு முழுவதுமாக பொருளாதார ரீதியில் தாங்கள் நினைத்ததைச் செய்ய முயற்சி செய்கின்றது.

சில மாதங்களுக்கு முன்னர் ஒரு சம்பவம் இடம்பெற்றது. அநுராதபுரத்திலிருந்து செட்டிகுளம் நோக்கி தண்ணீர் கொண்டுவருவது சம்பந்தமாகச் செயற்திட்டம் ஒன்று இருக்கின்றது. அதனை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் குறித்த திட்டம் வடக்கு மாகாண எல்லைக்குள் வரும்போது அது குறித்துப் பரிசீலனை செய்யவேண்டும். அத்துடன் என்னவிதமான விடயங்களை உள்ளடக்க வேண்டும் என்பதை நாம் ஆராயவேண்டும். ஆகவே இது தொடர்பான விடயங்களை ஆராய்வதற்கு எங்களுக்கு அதிகாரம் இருக்கின்றதா? என்று மகாவலி அதிகார சபையிடம் வினவினேன்.

அந்தந்த நேரத்தில் அந்தந்தச் சட்டத்தில் என்ன இருக்கின்றதோ அந்தச் சட்டத்தின் படி அவற்றை நடைமுறைப்படுத்தலாம் என்று பதிலளித்தனர்.

மகாவலி அதிகார சபை 1979 ஆம் ஆண்டு வந்தது. ஆனால் 13 ஆவது திருத்தச் சட்டமானது 1987 ஆம் ஆண்டிலேயே வந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆட்சிக் காலத்தில் நாடு முழுவதும் சில உரித்துக்களையும் அதிகாரங்களையும் பாவிக்க கூடியதாக இருந்தது. அந்த அதிகாரங்களைத் தொடர்ந்து பயன்படுத்த முனைகின்றனர். மாகாண சபை வந்த பின்னர் அதன் உரித்துக்களை உணர்ந்து அவற்றின் அதிகாரங்கள் தொடர்பில் அறிந்து செயற்படவேண்டும். ஆனால் அந்த அதிகாரத்தின் ஊடாகத்தான் எல் வலயத்தில் மக்களைக் கொண்டுவந்து குடியிருத்தியிருக்கின்றார்கள்.

இதுபோலவே அனைத்து விடயங்களிலும் கொழும்பு அரசு தான்தோன்றித்தனமாகத் தாங்கள் நினைத்ததைச் செய்யவேண்டும் என்பதற்காக இந்த அபிவிருத்திச் சட்டத்தையும் கொண்டுவர முற்படுகின்றனர்.

மாகாண சபைக்கு வரவேண்டிய அதிகாரங்கள், செயற்பாடுகள் போன்றவற்றில் கொழும்பு அரசு தலையிடுவது ஏற்புடையதல்ல. ஆனால் அனைத்து மாகாண சபைகளின் முதலமைச்சர்களையும் பொறுத்தவரை ஓர் ஒற்றுமை காணப்படுகின்றது. அதேபோலத்தான் ஊவா மாகாண சபையிலும் குறித்த சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அதேபோல நாங்களும் எதிர்க்க வேண்டிய நிலமை இருக்கின்றது. ஏனெனில் நாங்கள் கீழிருந்து மேல்நோக்கிப் பயணிக்க வேண்டிய தேவையில் இருக்கின்றோம். ஆனால் இந்தச் சட்டவரைவு வருமானால் நாங்கள் மேலிருந்து கீழ் நோக்கிச் செல்கின்ற தன்மையே காணப்படும். அதிகாரப் பகிர்வின் ஊடாக நாங்கள் தீர்மானங்களை எடுக்கவேண்டும். கொழும்பு அரசும் அதனை ஏற்றுக்கொண்டு எங்களுடன் பயணிக்க ஏதுவாக இருக்கவேண்டும்.

இந்தச் சட்டவரைவையும் எங்கள் மீது திணிக்கும் விடயமாகத் தான் நாங்கள் பார்க்கின்றோம். மாகாண முதலமைச்சர் சந்திப்பு தொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனாலும் எனக்கு அது தொடர்பான உத்தியோகபூர்வமான கடிதம் கிடைக்கவில்லை. குறித்த சந்திப்பு நடைபெறாது என்று தெரிவிக்கப்பட்டது. எது எவ்வாறு இருப்பினும் அபிவிருத்திச் சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தை நாங்கள் ஏற்கமாட்டோம் என்ற முடிவை எடுக்கின்றோம் - என்றார்.

அதன் பின்னர் கொழும்பு அரசின் குறித்த சட்ட வரைவுக்கு வடக்கு மாகாண சபை உடன்படவில்லை என்று அவைத் தலைவர் அறிவித்தார். (த-4-8)

## கார்த்திகை...

இதற்காகத் தமிழக மற்றும் நெடுந்தீவு பக்தர்கள் கச்சதீவுக்கு அழைத்து வரப்பட்டனர். கச்சதீவின் காட்டுப் பகுதியெங்கும் கார்த்திகைப் பூக்கள் மலர்ந்து காணப்பட்டன.

ஆலயத் திறப்பு விழா முடிந்து தமிழகம் திரும்பும்போது அவற்றைக் கொப்புக்களுடன் பிடுங்கிச் சென்றதைக் காண முடிந்தது. (த-5)

## யாழ்.நகரில்...

ஊடகங்களில் வெளியானது. இந்தத் தீர்ப்பில் சந்தேக நபர்கள் அனைவரும் குற்றமற்றவர்கள் என்று விடுதலை செய்யப்பட்டனர்.

தீர்ப்பு வெளியாகி சில நிமிடங்களில் யாழ். நகரப்பகுதியில் வெடிகள் கொளுத்தப்பட்டன. சில நிமிட நேரம் இந்த வெடிச் சத்தம் நீடித்தது. அதிகாலை வெடிஓசை கேட்டதால் நகரப் பகுதி பரபரப்பானது. உறக்கத்தில் இருந்த மக்கள் வெடிஓசையால் திடீரென்று விழித்தனர். எதற்காக வெடிகள் கொளுத்தப்பட்டன என்று அவர்களுக்குத் தெரியாததால் மக்கள் பரபரப்படைந்தனர். (த)

## கிழக்கு...

பொலிஸார் தெரிவித்தனர். கடலுக்குச் சென்ற மீனவர்கள் கரையில் பெரிய இயந்திரம் போன்றதொரு உருவம் கிடப் பதை அவதானித்துள்ளனர்.

அவர்கள் அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த களுவாஞ்சிக்குடி பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான குழுவினர் கடலில் கிடந்த பொருளைப் பார்வையிட்ட பின்னர் அது விமானப் பாகம் என உறுதிப்படுத்தினர்.

பின்னர் அவ்விடத்துக்கு கடற்படை மற்றும் விமானப்படையினர் வரவழைக்கப்பட்டு விமானத்தின் பாகம் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்டுள்ள விமானத்தின் பாகம் எந்த நாட்டுக்குரியது என அடையாளம் காண முடியாதுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், இதனை விமானப் படையினர் எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறினர் . (த-ய-46,47)

## 35 பேர் மீது...

இதுவரை 35 பேருக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டிருப்பதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

தமக்குக் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் 22 தீவிர விசாரணைகள் நடத்தப்பட்ட பின்னர் 65 விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபரின் ஆலோசனைக்காகச் சமர்ப்பிக்கப்பட்டன. அவரது அறிவுறுத்தலின் பிரகாரம் 35 பேருக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் கூறியது. (த-4)

## கச்சதீவு அந்தோனியார்...

ஆலயம் புதிதாக நிர்மாணிக்கப்படுவதற்காகக் கடந்த மே மாதம் அடிக்கல் நடப்பட்டது. கடற்படையினரால் இதன் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

யாழ். மறை மாவட்ட ஆயர், குரு முதல்வர், யாழ். மாவட்டச் செயலர், வடக்கு மாகாண ஆளுநர், கடற்படைத் தளபதி ஆகியோர் உலங்கு வானூர்தியில் வந்து இறங்கினர். காலை 8.30 மணிக்கு ஆலயத் திறப்பு விழா நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தபோதும், தமிழகப் பக்தர்கள் வருகை தராமையினால் சிறிது தாமதமாக ஆரம்பமாகியது.

விருந்தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டுக் கடற்படையின் இசை வரவேற்புடன் அழைத்துவரப்பட்டனர். பின்னர் யாழ்.ஆயர் நாடாவை வெட்டி ஆலயத்தைக் காலை 9 மணிக்குத் திறந்து வைத்தார். பின்னர் நினைவுக் கல் திரைநீக்கம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. முற்பகல் 9.20 மணியளவிலேயே தமிழகப் பக்தர்கள் வந்து சேர்ந்தனர். திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர், ஆலயத்தை நிர்மாணித்த கடற்படையினர் கௌரவிக்கப்பட்டனர். தமிழக பக்தர்களாலும், கடற்படைத் தளபதி, ஆளுநர், மாவட்டச் செயலர், வடக்கு மாகாண கடற்படைத் தளபதி ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

தமிழக மீனவர்கள் 100 பேர் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட போதும், 3 படகுகளில் 82 பேரே கலந்து கொண்டனர். இதேவேளை ஆலயச் சுற்றாடலில் புலனாய்வாளர்களின் அதிகரித்த பிரசன்னம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## பொருத்து...

அமைச் சின் கடிதத்தில் தலைப் பில் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அனுப்புபவரின் எந்தப் பதவி அடையாளமும் கையெழுத்தும் இல்லாமலே மேற்படி கடிதம் அனுப்பப்பட்டது.

நாடாளுமன்ற உறுப் பினர் மாவை.சேனாதிராசா, முன்னிர்மாணிக் கப்பட்ட வீட்டுத் திட்டத்தைப் பெற்றுக்கொள்ளும் பயனாளி 6 லட்சம் ரூபா செலுத்தவேண்டும். இதனை மறைத்து மீள்குடியேற்ற அமைச்சு விளம்பரப்படுத்தியிருந்தாகக் குற்றம் சுமத்தியிருந்தார்.

இது தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சின் கடிதத் தலைப்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

முன்னிர்மாணிக்கப்பட்ட வீட்டுத் திட்டத்துக்கு எல்லா மக்களும், அவர்கள் முன்னர் விண்ணப்பித்தோ அல்லது விண்ணப் பிக்காது இருந்தபோதிலும் இந்த வீடுகளைப் பெறுவதற்கு பொருத்தமானவர்கள்.

பயனாளிகள் வீடுகளைப் பெறுவதற்கு 6 லட்சம் ரூபா கொடுப்பனவு செய்யவேண்டும் என்று சில தரப்பினர் தவறான கருத்தைப் பரப்பி வருகின்றனர்.

வீடுகளைப் பெறுவதற்கு விரும்புவர்கள் ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணபத்தினை அனுப்பி வைக்க வேண்டும். தவறான தகவல்கள் மூலம் மக்களை பிழையாக வழிநடத்தக் கூடாது என்றார். (த-5)

## ஆளுநரின்...

ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்தார். ஆளுநரின் அதிகாரத்தைக் குறைப்பது தொடர்பில் வடக்கு மாகாண சபையில் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்த கருத்து குறித்துப் பதிலளிக்கும் போதே ஆளுநர் இவ்வாறு கூறினார்.

அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது:

ஆளுநர் தொடர்பில் வடக்கு மாகாண உறுப்பினர்கள் மாத்திரமல்ல எவரும் எதை வேண்டுமானாலும் தெரிவிக்கலாம். வடக்கில் மட்டுமல்ல தென்னிலங்கையிலும் இதே நிலைதான். மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு, மக்கள் பிரச்சினைகளைத் தெரிவிப்பதற்கான ஜனநாயக உரிமை உண்டு. அது பற்றி எனக்கு எந்த வருத்தமும் இல்லை - என்றார். (த-4,ரி)

## கச்சதீவு...

... தமிழகத்திலிருந்து வருகின்ற பக்தர்கள் இங்கு குடும்பங்களுடன் வந்து தங்கி நின்று சமைத்து, உணவு உண்டு, வழிபாடு நடத்தி, இளைப்பாறிச் செல்ல வேண்டும். அடுத்த ஆண்டுக்கான திருவிழாவில் இதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை வேண்டுகோள் விடுத்தார்.

கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில், தமிழக - நெடுந்தீவு பக்தர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

நல்லிணக்கத்தின் அடையாளமாக இந்த ஆலயம் இருக்கின்றது. கணவன் - மனைவிக்கு இடையில் சண்டை நடந்தது. இப்போது ஒற்றுமையாகச் செயற்பட முயற்சிக்கின்றோம். நல்லிணக்கம் மிகவும் கடினமானதுதான். இந்த ஆலயம் நல்லிணக்கத்தின் அடையாளமாக இருக்கின்றது. இந்தியாவில் இருந்து பக்தர்கள் வருகின்றனர். இலங்கையின் வடக்கில் இருந்து பக்தர்கள் வருகின்றனர். இலங்கையின் தென் பகுதியிலிருந்தும் பக்தர்கள் வருகின்றார்கள்.

தமிழக பக்தர்கள் வந்தார்கள், சென்றார்கள் என்றுதான் இதுவரை காலமும் இருக்கின்றார்கள். அடுத்த ஆண்டிலிருந்து-எதிர் வரும் கச்சதீவு திருவிழாவிலிருந்து, இதனை மாற்றவேண்டும். மனைவி தொலைக்காட்சி தொடர் நாடகத்துடன், கணவன் வேறு திசையில். நாம் எங்கே போய்க் கொண்டிருக்கின்றோம்.

இங்கே வந்து இளைப்பாறி ஆலய வழிபாடு நடத்திச் செல்ல வேண்டும். தமிழக மீனவர்கள் கச்சதீவு திருவிழாவுக்காக மேலதிகமாக ஒரு நாள் இங்கே தங்க வேண்டும். அதற்கு இந்திய - இலங்கை அரசுகள் ஏற்பாடு செய்யவேண்டும். தமிழக மீனவர்கள், இங்கே குடும்பங்களுடன் வந்து தங்கியிருந்து சமைத்துச் சாப்பிடவேண்டும். இளைப்பாறவேண்டும். மடுத் திருப்பதியில் நடைபெறுவதைப் போன்று இங்கே நடைபெறவேண்டும்.

அடுத்த ஆண்டு இங்கு இறங்குதுறை அமைக்கப்படும். அத்துடன் வசதிகளும் ஏற்படுத்தப்படும். தமிழகத்திலிருந்து வருபவர்களுக்கு உணவு ஏற்பாடுகளையும் நாம் வழங்கத் தயாராக இருக்கின்றோம் - என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜோசப்தாஸ் ஜெபரட்ணம், சண்டை பிடிப்பதை விட நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது கடினமானது. சண்டையிலும் தியாகங்கள் செய்ய வேண்டும். அதனை விடக் கூடிய தியாகத்தை நல்லிணக்கத்தில் செய்ய வேண்டும் - என்றார். (த)

## மாகாணத்தின்....

கிழக்கு, ஊவா மாகாண முதலமைச்ச[illegible] பங்கேற்றிருந்தனர். சந்திப்புத் தொடர்[illegible] பிரதமர் அலுவலகம் விடுத்த செய்திக் கு[illegible] பில் தெரிவிக்கப்பட்டதாவது:

அபிவிருத்திச் சிறப்பு ஏற்பாடுகள் சட்ட வ[illegible] வின் ஊடாகச் செய்ய எதிர்பார்க்கும் விட[illegible] கள் குறித்து இதன்போது மாகாண [illegible] லமைச்சர்களுக்குப் பிரதமர் விள[illegible] மளித்தார்.

இந்தச் சட்டவரைவின் ஊடாக மாகா[illegible] சபைகளின் அதிகாரங்கள் கொழும்பு [illegible] சுக்கு எடுத்துக்கொள்ளப்படாது. தே[illegible] அபிவிருத்திக்காக மாகாண சபைக[illegible] வினைத்திறன் மிக்கதாக்க இந்த [illegible] டிக்கை முன்னெடுக்கப்படுகிறது. மாகா[illegible] சபைகளுக்கு உரித்தான எந்த விடய[illegible] இந்த சட்டவரைவின் ஊடாக நடைபெ[illegible] என்று பிரதமர் ரணில் தெரிவித்தார்.

அதன்போது, தேசிய அபிவிருத்திச் [illegible] பாடுகளுக்காக மாகாண சபைக[illegible] சம்பந்தப்படுத்திக் கொள்வதைக் கொ[illegible] அடிப்படையில் மதிப்பளிப்பதாக முதல[illegible] சர்கள் தெரிவித்துள்ளனர். ஏனைய மாக[illegible] முதலமைச்சர்களுடன் பேச்சு நடத்தி[illegible] தொடர்பில் தீர்மானமொன்றை விரை[illegible] முன்வைப்பதாகவும் முதலமைச்ச[illegible] பிரதமரிடம் தெரிவித்தனர்.

இந்த யோசனைக்கு ஏற்றவாறான [illegible] தங்களை நாடாளுமன்றக் குழுநிலை[illegible] முன்வைக்க சந்தர்ப்பம் இருப்பத[illegible] பிரதமர் தெரிவித்தார் - என்றுள்ளது. ([illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திக்கு வெள்ளி



யாழ்ப்பாணம், டிசெ. 24
இளையோர், கனிஷ்ட, சிரேஷ்ட வீரர்களுக்கான தேசிய மட்ட பளுதூக்கலில் யாழ். மத்திய கல்லூரிக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்துள்ளது.
பொலநறுவையில் நடைபெற்றுவரும் ஆண்களுக்கான பளுதூக்கலில் யாழ். மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ். சிவப்பிரியன் 18 வயதிற்குட்பட்ட 62 கிலோ கிராம் எடைப் பிரிவில் 170 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-422)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 24

**ஐக்கியத்தின் கால்பந்தாட்டம்**

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடர் இன்று முதல் குறித்த கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவசக்தி அணியை எதிர்த்து சிறி அம்பாள் அணியும் தொடர்ந்து இடம்பெறும் ஆட்டத்தில் பொலிகை பாரதி அணியை எதிர்த்து கலட்டி ஐக்கியம் அணியும் மோதவுள்ளன.

**ஞானமுருகனின் கால்பந்தாட்டம்**

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் அணி மோதவுள்ளது.

**எவ்.ஏ. கிண்ணத் தொடர் வவுனியா லீக் ஆட்டங்கள்**

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசியமட்டத்தில் நடத்திவரும் எவ்.ஏ. கிண்ணத் தொடரில் வவுனியா லீக்கில் பதிவுசெய்துள்ள அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் வவுனியா சிறுவர் பூங்கா விளையாட்டுக் கழக மைதானத் தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வடதாரகை அணியை எதிர்த்து அல்இக்பால் அணி மோதவுள்ளது. தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஈஸ்வரன் அணியை எதிர்த்து சுப்பர் ஸ்ரார் அணி மோதவுள்ளது. பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மருதநிலா அணியை எதிர்த்து சக்தி அணி மோதவுள்ளது.
மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்கிஜிரா அணியை எதிர்த்து நியூபைட் அணி மோதவுள்ளது. (ம-23)



மிரோஜன்



அட்சகன்



மிதுன்

# தேசியமட்ட பளுதூக்கல் தொடர் பதக்கங்களை அள்ளியது இந்து.

யாழ்ப்பாணம், டிசெ. 24
இளையோர் கனிஷ்ட, சிரேஷ்ட, வீரர்களுக்கான தேசியமட்ட பளுதூக்கல் தொடர் பொலனறுவை பன்னாட்டு பளுதூக்கல் அரங்கில் நடைபெற்று வருகிறது. யாழ். இந்துக் கல்லூரிக்கு நேற்று முன்தினம் ஐந்து பதக்கங்கள் கிடைத்தன.
17 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் பி.மிரோஜன் 69 கிலோ எடைப் பிரிவில் 135 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும் 50 கிலோ எடைப் பிரிவில் வி.அட்சகன் 135 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் 85 கிலோ எடைப் பிரிவில் சி.மிதுன் 170 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், க.திசாந்த் 94 கிலோ எடைப் பிரிவில் 156 கிலோ பளுவ்வத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கு.சிறீசன் 94 கிலோவுக்கு மேற்பட்ட எடைப்பிரிவில் 160 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும் தமதாக்கினர். (ம-422)



திசாந்த்



சிறீசன்

# கரப்பந்தாட்ட இறுதியாட்டங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 24
யாழ். மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கம் பெண்கள் பிரிவு, ஆண்கள் ஏ, ஆண்கள் பி என மூன்று பிரிவாக நடத்திய தொடர்களின் இறுதியாட்டங்கள் அரியாலை சரஸ்வதி விளையாட்டரங்கில் இன்று இடம்பெறவுள்ளன.
மாலை 4 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் கோப்பாய் ஹரீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் தொடர்ந்து நடைபெறும் ஆண்களுக்கான பி பிரிவு போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகமும் இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஏ பிரிவுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.
(ம-422-23-108)

# டயமன்ஸ், சென். சேவியர் அரையிறுதிக்குள் நுழைவு

யாழ்ப்பாணம், டிசெ. 24
மனோகராவின் கால்பந்தாட்டத் தொடரில் வதிரி டயமன்ஸ் மற்றும் சென். சேவியர் என்பன அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.
மனோகராவின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இந்த இரு அணிகளும் பலப்பரீட்சை நடத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியின் 37 ஆவது நிமிடத்தில் டயமன்ஸின் பிரதீபன் முதல் கோலைப் பதிவுசெய்தார். அடுத்த நிமிடத்திலேயே சென். சேவியரின் கனியூட் பதிலடி கொடுத்தார். இரு அணிகளும் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தின. எனினும் எந்த அணியாலும் தனித்து ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. 1:1 என்று சமநிலை கண்டது ஆட்டம். புள்ளிகளின் அடிப்படையில் இரு அணிகளும் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன. (ம-108)





# மாகாண ஊர் சுற்றும் போட்டி; வவு., முல்லை. சம்பியனாகின

யாழ்ப்பாணம், டிசெ. 24
வடமாகாண ஊர் சுற்றும் போட்டியில் ஆண்கள் பிரிவில் வவுனியாவும் பெண்கள் பிரிவில் முல்லைத்தீவும் சம்பியனாகின.
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட 10 கிலோ மீற்றர் ஊர் சுற்றும் போட்டி நேற்று [illegible] இடம்பெற்[illegible] கலந்து கொண்ட மாவட்டங்கள் பெற்ற ஒட்டு மொத்த புள்ளிகள் அடிப்படையில் ஆண்கள் பிரிவில் வவனியா மாவட்டமும் பெண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்டமும் சம்பியனாகின.
ஆண்கள் பிரிவில் யாழ். மாவட்டம் இரண்டாம் இடத்தைப் பெற்றது. பெண்கள் பிரிவில் மன்னார் இரண்டாம் இடத்தைப் பெற்றது.
தனிநபர் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆண்கள் பிரிவில் கிளிநாச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ரி.அன்ரனி டெல்மன், எஸ். நிர்மல் மற்றும் ஆர். அனோஜன் ஆகியோர் முதல் மூன்று இடங்களையும் பெண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த எம்.மேரி ஜென்சி முதலாமிடத்தையும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.சாளினி இரண்டாமிடத்தையும் முல்லைத் தீவு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். விதுசனா மூன்றாமிடத்தையும் தமதாக்கினர். (ம-108)



# திருக்குடும்பத்துக்கு வெண்கலப் பதக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 24
இலங்கை பளுதூக்கு சங்கம் நடத்தும் கனிஷ்ட, சிரேஷ்ட, இளையோருக்கான தேசிய மட்ட தொடரில் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மட அணிக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.
பொலன்னறுவை பன்னாட்டு பளுதூக்கும் அரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற [illegible] திருக்குடும்ப கன்னியர் மட மாண[illegible] 53 கிலோ எடைப்பிரிவில் 78 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கம் வென்றார். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சச்சினைப் பின்பற்றி நான்
## அஸ்வின் பெருமிதம்

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் சிறந்த வீரர் விருது கிடைத்தமை தொடர்பில் தனது மகிழ்ச்சியை வெளிப் படுத்தினார் இந்திய அணியின் சகல துறை வீரரான அஸ்வின்.

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் சிறந்த வீரர் விருது கிடைத்திருப்பது மிகுந்த மகிழ்ச்சியை வழங்குகிறது. சச்சின், ராவிட் ஆகியோரைத் தொடர்ந்து ஆண் டின் சிறந்த வீரர் விருதை பெறுவது மிகப் பெரிய கௌரவம். சிறந்த டெஸ்ட் வீரர் கிடைத்தமை தொடர் பிலும் அளவற்ற மகிழ்ச்சி அடைந்துள்ளேன். எனது வெற்றிக்கு பின்னால் நிறையப் பேர் இருக்கிறார் கள் என அஸ்வின் மேலும் தெரிவித்தார். (ம)

# மீண்டும் தங்கப்பதக்கம் தனதாக்கினார் ஆசிகா


யாழ்ப்பாணம், டிசெ. 24

இலங்கை பளுதூக்கு சங்கம் நடத்தும் கனிஷ்ட, சிரேஷ்ட, இளையோருக் கான தேசிய மட்ட பளுதூக்கு தொடரில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி வீராங்கனை வி.ஆசிகா தங்கப்பதக்கத்தை தனதாக்கினார்.

பொலன்னறுவை பன்னாட்டு பளு தூக்கல் நிலையத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் இடம்பெற்ற சிரேஷ்ட பெண்கள் பிரிவு 63 கிலோ எடைப் பிரிவில் ஒட்டுமொத்தமாக 155 கிலோ பளுவைத் தூக்கி வி.ஆசிகா தங்கப் பதக்கத்தை வென்றார்.

முன்னதாக நடைபெற்ற இளை யோர் பிரிவு பளுதூக்கல் போட்டி யிலும் கலந்து கொண்ட ஆசிகா தங்கப் பதக்கத்தை வென்றி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-23)



## அரையிறுதியில் யங்ஹென்றிஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 24

ஞானமுருகனின் கால்பந்தாட்டத் தொடரில் இளவாலை யங்ஹென் றிஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டத்தின் மூன்றாவது நிமிடத்தில் யங்ஹென் றிஸின் முதல் கோலைப் பதிவு செய்தார் மது. அடுத்த 10 நிமிடங் களில் யூட் பதில் கோலைப் பதிவு செய்ய நிலமை 1:1 என்றானது. மாற் றங்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியின் 30 ஆவது நிமிடத்தில் நிதர்சன் பதிவுசெய்த கோலால் சென். மேரிஸ் முன் னிலை பெற ஆரம்பித்தது. அடுத்த பத்து நிமிடத்தில் தனேஸ் யங் ஹென்றிஸின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். 2:2 என்று முடிவடைந்தது ஆட்டம்.

சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் அரையிறுதியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடி வில் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது இளவாலை யங் ஹென்றிஸ் அணி. (ம-422-108)





## வயாவிளான் மத்திக்கு வெள்ளி, வெண்கலம்

யாழ்ப்பாணம், டிசெ. 24

தேசியமட்ட பளுதூக்கல் தொடரில் வயாவிளான் மத்திய கல்லூரிக்கு வெள்ளி, வெண்கலம் என இரு பதக் கங்கள் கிடைத்தன.

பொலன்னறுவையில் அமைந்துள்ள பன்னாட்டு பளுதூக்கும் நிலை யத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. கனிஷ்ட பிரிவு பெண்கள் பிரிவில் வயாவிளான் மத்திய கல் லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த லன்சிகா 53கிலோ எடைப்பிரிவில் 190 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், றெஜினா 75 கிலோ எடைப் பிரிவில் 92 கிலோ பளுவைத் தூக்கி வெண் கலப் பதக்கத்தையும் கைப்பற் றினர். (ம-23)


## கோக்லியின் புறக்கணிப்பு ஏன்?

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் கனவு டெஸ்ட் அணியில் கோக்லி இல்லாமைக்கு கார ணம் தெரிவிக்கப்பட் டது.

பன்னாட்டு கிரிக்கெட் சபை இந்த ஆண்டுக் கான தனது சிறந்த டெஸ்ட் அணியை (கனவு அணியை) நேற்றுமுன்தினம் அறி வித்தது. வோர்ணர், குக், வில்லியம்சன் (நியூசிலாந்து), ரூட் (இங்கிலாந்து), வோக்ஸ் (ஆஸ்திரேலியா), பரிஸ் ஸெவ் (இங்கிலாந்து), ஸ்ரோக்ஸ் (இங் கிலாந்து), அஸ்வின், கேரத், ஸ்ராக் (ஆஸ் திரேலியா), ஸ்ரெய்ன் (தென்னாபிரிக்கா) 12ஆவது வீரராக ஆஸ்திரேலிய அணி யின் சிமித் ஆகி யோர் அணியில் உள் ளனர்.

கோக்லியைவிட அடை வுகளில் பின்தங்கி யுள்ள ரூட் அணியில் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ள அதேநேரம் கோக்லி புறக்கணிக் கப்பட்டமை தொடர் பில் சில அதிர்வலை கள் தோன்றின. ஆனால் கோக்லியின் புறக்கணிப்புக்கு வீரர் களின் பெறுபேறு களை ஆராய்ந்த காலகட்டமே முக்கிய காரணம் என்று தெரி விக்கப்பட்டது.

இதன்படி 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் 14 ஆம் திகதி முதல் 2016 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 20 ஆம் திகதி வரையிலான காலகட்டமே கவனத் தில் கொள்ளப்பட் டது.



குறித்த காலகட்டத்தில் ரூட் ஆயிரத்து 272 ஓட்டங்களைக் குவித் துள்ளார். கோக்லி, ரூட்டை விட பின்தங்கி யுள்ளார். இதனா லேயே கோக்லி புறக் கணிக்கப்பட்டார்.

அதேநேரம் இந்த வருடம் செப்ரெம்பர் முதல் தற்போது வரை கோக்லி 967 ஓட்டங் களைக் குவித் துள் ளார். இதனால் அடுத்த கனவு அணி யில் அவருக்கு வாய்ப்புக் கள் அதிகம் என்று கரு தப்படுகிறது. (ம)

## கொக்குவில் இந்துவுக்கு பளுதூக்கலில் தங்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 24

இலங்கை பளுதூக்கு சங்கம் நடத்தும் கனிஷ்ட, சிரேஷ்ட, இளையோருக்கான தேசிய மட்ட பளுதூக்கல் தொடரில் கொக்குவில் இந்துவுக்கு தங்



கப்பதக்கம் கிடைத்தது.

பொலன்னறுவை பன்னாட்டு பளுதூக்கல் நிலையத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற கனிஷ்ட பிரிவு ஆண்களுக்கான போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் மனோஜன் 94 கிலோ எடைக்கு மேற்பட்ட பிரிவில் 163 கிலோ பளுவைத் தூக்கி தங்கப்பதக்கத்தை வென்றார். (ம-23)

# அடுத்த ஆஷஸ்வரை அலிஸ்டரே தலைவர்

அடுத்த ஆஷஸ் தொடர் வரை அலிஸ்டர் குக்கே இங்கிலாந்தின் தலைவராகச் செயற்பட வேண்டும் என்று ஆதரவுக் குரல்கள் வலுக்க ஆரம்பித்துள்ளன.

இந்தியாவுக்கு அண்மையில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட இங் கிலாந்து அணி ஐந்து ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை 0:4 என்று இழந்தது. இந்தப் படுதோல் வியால் குக்கின் தலைமைத்துவம் பறிபோகும் என்று எதிர்பார்க்கப் பட்டது. இதற்கேற்ப குக்கும் தலை மைத்துவத்தில் இருந்து விலகுவது தொடர்பில் சில கருத் துக்களைப் பகிர்ந்தி ருந்தார். ஆனால் அடுத்தஆஷஸ்தொடர் வரை அவர் தலை வராகத்தொடரவேண் டும் என்று வலியுறுத் தப்படுகிறது. இந்தி யாவுக்கு எதிராக 0:4 என படுதோல்வியை சந்தித்தது மோசமான விளைவுதான் என் றாலும், வீரர்களின் அறையில் எந்த சல



சலப்பும் இல்லை. அதே போல் அணி நிர்வாகம் குக்கைஆஷஸ்தொடர்வரை நீடிக்க முடிவு செய்துள் ளது. அணியின் மற்ற வீரர்களின் ஆதரவு அவ ருக்கு இருக்கிறது என் பதும் எங்களுக்குத் தெரி யும். அவர் ஒரு சிறந்த வீரர். அதேபோல் மிகவும் பிரபலம் வாய்ந்த தலை வர் என இங்கிலாந்தின் தலைமைப் பயிற்சியா ளர் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோக்லியின் தலைமைத்துவம் வெற்றிக்கு முக்கிய காரணம்



இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி கைப்பற்றுவதற்கு கோக்லியின் தலைமைத்துவம் முக்கிய காரணமாக அமைந்தது என்று தெரிவித்துள்ளார் இலங்கை அணியின் முன்னாள் வீரரும் தற்போதைய தலைமைத் தேர்வாளருமான சனத் ஜெயசூரிய.

பாட்னாவில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே சனத் இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய அணி அண்மைக்காலமாக சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்துகிறது. குறிப்பாக இளம் வீரர்களைக் கொண்ட இந்திய டெஸ்ட் அணி தனது முழுமையான பலத்தை ஒவ்வொரு ஆட்டத்திலும் வெளிப்படுத்துகிறது. குறிப்பாக கோக்லி ஒரு தலைவராகச் சிறப்பாகச் செயற்படுகிறார். துடுப்பாட்டத்தில் சிறப்பாகச் செயற்படும் அவர் தனது தலைமைத்துவத்தையும் நிரூபித்து வருகிறார். பந்துவீச்சாளர்களை அருமையாகப் பயன்படுத்துகிறார். ஆடுகளத்துக்கு ஏற்ப அணித்தெரிவை சிறப்பாகச் செய்கிறார். இது ஒரு தனித்திறமை. இதன் அடிப்படையில் இங்கிலாந்துக்கு எதிராக தொடரை வெல்லுவதற்கு கோக்லியின் தலைமைத்துவம் முக்கியமானது என்று சனத் மேலும் தெரிவித்தார்.

முன்னதாக, இந்திய அணி தலைசிறந்த திறனில் உள்ளது என்று சனத் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது. (ம)

# டெஸ்ட் நாளை மறுதினம்

இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் நாளைமறுதினம் ஆரம்பமாக வுள்ளது. குறித்த தொடருக்காக இரு அணிகளும் கடந்த சில நாள்களாக தீவிர வலைப்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. (ம)





# தரப்படுத்தலில் முதலிட அந்தஸ்துடன் ஆண்டை நிறைவுசெய்தது ஆர்ஜென்ரீனா

பன்னாட்டுத் தரப்படுத்த லில் முதலிட அந்தஸ் துடன் நடப்பு வருடத்தை நிறைவுசெய்தது மெஸ்ஸியின் தலைமையி லான ஆர்ஜென்ரீனா.

கடந்த ஏப்ரல் மாதம் பெல்ஜியத்திடமிருந்து முதலிடத்தைப் பறித்துக் கொண்ட ஆர்ஜென்ரீனா, பிற்பட்ட காலங்களில் சில தோல்விகளைச் சந்தித்தாலும் தனது இடத்தை தொடர்ந்தும் தக்கவைத்தே வந்தது. இந்த நிலையில் முதற்றர அணி என்ற அந்தஸ்துடன் அந்த அணி நடப்பு வருடத்தை நிறைவு செய்வது உறுதியானது.

ஆர்ஜென்ரீனாவுக்கு அடுத்த இடத்தில் பிரேசில் உள்ளது. ஜேர்மனி மூன்றாவது இடத்திலும் பெல்ஜியம் நான்காவது இடத் திலும் சிலி ஐந்தாவது இடத்திலும் உள்ளன. ஆறு முதல் பத்து வரை யிலான இடங்களில் முறையே கொலம்பியா, பிரான்ஸ், போர்த்துக்கல், உருகுவே, ஸ்பெய்ன் ஆகிய அணிகள் உள்ளன. நடப்புவருடத்தில் நடைபெற்ற முக்கியத் தொடர்களில் ஒன்றான கோப்பா அமெரிக்காத் தொடரை (தென்னபிரிக்க நாடுகளுக்கு இடையிலான தொடர்) மெஸ்ஸி யின் தலைமையிலான ஆர்ஜென்ரீனா இழந்தது. பின்னர் நடைபெற்ற உலகக் கிண்ணத் தகுதிகாண் ஆட்டங்கள் சிலவற்றிலும் தோல்வியைச் சந்தித்தது. இதனால் ஆர்ஜென்ரீனா தரப்படுத்தலில் சறுக்கலை எதிர்கொள்ளும் என்று கருதப்பட்டது. எனினும் அந்த அணி முதலிட அந்தஸ்துடன் ஆண்டை நிறைவு செய்தமை பலராலும் பாராட்டப்படுகிறது. (ம)

முதலாம் பக்கத் தொடர்ச்சி

## குற்றவாளிகள்....

எடுத்துக்கொள்ளப்பட்டது.

இலங்கை நீதித்துறை வரலாற்றில் முழுவதுமாக பட்டதாரிகள் அடங்கிய சிறப்பு ஜூரிகள் சபையொன்று நியமிக்கப்பட்டு வழக்கு விசாரணையொன்று செவிமடுக்கப்பட்டமை இதுவே முதற்தடவையாகும் என நீதித்துறை வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

நேற்றுமுற்பகல் 10.40 இற்கு வழக்கு விசாரணை ஆரம்பமாகியபோது 2 ஆவது பிரதிவாதியான பிரசாத் ஹெட்டியாராச்சி, 3 ஆவது பிரதிவாதியான காமினி செனவிட்ன, 4 ஆவது பிரதிவாதியான பிரதிப் சமிந்த ஆகிய கடற்படை புலனாய்வு அதிகாரிகள் மன்றில் முன்னிலையாகினர்.

வழக்கின் ஆரம்பக்கட்டமாக அரச மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணிகள் தமது தொகுப்புரைகளை முன்வைத்தனர். இதன்படி, முறைப்பாட்டாளர் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்த சிரேஸ்ட பிரதி சொலிட்டர் ஜெனரல் ரோஹந்த அபேயசூரிய முற்பகல் 10. 40 இலிருந்து மதியம் 2.05 வரை தொகுப்புரை வழங்கினார்.

ரவிராஜ் கொலை வழக்கு குறித்து ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பு, சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியம் ஆகியன ஆறு மாதங்களுக்கு ஒருதடவை கேள்வி எழுப்பியிருந்த விடயத்தைச் சுட்டிக் காட்டிய அவர், அரசதரப்புச் சாட்சியாகமாறிய முதலாவது சாட்சியாளரான பிரத்தி விராஜ் மன்ம்பேரியின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் விரிவாகக் கருத்துகளை முன்வைத்தார்.

பாதிக்கப்பட்ட நடராஜா ரவிராஜின் மனைவி சார்பில், சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தனது தெளிவுபடுத்தலைச் சுமார் 30 நிமிடங்கள் ஜூரிகள் சபையின் முன்னால் வழங்கினார். குறித்தவழக்கில் மறைந்திருக்கும் நபர்கள் வெளிக்கொணரப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

இதையடுத்து 2ஆவது சந்தேக நபரான பிராத் ஹெட்டியாராச்சியின் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையான யுரான் லியனகே சுமார் ஒரு மணிநேரம் தொகுப்புரை வழங்கினார்.

3ஆவது மற்றும் 4ஆவது சந்தேக நபர்களின் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்த சிரேஸ்ட சட்டத்தரணி அனஜ பிரேமரட்ன, இரண்டரை மணிநேர தொகுப்புரையை வழங்கினார்.

ஐ.நா., சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியம் ஆகியவற்றின் கடிதம் பற்றி பேசினார்கள். ஆனால், மத்திய வங்கிமீதான தாக்குதல், கட்டுநாயக்க மீதான தாக்குதல் குறித்து எவரும் கரிசனை கொள்வதில்லை எனச் சுட்டிக்காட்டியதுடன், அரச தரப்புச் சாட்சிகளின் நம்பகத் தன்மையைக் கேள்விக்குட்படுத்தினார். அத்துடன், நாட்டுக்காகச் சீருடையுடன் கம்பீரமாகச் சேவையாற்றிய அதிகாரிகள் இன்று குற்றவாளி கூண்டில் நிற்கின்றனர். அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். ஆகவே, மனச்சாட்சியின் பிரகாரம் தீர்ப்பு வழங்குமாறு ஜூரிகளிடம் வேண்டுகோள்விடுத்தார்.

இவ்வாறு தொகுப்புரை வழங்கப்பட்டதையடுத்துமேல் நீதிமன்றத்தின் நீதிபதி மணிலால் வைத்தியதிலக, சாட்சிகள் மற்றும் சாட்சிகள் மீதான மறுப்பு கேள்விகள் உள்ளிட்டவற்றறை சுட்டிக் காட்டி ஜூரிகளும் இரண்டரை மணிநேரம் விளக்க உரையை வழங்கினார்.

ஜூரிகளுக்குரிய அறைக்குச்சென்று-தேவையான ளவு நேரத்தை எடுத்து முடிவை அறிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

தமக்குரிய அறையில் கூடிய ஜூரிகள் சுமார் ஒரு மணிநேரத்தின் பின்னர் முடி வொன்றுடன் மன்றுக்குள் வந்த னர்.

" முடிவை தனித்தனியாக அறிவிக்கப்போகின்றீர்களா என நீதிபதி வினவினார்.

இல்லை. ஏகமனதாக அறிவிக்கவுள்ளனர் என்று ஜூரிகள் சபையின் தலைவர் கூறியதுடன், பிரதிவாதிகள் கூண்டில் நிற்கும் சந்தேக நபர்கள் குற்றமற்றவர்கள் என்று தமது சபையின் முடிவை அறிவித்தார்.

இதையடுத்து, 5ஆவது, 6 ஆவது சந்தேக நபர்கள் குறித்த ஜூரிகள் சபையின் முடிவு என்னவென பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான சட்டதரணிகள் வினவினர். ஜூரிகளுக்குரிய அறைக்குச்சென்று இது பற்றியும் தெளிவான முடிவொன்றை அறிவிக்குமாறு நீதிபதி கூறினார்.

நள்ளிரவு 12.10 இற்கு நீதிமன்றத்துக்குள் வந்த ஜூரிகளின் சார்பில் அதன் தலைவர், அவர்களும் நிரபராதிகள் என அறிவித்தார்.

இதையடுத்து, 2,3,4,5,6 ஆகிய சந்தேகநபர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகையில் தாக்கல் செய்யப்படிருந்த சகல குற்றச்சாட்டுகளிலிருந்தும் அவர்கள் முற்று முழுதாக விடுதலை செய்யப்படுகின்றனர் என்று நீதிபதி தீர்ப்பு வழங்கினார். இத்துடன், குறித்த ஜூரிகள் சபையும் கலைகின்றது என அவர் அறிவித்தார்.

நீதிபதியின் தீர்ப்பையடுத்து பிரதிவாதிகள் கூண்டில் இருந்த சந்தேக நபர்கள், ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சட்டத்தரணி நடராஜா ரவிராஜ் 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி நாரஹேன்பிட்டிய மாத வீதியிலிருந்து எல்விட்டிகல மாவத்தைக்குச் செல்லும் வழியில் அவரும், அவரது பாதுகாப்பு உத்தியோகத்தரான லக்ஷ்மன் என்பவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான வழக்கு விசாரணைக்கு நவம்பர் 22ஆம் திகதி விசேட ஜூரிகள் சபை நியமிக்கப் பட்டது. (ஐ)

வேலைவாய்ப்பு

யாழ். நகரில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு கீழ்வரும் வெற்றிடங்கள் உள்ளன.
ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ளவும்.
*கணினி தட்டெழுத்தாளரும், அலுவலக உதவியாளரும்
*அனுமதி அட்டை பரிசோதகரும், வகுப்பறை பராமரிப்பாளரும்
தொடர்பு - 077 248 7774

# தரப்படுத்தலில் முதலிடம் இதுவே சிந்துவின் கனவு

பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடம் பிடிப்பதே தனது கனவு என்று இந்தியாவின் நட்சத்திரப் பூப்பந்தாட்ட வீராங்கனையான பி.வி. சிந்து தெரிவித்தார்.

இந்தியாவின் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஆண்டு எனக்கு அற்புதமாக இருந்தது. ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்றது மிகப்பெரிய சாதனை. இதனால் எனது கனவு நனவானது. ஒட்டுமொத்த இந்தியர்களின் கனவு அது. அடுத்த ஒலிம்பிக் தொடர் வரையும் அதற்கு அப்பாலும் எனது பதக்கம் பேசும். தற்போது பன்னாட்டுத் தரப்படுத்தலில் ஆறாவது இடத்தில் உள்ளேன். எனது அடுத்த முக்கிய இலக்கு முதலிடத்தைப் பிடிப்பதென்பதே. கரோலினா மரின் போன்ற உலக ஜாம்பவான்களை எதிர்த்து இந்த அடைவை எட்டு வது மிகவும் கடினமானது. இருப் பினும் சாதிக்கலாம் என்ற நம்பிக்கை உண்டு. நான் தொடர்ந்து கடினமாக உழைக்க வேண்டும். ஏனென்றால் என் மீது பெரும் பொறுப்பு இருக்கிறது. தற்போது அடைந்திருக்கும் நிலையை தக்க வைப்பதும் மிகப்பெரிய சவாலே என சிந்து மேலும் தெரிவித்தார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது